Octo. 1954
Vol. 1
No. 11

53

திரட்டு

சிறந்த மாதாந்திர கட்டுரை பொக்கிஷம்

REGISTRAR OF ...
OCT 1954
MADRAS

விஜய ஸ்ரீ புரட்டாசி—ஐப்பசி

இந்த இதழில்

★ போதும், போதும் பட்டணவாசம்!
(சிறு தொடர்கதை—2-ம் பாகம்)
★ சீரழிக்கும் சித்திரங்கள்
★ ராவணன் ராமனுக்கு கற்பித்தது
★ கொலேகார சிகரெட்டு
★ சிரிப்பிலும் அபாயம்
★ நித்திரையை தராது மாத்திரை
★ ஸலேமிரா (காளிதாஸர் கதை)

இன்னும் பல அரசியல், சமூக, விஞ்ஞான, சுகாதாரக்கட்டுரைகள், கதைகள், பிரபஞ்ச விநோதங்கள்.

128 பக்கங்கள்

8 அணா

53
4.54
198758

SAMSONS DRESSES

ஸாம்ஸன்ஸ் ரெடிமேட் ஆடைகள்

★

சிறந்த துணி வகைகளில், நாகரீகமான பாணியில் நீடித்த உழைப்புக்காக தயாரிக்கப்படுகின்றன.

★

ஆடவர், பெண்டிர், சிறுவர் யாவருக்கும் தேவையான ஆடை வகைகள் யாவும் கிடைக்கின்றன.

★

பெங்களூர் டிரஸ்
மானுபாக்சரிங்
கம்பெனி,
12, லால் பாக் ரோட்,
பெங்களூர் - 2.



உலகத்திலுள்ள இதர மைகளுக்கு ஓர் அறைகூவல்

சுலேகா

பௌண்டன் பேனா இங்க்
("எஸ்-100" சால்வெண்ட் கூடியது)

தரத்தில் உயர்ந்தது

உயர் ரக பொருள்களை வாங்கி எமது
சுதேசியை பெரிதும் ஆதரியுங்கள்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 OCT 1954
MADRAS

SULEKHA WORKS LTD.

SULEKHA PARK :: CALCUTTA - 32

Branches : **Delhi - Bombay - Madras**

மதராஸ் ஆபீஸ்: 5, ஸ்டிரிங்கர் தெரு, சென்னை - 1.

SREE AMBIKA EMPORIUM

DASARPURAM THIRUNINDAYUR P. O
(TINNANUR R. S.) S. R.

Manufacturers of :—

B & C Ready-made Garments & Fancy Bags

Sole Proprietor :
M. K. RANGANATHAN

CONSULT

K. M. S. Press

1/17-C, DINROZE ESTATE
MOUNT ROAD, MADRAS-2

FOR ALL HIGH CLASS
JOB & BOOK WORK
IN ENGLISH & TAMIL

திரட்டு

பொருளடக்கம்

அக்டோபர் 1954

நாம மகிமை	...	5
சமூகத்தை அழிக்கும் விஷப்பூச்சி	...	8
மயானவாசிக்கு மதுமாவதி	...	12
குட்டி நாடகமேடை	...	15
மரம் செடி கொடிகள் வளர்த்திடுவோம்	...	16
வெள்ளியம்பலம்	...	17
மழைக்கு மலைக்காத மதி	...	19
கேட்டது கிடைத்தது	...	20
சிரிப்பிலும் அபாயம்	...	21
சீரழிக்கும் சித்திரங்கள்	...	22
மூன் றக்ஷரம்	...	28
பாகவத உதயம்	...	30
அன்பால் அரசாண்ட அசோகர்	...	32
உத்தம நண்பன்	...	33
வனம் வளர்ந்தால் வானம் பொழியும்	...	34
கொலைகார சிகரெட்டு	...	36
போதாத காலம்	...	39
அஸ்ஸாமின் அவதி	...	40
பஞ்ச கனிகள்	...	43
ராவணன் ராமனுக்கு கற்பித்தது	...	45
தன்னடக்கமே யோகம்	...	49
இவரும் ஒரு கவி	...	50
மண்ணிலும் மருந்து	...	53
தந்தியில்லாத் தந்தி	...	54
ஓசையால் வரும் நாசம்	...	56

விலங்குகளைச் சர்க்கார் வாழ்விக்கவேண்டும்	...	58
டாக்டர்கள் இல்லாத ஆஸ்பத்திரிகள்	...	59
ஒரு நாள்	...	60
உயிர் நாடி	...	65
சுண்டைக்காய், வற்றல்	...	66
அணைக்கட்டே ஆலயம்	...	67
நற்செய்தியே நன்மருந்து	...	68
நித்திரையை தராது மாத்திரை	...	70
கம்பிமீது கலியாணம்	...	73
விருப்பப்படியே வெயிலும் மழையும்	...	74
பலியாகாத எலி	...	76
பாலைப்பொழியும் மரம்	...	77
ஸஸேமிரா	...	78
வயிற்றுக்குள் நடக்கும் நிகழ்ச்சிகள்	...	84
அமுத மொழிகள்	...	85
ஈழவருக்கு ஈசன் அளித்த நேசன்	...	86
உங்களுக்குத் தெரியுமா	...	89
மனிதன் மரித்தாலும் ஆவி ஆறுதல் அளிக்கும்	...	90
அளவற்ற செலவாலும் அணு அனுகூலமில்லை	...	94
கண்ணுன செய்திகள்	...	96
போதும், போதும் பட்டணவாசம்!	...	97
மனித ஜோடிகள்	...	114
மலேயா காட்டுராஜா	...	118
மண்ணை விற்றுப் பொன்னைப் பெறுவோர்	...	122
புத்தகம் படிப்பதிலும் ஒரு சாதனை	...	127

தமிழ்நாடு ... நூலகம்
198752
சென்னை-600 008

"THIRATTU" Tamil Monthly Digest. Vol. 1. No. 11

திரட்டு

சிறந்த மாதாந்திர கட்டுரை போக்கிஷம்

அக்டோபர் ○ 1954

நாம மகிமை

வேண்டுமென்றே சிரமப்படாமலும் தனக்கே தெரியாமலும் அநேக மனிதர்களுக்கு காந்திஜி நற்செய்கைகளுக்கு ஒரு தூண்டுதலா யிருந்தார். இதற்கு உதாரணமாய், உத்தரப்பிரதேச கவர்னர் முன்ஷிஜி கீழ்வரும் சம்பவத்தைக் கூறுகிறார்:-

1932-ஆம் ஆண்டில் முன்ஷிஜி பீஜப்பூர் சிறையில் ஒரு அரசியல் கைதியா யிருக்கும்போது, இவரை அங்கிருந்த அரசியல் கைதிகளுக்கு மேற்பார்வையாளரா யிருக்குமாறு சிறை அதிகாரி கேட்டுக்கொண்டார். இருநூறு பேர்கள்கொண்ட அரசியல் கைதிகள் கூட்டத்தைக் கண்காணிப்பது சற்றுச் சிரமமான காரியமாகத்தானிருந்தது. ஏனென்றால் சிலர் மிகக் குறும்புக்காரர்களாக இருந்தார்கள்.

வட இந்தியாவைச் சேர்ந்த ஒரு வாலிபன் இருபத்தைந்து வயதடைந்தும் தன் சிறுபிள்ளை விளையாட்டைவிடவில்லை. பிறரைத் துன்புறுத்துவதற்கு இவன் சகஜமாகக் கையாண்ட வழி யென்னவென்றால் மாடு முட்ட வரு

வதுபோல் தலையைக் குனிய வைத்துக்கொண்டு மற்றொரு வர் கால்களிடையே நுழைந்து அவரைத் தூக்கி எறிந்து விடுவான். அவனை எவ்வளவோ தடவை மிகவும் விநய மாய்க் கேட்டுக்கொண்டும் இந்தச் செய்கையை அவன் விடவில்லை. இந்தக் குறும்பினால் எத்தனையோ அரசியல் கைதிகள் கீழே விழுந்து காயமடைந்திருக்கின்றனர்.

கண்காணிப்பு என்றால் கலவரம் தோன்றாமல் பாது காப்பதுதானே முக்கியமான வேலை. இந்தக் கைதியின் குறும்பினால் என் வேலை மிகவும் சிரமமாகி விட்டது.

கடைசியில் ஒருதினம் இவனை என்னிடம் அழைத்து, "உன்னைப்பற்றி நான் காந்திஜிக்கு எழுதப்போகிறேன்" என்று சொன்னேன். அரசியல் கைதியான இவனுக்கு காந்திஜியைப் பற்றிச் சற்று பயமும் மதிப்பும் இருக்கு மென்று எண்ணித்தான் இவ்வாறு கூறினேன்.

"என்னைப்பற்றி காந்திஜிக்கு எழுதினால் அவர் என்னை என்ன செய்து விடுவாராம்" என்று திருப்பிக் கேட்டான், இந்தக் குறும்புக்கார வாலிபன்.

"அவர் கோரிக்கைக்கிணங்கி, அவர் பெயரைச் சொல் லிக்கொண்டு சிறைக்கு வந்த வாலிபனின் குறும்பை நினைத்து நொந்துகொண்டு "காந்திஜி உண்ணாவிரதமிருப் பார்" என்று கூறினேன்.

"உண்ணாவிரதமா? எவ்வளவு தினங்களுக்கு?"

"உன் குறும்பை நீ நிறுத்தும் வரையிலும்..."

"நான் நிறுத்தாவிடில்?"

"நிறுத்தாவிட்டால், காந்திஜி உயிர் போகும் வரை யிலும் உண்ணாவிரதமிருப்பார்."

இந்த பதிலைக் கேட்டவுடன் வாலிபன் தன் அறைக்கு ஓடிவிட்டான். இந்த சம்பாஷணைக்கு ஏதாவது பலனிருக் குமோவென்று அப்போது எனக்குத் தெரியவில்லை.

அடுத்த தினம் காலையில் அந்த வாலிபன் என்னைத் தேடி வந்தான். அவன் முகம் களையிழந்திருந்தது. இரவெல்லாம் எதைப்பற்றியோ கவலைப்பட்டுக் கொண்டிருந்தானென்று எனக்குத் தோன்றியது.

மிக விநயமாய், தீனக்குரலில் "தயவு செய்து நீங்கள் காந்திஜிக்கு என்னைப்பற்றி எழுதாதீர்கள்; இனிமேல் நான் குறும்பு செய்யமாட்டேன் என்று உங்களுக்குச் சபதஞ் செய்து தருகிறேன்!" என்றான்.

இது என்ன ஆச்சரியம்! காந்திஜிக்கும் இவனுக்கும் என்ன சம்பந்தம்? காந்திஜியைக் கண்ணாலும்கூடக் கண்டிராத இந்த வாலிபன் காந்திஜியின் நாமத்திற்கும் அவர் பெற்றிருந்த புகழுக்கும் இவ்வாறு இணங்க வேண்டுமானால் அந்த மகாத்மாவின் சக்திக்கு எல்லையுமுண்டோ?

"கையிலே ஜெபமாலை, கக்கத்தில் கன்னக்கோல்" என்றிருப்போர்களுக்கு ஆண்டவன் அருள் எவ்வாறு கிட்டும்?

சமூகத்தை அழிக்கும் விஷப்பூச்சி

●

அறிவு படைத்த மனிதன் முயல்கிறான். முயற்சிகளில் வெற்றி பெறுகிறான். வெற்றி அவன் உள்ளத்தைப் பூரிக்க வைக்கிறது. அந்தப் பூரிப்பிலே ஓர் அகம்பாவம் பிறக்கிறது. அந்த அகம்பாவம் அறிவை மயக்குகிறது. மனிதன் மனிதத் தன்மையை இழக்கிறான்!

'கடவுளே! உன் அருளை நம்பிச் செயலில் ஈடுபடுகிறேன். எனக்கு வெற்றி கிட்ட வேண்டும்'—இது செயலில் புகும்போது மனிதன் செய்யும் பிரார்த்தனை. வெற்றி கிட்டியவுடன் தன் ஆற்றலை எண்ணிப் பூரிக்கிறபோதுகூட மனிதனின் உள்ளத்தில் தெய்வத்தின் நினைவு இருக்கிறது. வெற்றி மேல் வெற்றி, பூரிப்பின் மேல் பூரிப்பு என்கிற நிலை ஏற்படுகிறபோதுதான் அந்த நினைவு அழியத் தொடங்குகிறது. அது அழிகிறபோதே அதற்குப் பதிலாக அந்த இடத்திலே அகம்பாவ வித்து ஊன்றிக் கொள்கிறது. அகம்பாவம் அழிவுச் சக்தி; அந்தச் சக்தி உள்ள இடத்திலே அருள் மயமான ஆண்டவன் இருக்கமாட்டான்.

மனிதன் கடவுளை மறந்ததனால் கடவுளுக்கு நஷ்டம் எதுவும் இல்லை. 'அநியாயமாக மனிதன் பாழாகிறானே!' என்று கடவுள் அநுதாபப்பட இயலாது. தன்னை நினைந்து வழிபடும் அன்பர்களுக்கு அருளவே அவனுக்கு அவகாசம் பற்றாது; அழிவைத் தேடிக்கொள்கிற அற்பர் விஷயந்தானா அவனுக்குப் பொருட்டு?

மனித தர்மப்படி இந்த வாதம் பொருத்தமானதுதான். ஆனால் கருணாமூர்த்தியாகிய கடவுள் இந்த வாதத்திற்குள் அடங்கினவன் அல்லன். குறுகின மனித தர்மத்திற்கும் பரந்த தெய்வ சித்தத்திற்கும் இடையே இதுதான்

வித்தியாசம். ஆகவே ஆண்டவன் வழுக்கி விழுகிற மனிதனை அப்படியே விழட்டும் என்று விட்டுவிடுவதில்லை; வழுக்கி விழுந்து பாழாகட்டும் என்று எண்ணுவதில்லை. இயன்றவரையில் பல வழிகளாலும் சிறு குழந்தைகளைப் பெரியவர்கள் நற்புத்தி புகட்டிச் சீர்திருத்துவதே போலச் சீர்திருத்த முயல்கிறான்.

வாழ்க்கை ஒரு சகடம். அதன் சுழற்சியிலே இன்ப துன்பங்கள் மாறி மாறி வருகின்றன; கலந்து வருகின்றன. 'அனைத்தும் அவன் செயல்' என எண்ணும் பண்பைப் பெறாதவர், ஆரம்ப காலத்தில் மட்டும் கடவுட் சிந்தனையைப் பெற்றிருந்தவர், வெற்றி கிட்டியபோது கடவுள் செயலைப் போற்றியது போலவே இடர் வந்த காலத்தும், 'ஐயனே, இடர் போக்கி அருளல் வேண்டும்' என இறைஞ்சுகின்றனர். அந் நிலையையும் கடந்தவரோ? வெற்றி தம் ஆற்றலில் கிட்டியது போலவே இடர்களும் தமது சிறு தவற்றால் நேர்ந்தவை எனக் கருதுகின்றனர்; அவற்றைத் தாமே தம் ஆற்றலால் களைந்துவிட முடியும் என்றும் எண்ணுகின்றனர். கடவுளை அடியோடு மறந்த நிலை அது.

கடைசி வரையில் கடவுளின் கருணை தொடர்கிறது. கடைசிவரையில் அதை எண்ணிப் பாராத மனிதனைத் தான் கடவுள் கைவிடுகிறார். மிகுந்த துர்ப்பாக்கியசாலி களுக்கே அந்நிலை கிட்டும்.

'பகவானே! அறிந்தோ அறியாமலோ நான் செய்த பிழைகளை யெல்லாம் பொறுத்தருளவேண்டும். இப்போது எனக்கு ஏற்பட்டிருக்கும் இடரைப் போக்கி நலந்தர வேண்டும்' என்று இடர் வந்தபோது மட்டும் கடவுளை நினைந்து பிறகு மறந்து விடும் மனிதனும் இருக்கிறான். இது இடைக்கால நிலை. கடவுள் கோர்ட்டில் இவனுக்கும் மன்னிப்பு உண்டு; அருளுங்கூட உண்டு.

கடவுளை நினைந்து மறந்தவர், இடையிடையே நினைப் பவர், இடர் வந்தபோது மட்டும் வேண்டுபவர் அனைவருக் கும் கடவுளின் மன்னிப்பு உண்டு; அருள் உண்டு. 'கடவுளே இல்லை; அனைத்தும் இயற்கை; மனிதனே கடவுள்' என்று வாதிப்பவர், அந்த வாதத்திற்குப் பலம்

தேடிப் படை திரட்டி நாஸ்திகம் பரப்புபவர் ஆகியவருக்கும் கூடக் கடவுளின் மன்னிப்பும் அருளும் கிட்டலாம். ஆனால் ஒருவனுக்கு மட்டும் ஆண்டவனின் மன்னிப்போ, அருளோ கிட்டவே கிட்டாது. அது மட்டுமா? அந்த ஒருவன் ஆண்டவனின் கோபத்திற்கும் பாத்திரமாகிறான். அவன் யார்?

பகிரங்கமாகக் கடவுளை வழிபட்டுக்கொண்டே அந்தரங்கத்தில் அட்டூழியங்களைக் கூசாமல் செய்பவனே அவன். வெளியுலகம் அவன் பக்தி கண்டு பிரமிக்கும். தேவதூதனாகக் கருதிக் கையெடுத்துக் கும்பிட்டு மரியாதை செய்யும். 'கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு.' பக்தி என்னும் போர்வைக்கும் அந்தச் சிறப்பு உண்டு. ஒருநாள் அந்தப் போர்வை கிழியலாம்; விலகலாம்; வெளியுலகம் உள்ளே எக்காளமிடுகிற போலியைக் கண்டு கொள்ளலாம். முன்பு செய்த மரியாதைக்கு எதிரிடையான மரியாதையை நடத்தலாம். ஆனால் சர்வவியாபியான பரம்பொருள் போலியை உணரக் காலத்தை எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டுமா?

மனிதனின் ஒவ்வொரு செயலுக்கும் சாட்சி பூதமாக விளங்கும் அவன், மனிதன் எண்ணும்போதே அறிகிறான், முயலும்போதும் அறிகிறான், செயல் புரியும்போதும் பார்த்துக் கொண்டிருக்கிறான். அதனால் அட்டூழியம் புரியும் மனிதனை அவனுக்கு நன்கு தெரியும். மனிதர்களிடமிருந்து தன்னை மறைத்துக் கொள்வதுபோல அட்டூழியக்காரன் தெய்வத்தினிடமிருந்து தன்னை ஒளித்துக் கொள்ள முடியாது. ஆகவே அவன் வழிபடும் இடத்தில் கடவுள் இருப்பதில்லை.

'அடித்துப் பேசுபவனுக்கு ஐயனும் இல்லை, பிடாரியும் இல்லை' என்றும், 'ஆகாத்தியக்காரனுக்கு ஐசுவரியம்' என்றும் 'அக்கிரமம் செய்பவருக்குத்தான் இது காலம்' என்றும் இன்னும் இவற்றைப்போல் புதுமொழிகள், உலகத்தில் நடக்கும் அநேக நிகழ்ச்சிகளை யொட்டி வழங்கி வருவது உண்மைதான். அந்த மொழிகளை நிரூபிப்பதே போன்று அட்டூழியக்காரனின் வாழ்க்கையில் சுகம் நிறைந்தும் இருக்கலாம். அதைக் கண்டு பிரமித்தல் அறிவுடை

மைக்கு அழகன்று. 'கர்மா', 'பலன்' 'அநுபவம்' முதலியவற்றுக்குறிய கணக்கு வழக்குகள் வேறு. ஆகவே நல்லோர் படுகிற துன்பத்தையும் தீயோர் அநுபவிக்கிற இன்பத்தையும் கண்டு மலேக்கவே கூடாது. கர்மாக்களை விட்டவன் 'பதிதன்', தெய்வ நிந்தனை புரிபவன் 'நாஸ்திகன்' என்றெல்லாம் கூறுமிடத்து, தெய்வ வழிபாட்டை உடம்பாடாக வெளிச்சம் போட்டு ரகசியத்தில் கூசாமல் பிழைகளைச் செய்பவன் பதிதனையும் நாஸ்திகனையும் விடக் கொடியவனுகிருன். பலரைக் கெடுத்துத் தானும் கெடும் அத்தகையவன் மனித சமூகத்தின் அழிவுச் சக்தியான விஷப் பூச்சி. அவனை விட எதும் அறியாத பாமரன் எவ்வளவோ மேல்! அவனுக்குக் கடவுளின் அநுதாபம் உண்டு. அநுதாபத்தோடு அருளையும் பெற விரும்புபவன் தீச்செயல்களை ஒழிக்க வேண்டும்; தீய நினைவுகளுக்கு மனத்தில் இடந்தராமல் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இயன்ற வரையில் நற்செயலே புரிய வேண்டும்; செயல் புரியக் கடைப்படவில்லை யெனில் நல்ல நினைவுகளையாவது வளர்க்க வேண்டும். நல்ல நினைவுகளின் முதற்படி தெய்வ சிந்தனை தானே?

மனிதன் களங்கமற்ற சிறு குழந்தையின் தன்மையைப் பெற்ருல் தெய்வம் அன்பும் அருளும் நிறைந்த தாயாக இருந்து காப்பாற்றும். —ஆஸ்திகன்

சிக்கல் தீர வழி

ரயிலில் பிரயணஞ்செய்துகொண்டிருந்த இரு ஸ்திரீகளுக்கிடையே மிக விந்தையான ஒரு சச்சரவு ஏற்பட்டது. ஒரு ஸ்திரீ, ரயில் கார்டை அழைத்து வண்டியின் ஜன்னலேத் திறந்து வைக்கச் சொன்னுள். உடனே இரண்டாவது ஸ்திரீ "ஜன்னலேத் திறந்தால் குளிர்தாங்காமல் நான் இறந்து விடுவேன்" என்ருள். முதல் ஸ்திரீ "சுத்தமான காற்று இல்லாவிட்டால் நான் இறந்துவிடுவேன்" என்று கூச்சலிட்டாள்.

இவர்களுக்கிடையே அகப்பட்டுக்கொண்டு வேதனையடைந்த ரயில்வே கார்டு அதே வண்டியிலிருந்த மற்ெருரு ஆண் பிரயாணியிடம் இதற்கென்ன செய்வதென்று கேட்டார். அஞ்சாமல் அந்தப் பிரயாணி கூறிய பதில்:—

"ஜன்னலேத் திறந்து ஒரு ஸ்திரீயை குளிரால் நடுங்க வை, பிறகு ஜன்னலே அடைத்து மற்ெருரு ஸ்திரீயை புழுக்கத்தில் அடை!"

[ஒரு விக்கிரமாதித்தன் கதை]

மயானவாசிக்கு மதுமாவதி

•

விக்கிரமாதித்தனும் வேதாளமும் ஊர் ஊராகத் திரிந்துகொண்டிருக்கும்போது வேதாளம் ஒருநாள் ராஜாவிற்குக் கூறிய கதை :—

யமுனா நதிதீரத்தில் தர்மஸ்தலம் என்ற ஒரு பட்டிணம். அதில் கேசவன் என்ற அந்தணரொருவர் வசித்து வந்தார். அவருக்கு மதுமாவதி யென்ற மிக ரூபவதியான ஒரு பெண்ணும் ஒரு மகனும் இருந்தார்கள். மதுமாவதி பருவமடைந்ததும் அவளுக்கு ஒரு வரனைத் தேடுவதைப் பற்றி பெற்றோர்களும் சகோதரனும் யோசனை செய்தார்கள்.

தகப்பனும் சகோதரனும் தனித்தனியே வரன் தேடச் சென்றார்கள். இவர்கள் இப்படி வெளியூர்களுக்குப் போயிருக்கும் சமயத்தில், ஒரு தினம் ஒரு அந்தணச் சிறுவன் கேசவன் வீட்டிற்கு பிக்ஷைக்கு வந்தான். இந்த வாலிபனின் அழகையும் குணங்களையுங் கண்டு, இவன்தான் மதுமாவதிக்குத் தகுந்த வரன் என்று தீர்மானஞ் செய்து மதுமாவதியின் தாய் அவனுக்கு மதுமாவதியை மணஞ் செய்து கொடுப்பதாக வாக்களித்தாள். சில தினங்களுக்குப் பிறகு மதுமாவதியின் தந்தையும் சகோதரனும் அவரவர்கள் சென்றிருந்த ஊர்களிலிருந்து மதுமாவதிக்கு ஏற்ற வரன்களென்று அவர்களுக்குத் தோன்றிய இரு வாலிபர்களை அழைத்துக்கொண்டு வந்தனர். இப்படி மூன்று வரன்களைக் கண்டவுடன் மதுமாவதியின் தந்தை மனங்கலங்கினார். "இவர்கள் மூவருக்கும் மதுமாவதியை மணஞ்செய்து கொடுப்பதாக வாக்களித்தாகிவிட்டது. இதில் யாருக்குக் கொடுப்பது?" என்று தத்தளித்தார்.

இப்படியிருக்க ஒருநாள் தற்செயலாய் மதுமாவதியை ஒரு பாம்பு கடித்து அவள் மரித்தாள். மூன்று வாலிபர்களும் ஊரெல்லாம் தேடியலைந்து மந்திரவாதிகளையும் விஷத்தைப் போக்கும் வைத்தியர்களையுமழைத்து வந்தார்கள். ஆனால் மந்திரவாதிகளும். விஷத்தைப் போக்கும் வைத்தியர்களும் இந்தப் பெண் உயிர் பிழைக்காதென்று கைவிட்டுச் சென்றார்கள். இதைக் கேட்ட கேசவன் மதுமாவதியை அடக்கஞ் செய்துவிட்டான்.

மதுமாவதிக்கு வரனுக வந்த மூன்று வாலிபர்களும் மிகவும் விசனமடைந்தனர். ஒருவன் மதுமாவதியின் எலும்புகளைப் பொறுக்கி கழுத்தில் மாலையாகப் போட்டுக்கொண்டு சந்நியாசமேற்று வனங்களில் தவஞ் செய்வதற்காகச் சென்றுன். மற்றெருவன் அவள் சாம்பலையெல்லாமெடுத்து ஒரு மூட்டையாகக் கட்டி அவளை எரித்த இடத்தில் ஒரு குடிசையைக் கட்டிக்கொண்டு அங்கே வாசஞ் செய்ய ஆரம்பித்தான். மூன்ருவது வாலிபன் கழுத்தில் ஒரு ருத்திராக்ஷத்தை அணிந்து கையில் ஒரு கமண்டலத்தை யேந்திக்கொண்டு துறவியாக மாறி உலகச் சுற்றுப்பிரயாணத்தை தொடங்கினுன்.

மூன்ருவது வாலிபன் அநேக ராஜ்யங்களுக்குச் சென்ற பின் ஒரு தினம் அந்தணரொருவர் வீட்டிற்கு பிக்ஷைக்காகச் சென்றுன். அந்தணர் அவனை மிக அன்புடன் வரவேற்று அவன் கால்களைக் கழுவி தன்னருகே உட்கார வைத்து அவனுக்கு போஜனம் செய்வித்தார்.

இவர்களிருவருக்கும், அந்தணரின் மனைவி உணவு பரிமாறிக் கொண்டிருந்தபோது இவர்கள் குழந்தை அந்தணர் மனைவியிடம் தின்பண்டம் ஏதோ கேட்டு அழத் தொடங்கியது. எவ்வளவோ சமாதானம் செய்தும் கேட்காமல் அவள் புடவைத் தலைப்பை பிடித்துக்கொண்டவாறே கூக்குரலிட்டுக்கொண்டே யிருந்தது. கடைசியில் அந்த ஸ்திரீ கோபம் தாங்காமல் அந்தக் குழந்தையை அடுப்புக்குள் தூக்கி எறிந்து விட்டாள். குழந்தை எரிந்து சாம்பலாகி விட்டது. இந்தப் பரிதாபகரமான சம்பவத்தைக் கண்ணுல் கண்ட வாலிபன் சாப்பிடுவதை நிறுத்தி எழுந்திருந்து விட்டான். "நீ ஏன் சாப்பிடாமல் எழுந்திருந்தாய்?" என்று அந்த வாலிபனைக் கேட்டார் அந்தணர்.

"கோர கிருத்தியம் நடந்த இடத்தில் உணவு அருந்துவது மனிதத் தன்மையல்ல" என்று பதிலளித்தான். இதைக் கேட்ட அந்தணர் தன் அறையிலிருந்த ஒரு புத்தகத்தைக் கொண்டுவந்து அதிலிருந்து ஒரு மந்திரத்தைச் சொல்லி சாம்பலா யிருந்த குழந்தைக்கு உயிரளித்து விட்டார். இதைக் கண்ட வாலிபனுக்கு அதிசயம் தாங்க முடியவில்லை. "இந்த மந்திரம் என் கையிலிருந்தால் மதுமாவதிக்கு உயிரளிக்கலாமே, அந்தப் புத்தகத்தை எப்படியாவது திருடவேண்டும்" என்று தீர்மானித்தான்.

அன்றிரவு எல்லோரும் தூங்கிய பின்பு மெதுவாக எழுந்திருந்து அந்தணர் இருந்த அறையில் நுழைந்து அந்தப் புத்தகத்தைத் திருடிக்கொண்டு தர்மஸ்தலத்திற்குச் சென்றுவிட்டான். தர்மஸ்தலத்தில் மதுமாவதியை எரித்த சுடுகாட்டையடைந்தான்.

அங்கே மற்ற இரு வாலிபர்களும் காத்துக் கிடந்தனர். இவனைக் கண்டதும் மிக ஆவலுடன், அவர்கள் மூவருமடைந்த துக்கத்தை நிவாரணம் செய்ய ஏதாவது வழி கிடைத்ததாவென்று கேட்டனர். இதற்கு அந்த வாலிபன் "மரித்துப் போனவளை பிழைப்பிக்க, நான் ஒரு மந்திரத்தைக் கொண்டு வந்திருக்கிறேன்" என்றான்.

"அப்படியானால் நம் மதுமாவதியின் உயிரை பிழைக்க வைக்க முடியுமல்லவா?"

உடனே அந்த இருவர்களும் சேகரித்து வைத்திருந்த சாம்பலையும் எலும்புகளையும் ஓரிடத்தில் குவித்து வைத்து வாலிபன் தான் கொண்டு வந்திருந்த புஸ்தகத்திலிருந்து ஒரு மந்திரத்தைப் படித்தான். மறுகணத்தில் மதுமாவதி நித்திரையிலிருந்து விழிப்புற்றதுபோல் அந்த சாம்பலும் எலும்பும் கலந்திருந்த குவியலிலிருந்து எழுந்தாள்.

அழகான யுவதியைக் கண்டதும் மூன்று வாலிபர்களும், "இவள் எனக்குத்தான், எனக்குத்தான்" என்று கூறிக்கொண்டு சச்சரவிட்டனர்.

கதையைக் கூறிவிட்டு, ராஜனை நோக்கி "மதுமாவதியை மணந்துகொள்ளத் தகுதியான வாலிபன் யார்?" என்ற புதிரைப் போட்டது வேதாளம்.

விக்கிரமாதித்தன் இவ்வாறு கூறினார்:- "குடிசை கட்டி சுடுகாட்டில் வசித்த வாலிபனை மதுமாவதி மணந்துகொள்வது தான் நியாயம்."

"அதெப்படி? எலும்புகளை ஒரு வாலிபன் பத்திரமாகக் காப்பாற்றாமலிருந்திருந்தால் அவள் எவ்வாறு உயிர் பெற்றிருக்க முடியும்? அதுபோலவே உயிரளிக்கும் மந்திரத்தை கொண்டு வந்திராவிடில் அவளுக்கு எவ்வாறு உயிரளித்திருக்க முடியும்?" என்று கேட்டது.

இதற்கு விக்கிரமாதித்தன், "எலும்புகளைப் பாதுகாத்தவன் மதுமாவதியின் மைந்தனுக்குச் சமானம்; உயிரையளித்தவன் அவள் தந்தைக்குச் சமானம்; அதனால் சுடுகாட்டில் குடிசை கட்டி வசித்தவனுக்கே பெண்" என்று தீர்ப்பளித்தான்.

இதற்கு வேதாளம் பதில் ஒன்றுங் கூறவில்லை.

ரேடியோவின் புது உபயோகம்

ரேடியோ மூலம் மூட்டைப் பூச்சிகள் ஒழித்துவிடலாமென்று நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனராம்.

ரேடியோ சங்கீதத்தைக் கேட்கவைக்க முடியுமானால் மூட்டைப் பூச்சிகளை ஏன் ஒழிக்கமுடியாது?

குட்டி நாடக மேடை

குழந்தைகளுக்கென்றே ஒரு நாடகக் கழகம் கல்கத்தாவில் இருக்கிறது. நாடகத் தொழிலில் ஈடுபட்டவர்களும் வயதடைந்தவர்களும் மட்டுந்தான் சாதாரணமாக நாடகங்களில் பங்குகொள்வது வழக்கம். நாடகக் கலையளிக்கும் நன்மையைக் குழந்தைகளுக்கு மளிக்கவேண்டுமென்று எண்ணங்கொண்ட கல்வி நிபுணர்களுமுண்டு. இவர்கள் முயற்சிதான் கல்கத்தாவில் இந்த கழகம் தொடங்கியதற்குக் காரணம்.

விழாக்களிலும் மற்ற விசேஷங்களிலும் சிறு குழந்தைகள் நாடகம்போன்ற ஆட்டங்களில் பங்கு கொள்வது எல்லாப் பள்ளிகளிலும் நிலவியுள்ள ஒரு பழக்கம். இதிலெல்லாம் முக்கியமாகக் கவனிப்பது என்னவென்றால் ஒரு மணீ நேரத்திற்கோ, இரண்டு மணீ நேரத்திற்கோ உல்லாசமாகப் பொழுதுப்போக்குவதற்கு களிப்பூட்டும் அம்சங்களைக் குழந்தைகளைக்கொண்டு நடிக்கச்செய்வது. குழந்தைகள் இதனால் கலையில் நிபுணத்துவம் பெறவேண்டுமென்ற அபிப்பிராயம் இந்த நிகழ்ச்சிகளைத் தயாரிப்போர்களுக்கில்லை.

ஆனால் கல்கத்தாவில் இப்போது தொடங்கியிருக்கும் நாடகக் கழகத்தின் முக்கிய நோக்கம் குழந்தைகளுக்கு நடன நிபுணத்துவ மளிப்பதற்காகவேதான். குழந்தைகள் வயதுக்குத் தகுந்தபடி நடிக்கும் அம்சமுமிருக்கவேண்டுமென்ற முக்கிய விஷயத்தை இந்த கழகத்தார் மறக்கவில்லை. முதல் முதலாக குழந்தைகள் ஏற்கனவே பல தடவைகள்கேட்டுக்களிப்புற்றுள்ள நாடோடிப் பாட்டுகளைத்தான் இவர்கள் அபிநயிக்கிறார்கள்.

பாரதத்திலேயே ஒவ்வொரு மாகாணத்திலும் நாடோடிப் பாட்டுகள் பழக்கத்திலிருந்து வருகிறது. இதையெல்லாம் பாரத மக்களனைவருக்கும் தெரியச் செய்வது நாட்டுக்கும் நாடகக் கலைக்கும் செய்யும் ஒரு சிறந்த தொண்டாகும்.

கல்கத்தாவில் குழந்தைகள் நாடக நிகழ்ச்சிகளெல்லாம் இந்தியன் மியூஸியத்தில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்டுள்ள நாடக மேடையில் தான் நடைபெற்றுவருகின்றன. அனைவரும் நாடகங்களைப் பார்த்து மகிழ்ச்சி பெறுவதற்காகப் பிரவேசக் கட்டணங்கள் மிகவும் குறைவாக வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு நாடகத்திற்கும் மக்கள் ஏராளமாக விஜயஞ் செய்வதனால் நல்ல வசூலாகிறதாம்.

'குட்டி நாடகமேடை' என்ற பெயர் கொண்ட இந்த ஸ்தாபனத்தில் நடிகர்கள் தான் 'குட்டி' நடிக்கும் மேடை, நாடகத்தில் கிடைக்கும் வருமானம், நடிகர்கள் பெறும் கலா நிபுணத்துவம், இவை யாவும் மிகப் பெரிதாகும்.

மரம் செடி கொடிகள் வளர்த்திடுவோம்

[பரலி-சு. நெல்லையப்பர்]

★

மரம் செடி கொடிகள் வளர்த்திடுவோம்
  மக்கள் வாழ்வு வளர்த்திடுவோம்
நிரந்தரமாகக் காத்திடுவோம்
  நிறை வாழ் வுலகினில் வாழ்ந்திடுவோம் (மரம்) 1
ஆல் அரசு வேம்பு வளர்த்திடுவோம்
  அழகிய மரங்கள் வளர்த்திடுவோம்
மேலாம் மரங்கள் வளர்த்திடுவோம்
  மேதினி வாழ்வு வளர்த்திடுவோம் 2
ஊரெங்கும் மரங்கள் வளர்த்திடுவோம்
  உயரிய மரங்கள் வளர்த்திடுவோம்
பாரெங்கும் மரங்கள் வளர்த்திடுவோம்
  பலன்தரு மரங்கள் வளர்த்திடுவோம் 3
மா பலா கொய்யா வளர்த்திடுவோம்
  வாழை தென்னை புளி வளர்த்திடுவோம்
பூங்கமுகும் கரும்பும் வளர்த்திடுவோம்
  புண்ணிய நெல்லி வளர்த்திடுவோம் 4
பூஞ் செடி கொடிகள் வளர்த்திடுவோம்
  பூமியை அழகாய்ச் செய்திடுவோம்
வாஞ்சையாய் மரங்கள் வளர்த்திடுவோம்
  வாழ்வு பெருகச் செய்திடுவோம் 5
சாலையில் மரங்கள் வளர்த்திடுவோம்
  தண்ணிழல் மரங்கள் வளர்த்திடுவோம்
சோலையும் குளமும் பெருக்கிடுவோம்
  சுகவாழ்வு உலகில் பெருக்கிடுவோம் 6
ஏரி குளங்கள் பெருக்கிடுவோம்
  எங்கும் சோலைகள் வளர்த்திடுவோம்
மாரி நீரை வீணாக்காமல்
  வற்றாக் குளங்கள் ஆக்கிடுவோம் 7
காடும் வனமும் பெருக்கிடுவோம்
  கார் மிகப் பொழியச் செய்திடுவோம்
நாடு செழிக்கச் செய்திடுவோம்
  நாதனைத் தொழுது வாழ்த்திடுவோம் 8

வெள்ளியம்பலம்

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை வரிவளைக் கைம்மடமானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகனல் வேதமும் பொருள்களு மருளி
யங்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த வாலவா யாவது மிதுவே.

பாண்டிய நாட்டின் இராஜதானி. சேர்மசுந்தரக் கடவுள் 64 திருவிளையாடல்களைச் செய்தருளிய தலம். கபிலர், பரணர், நக்கீரர் முதலிய பொய்யடிமையில்லாத புலவர்களாகிய சங்கத்தார் இருந்த இடம். விபூதி, ருத்ராக்ஷம், சடைமுடி என்னும் மூன்றையுந் தரித்து மூர்த்தி நாயனர் அரசாட்சி செய்த க்ஷேத்திரம். அரிமர்த்தன பாண்டியராஜன் காலத்தில் மாணிக்கவாசக சுவாமிகள் 'தென்னவன் பிரமராயன்' என்னும் பெயருடன், மந்திரியாயிருந்த பட்டணம். திருஞர்னசம்பந்தமூர்த்தி நாயனர் சமண சமயத்திற் பிரவேசித்திருந்த கூன் பாண்டியனுடைய நோயை "மந்திரமாவது நீறு" என்னும் திருநீற்றுப் பதிகம் ஓதித் தீர்த்தருளியும், "போகமார்த்தப் பூண்முலையாள்" என்னும் திருநள்ளாற்றுப் பதிகம் எழுதியிருந்த ஏட்டைக் கனலிலிட்டு வேகாம



லெடுத்தும், "வாழ்க அந்தணர்" என்னும் திருப்பாசுரம் எழுதிய ஏட்டை வைகையாற்றிலே விட்டு நீரை யெதிர்த்துக் கொண்டு செல்லும்படியாகச் செய்தும், பாண்டியனுடைய கூனை நீக்கி, அவரையும் சைவராக்கிப் பாண்டிய நாடு முழுவதும் பரவி யிருந்த சமண் இருளைப் போக்கிச் சைவ ஒளியைப் பரப்பிய திருப்பதி. மேற்சொன்ன கூன்பாண்டியன் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரால் திருநீறு சாத்தப்பட்டு, கூன் நிமிரப் பெற்று நெடுமாற நாயனார் என்னும் பெயருடன் அரசாண்ட நகரம். அவருடைய மனைவியாரும் சைவ சிரோன்மணியுமாகிய மங்கையர்க்கரசியாரும், மந்திரியாகிய குலச்சிறை நாயனாரும் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாராலே "மங்கையர்க்கரசி" என்னும் தேவாரத் திருப்பதிகத்திலே சிறப்பித்துப் பாடப்படும்படியான பெரும்பாக்கியத்தைப் பெற்று வாழ்ந்திருந்த ஊர். பஞ்ச சபைகளில் ஒன்றாகிய ரஜதசபையை (வெள்ளியம்பலத்தை) உடைய ஸ்தானம்.

மீனாக்ஷியம்மன் சந்நிதிக்கருகிலுள்ள கிளி மண்டபத்தில் ஸ்தல விநாயகராகிய சித்தி விநாயகர், சுப்பிரமணியர் சந்நிதிகள் இருக்கின்றன. பொற்றாமரைக் குளம் கோயிலுக்குள் இருக்கிறது. கோவிலுக்கு கிழக்கே 1½ மைல் தூரத்தில் மாரியம்மன் தெப்பக்குளம் இருக்கிறது. பக்கத்தில் வைகையாறு ஓடுகிறது. திருமலை நாயக்கர் மஹால் கோயிலுக்கு 2 பர்லாங் தூரத்தில் இருக்கிறது. டவுன் பஸ் ஓடுகிறது. மதுரை நகரம் சென்னைக்கு இரண்டாவதாகச் சொல்லலாம். இவ்விடம் சித்திரைத் திருவிழா விசேஷம். மதுரையிலிருந்து பழமுதிர்சோலை என்கிற அழகர்மலை 12 மைல்.

மூலம்:—காளத்தி நடேச முதலியார் இயற்றிய
"இறைவனின் உறைவிடங்கள்" என்ற நூல்

ASOKA SCENTED BETELNUT POWDER

மழைக்கு மலைக்காத மதி

ஒருநாள் புத்தபிரான் ஒரு காட்டு வழியாகச் செல்லலானார். அப்போது இருண்டு விட்டது. மழையும் விடாது பெய்யத் தொடங்கியது. புத்தர் ஒரு மரத்தடியில் ஒதுங்கி நின்றார் என்றாலும் சொட்டச் சொட்ட நனைந்து விட்டார். பக்கத்தில் ஒரு குடியானவனுடைய வீடு இருந்தது. அவன் தன்னுடைய வீட்டிற்குள் சுகமாக இருந்தபடியே, ஜன்னல் வழியாக வெளியே மகிழ்ச்சியுடன் பார்த்துக்கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு மின்னல் மின்னியது. அந்த மின்னல் வெளிச்சத்தில் மரத்தடியில் நனைந்து கொண்டிருந்த புத்தபிரானும், வீட்டிற்குள் சுகமாக இருந்த அக்குடியானவனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

புத்தபிரானின் எளிய, காவியுடையைக் கண்ட அவன், அவரை இழிவாக நினைத்தான். தன்னுடைய சுக சௌகரியங்களை எண்ணிப் பெருமையடைந்தான். எனவே, புத்தருக்குக் கேட்கும்படியான குரலில் மேகங்களை நோக்கிப் பாடலானான். "எனக்கு இங்கே தேவையான சூடு இருக்கிறது. நல்ல கணப்பும் எரிகிறது. என் மனைவி மக்களெல்லாரும் சுகமாக இருக்கிறார்கள். எனவே, ஓ மேகங்களே! இன்றிரவு நீங்கள் விரும்பியபடி மழை பொழியுங்கள்."

இதைப் புத்தபிரான் நன்றாகக் கேட்டார். பிறரை ஏளனமாக நினைத்துத் தன் சுக சௌகரியங்களைப் பெருமையாகச் சுட்டிக் காட்டிய அக்குடியானவனின் அறியாமையை நினைந்து முறுவல் பூத்தார். பின்பு, அவனுக்குக் கேட்கும்படி பாடலானார். "நான் என்னுடைய புலன்களையடக்கி, அவைகளை என் வசத்தில் வைத்திருக்கிறேன். இரக்கம் என்னும் கணப்பு என்னுள் எரிகிறது. எனவே, ஓ மேகங்களே! இன்றிரவு உங்களிஷ்டப்படி மழை பொழியுங்கள்."

இதை அவன் கேட்டான் எனினும் திரும்பவும், "உரிய காலத்தில் நான் பயிர்களை அறுவடை செய்தேன். இம்முறை எனக்கு நல்ல அறுவடை, களஞ்சியத்தில் ஏராளமான தானியங்களைச் சேமித்து வைத்திருக்கிறேன். என்னுடைய கால் நடைகளும் சுகமாயிருக்கின்றன. எனவே, ஓ மேகங்களே! இன்றிரவு நீங்கள் விரும்பியபடி மழை பொழியுங்கள்" என்று பாடினான்.

புத்தபிரானும் சளேக்கவில்லை. அவர் மறுபடியும், "நானும் 29 வயதுடைய வனாயிருக்கையி லேயே நற்குணங்கள் என்ற விதையைத் தூவி, இப்பொழுது நல்ல பலனாகிய அறுவடையைச் செய்கிறேன். விவேகம் என்ற முறத்தைக் கொண்டு, நல்லவற்றைத் தீயனவற்றினின்றும் பிரித்தெடுக்கிறேன். அவற்றை நான் என் இதயமாகிய களஞ்சியத்தில் சேமித்து வைக்கிறேன். எனவே, ஓ மேகங்களே! இன்றிரவு உங்களிஷ்டப்படி மழை பொழியுங்கள்" என்று பாடினார்.

குடியானவன் இவற்றைக் கேட்டுத் திடுக்கிட்டுத் தன் தவறை உணர்ந்தான். வெளியில் வந்து, புத்தபிரானை மன்னிக்குமாறு வேண்டியதுடன் அவ்விரவைத் தன்னுடைய வீட்டில் கழிக்க வேண்டுமென்று மிகவும் மன்றாடினான். புத்தபிரான் தமக்கே உரிய அழகும், கருணையும் நிறைந்த புன்முறுவலுடன் அவன் வேண்டுகோளுக்கிணங்கினார்.

—G. K. S. Sastri in *Eelakesari*

கேட்டது கிடைத்தது !

மிகப் பெரிய யுத்தக் கருவி உற்பத்தியாளரான நோபெள் பிரபுவை அவர் வேலைக்காரி ஒரு நாள் அணுகி தான் மணஞ் செய்துகொள்ளப் போவதாகக் கூறினாள். உடனே நோபெள் பிரபு அவளை நோக்கி, "என் பங்காக என்ன சன்மானத்தை நீ விரும்புகிறாய்" என்று கேட்டார். "உங்களிடமிருந்து நான் விரும்புவது மிகவும் கைக்கெட்டாத விஷயம் என்று எனக்கே தோன்றுகிறது" என்று அவள் அச்சத்துடன் கூறினாள். "தைரியமாகக் கேள், நீ கேட்பதைத் தருகிறேன்" என்று பிரபு தைரியமூட்டினார். "உங்களிடம் நான் விரும்புவது உங்களுடைய ஒரு நாள் சம்பாத்தியம்தான்" என்று வேலைக்காரி கூறினாள்.

சற்றேனும் தாமதியாது பிரபு ஒரு செக் எழுதி வேலைக்காரி கையில் கொடுத்தார். அந்தச் செக் எவ்வளவு ரூபாய்களுக்கென்று தெரியுமா? ஒரு லட்சத்து நாற்பதினாயிரம் ரூபாய்களுக்கு.

—*Caravan.*

சிரிப்பிலும் அபாயம்

தேகத்தில் சில இடங்களைத் தொட்டால் ஏன் சிரிப்பு வருகிறது?

சாதாரணமாய்க் கழுத்து, மூக்கு, காதுகள், அக்கிள் முதலிய இடங்களைத் தொட்டால் எவருக்கும் சிரிப்பு வருவது சகஜம். தேகத்தின் மற்ற பாகங்களைவிட இந்த இடங்கள் மிக மென்மையானது, இந்த இடங்களில் அடிபட்டால் மனிதன் உயிருக்கே ஆபத்துதான்.

வேடிக்கைக்காக இந்த இடங்களில் சீண்டியோ, லேசாகக் குத்தியோ சிரிப்பு மூட்டுகிறோம். சில சமயங்களில் இவ்வாறு செய்வது பெரும் ஆபத்தாகவும் முடியும். எதிர்பாராமல் ஒரு மனிதனுக்குச் சிரிப்பு மூட்டுவதால் சில சமயங்களில் அவன் மாண்டு போகக்கூட நேரிடலாம்.

மனிதக் குரங்குகளுக்கும் மேற்கூறிய இடங்களில் தொடுவதால் சிரிப்பு உணர்ச்சி தோன்றுகிறது.

பூனைக் குட்டிகள், நரிகள், சிங்கக் குட்டிகள்—இவற்றின் கழுத்து மிகவும் உணர்ச்சி யளிக்கும் பாகமாகும். இந்த விஷயத்தில் மனிதனுக்கு ஒரு விசேஷ அம்சமுண்டு. கவலையற்றிருக்கும் போதுதான் அக்கிள்களிலும் மற்ற இடங்களிலும் தொட்டால் சிரிப்பு வரும். கோபமா யிருக்கும்போதோ மன நிம்மதியற்றிருக்கும்போதோ இந்த இடங்களில் தொடுவதால் இந்த உணர்ச்சி இராது.

சிறிய குழந்தைகள் கூட, பெற்றோர்களோ, மற்றக் குடும்பத்தினர்களோ, அவர்களைப் போல் நெருங்கிப் பழகினவர்களோ சிரிப்பு மூட்டினால் தான் சிரிக்கும். பழக்கமில்லாத புது மனிதர்கள் சிரிப்பு மூட்டினால் சிரிக்காது.

இந்த உணர்ச்சி சிறு குழந்தைகளுக்கு பிறந்து இரண்டு மாதங்களாவது ஆன பின்னர் தான் வரும். காதுகளுக்கும், மூக்குக்கும் இந்த உணர்ச்சி அதிகம். அதனால் தான் ஏதாவது பூச்சிகளோ எறும்புகளோ காதிலோ மூக்கிலோ ஏறினால் நமக்கு உடனே தெரிகிறது.

மனிதனுக்குச் சாத்தியமாகாத சாதனைகளே இல்லையென்று நாம் நம்புகிற இன்றும், மனிதனால் சாதிக்க முடியாத ஒரு விஷயமுண்டு. எந்த மனிதனும் தன் தேகத்தில் மேற்கூறிய பாகங்களைத் தானே தொட்டு தன்னையே சிரிப்பு மூட்டிக்கொள்ள முடியாது.

சீரழிக்கும் சித்திரங்கள்

கொடிய வியாதி

சமீபத்தில் அமெரிக்காவில் நடந்த ஒரு கோர சம்பவம் கீழ்வருமாறு :—

இளம்பெண்களைச் சவுக்காலடித்துக் கற்பழித்து சித்திரவதையும் கொலையும் செய்தனர் ஏழு படித்த வாலிபர்கள். இந்தக் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு பதினேழு வயதுள்ள பையன்தான் கற்பழித்த பெண்ணைப் பேனக் கத்தியால் குத்திக் கொலை செய்தான்: பதினைந்து வயதுள்ள மற்றொரு பையன் ஒரு கதவருகில் ஒளிந்த ஒருவனைச் சுட்டுக் கொன்றதாக அவனே ஒப்புக் கொண்டான்.

இவ்வளவு இளம்வயதில் எவ்வாறு இவ்வளவு கோர கிருத்தியங்களைச் செய்யத் துணிவு ஏற்படுகிறது? அமெரிக்காவிலுள்ள இளைஞர்கள் எவ்வளவு கொடிய குறும்புகளில் ஈடுபடுகிறார்களென்பதை திரட்டின் முன்னொரு இதழில் படித்தீர்கள். அமெரிக்காவிலுள்ள இளைஞருலகத்தை இப்போது பீடித்திருக்கும் மிகவும் பயங்கரமான ஒரு வியாதியைப் பற்றிச் சில தகவல்கள் இந்தக் கட்டுரையில் கூறுகிறோம் :

சிறுவர் பத்திரிகைகள் !

அமெரிக்காவில் இளைஞர்களுக்கென்று வெளியாகும் பத்திரிகைகள் பல உண்டு. சிறு குழந்தைப் பருவம் முதல் வாலிபப் பருவம் தாண்டும் வரை, ஒவ்வொரு பருவத்திற்கும் தகுதியான பத்திரிகைகள் வெளிவருவதுண்டு. சில பத்திரிகைகள் 'காமிக்ஸ்' (Comics) என்ற ரகத்தைச் சேர்ந்தது. 'காமிக்ஸ்' என்ற வார்த்தையின் அர்த்தம் கேலிச் சித்திரங்கள் என்பது. இம்மாதிரிச் சித்திரங்கள் ஏதாவது சிரிப்பையூட்டும் சம்பவங்களோ, கதைகளோ கொண்டதாகத்தான் முதன் முதலில் இருந்தன. ஆனால் காலப்போக்கில் இந்த 'காமிக்ஸ்' என்ற ரகத்தில் ஒரு பெரும் மாற்றம் ஏற்பட்டது. சிரிக்கத் தகுதியான சந்தர்ப்பங்களையும் கதைகளையும் சித்தரிப்பதை விட்டு சிறுகதைகள், தொடர்கதைகள் முதலியவற்றை 'காமிக்ஸ்' மூலம் பத்திரிகைகளில் வெளிவரத் தொடங்கிவிட்டன.

இந்தக் கதைகள் மகிழ்ச்சியூட்டுவதற்கும் குழந்தைகளுக்கு நல்ல பாடங்களைக் கற்பிப்பதற்கும் பயன்படுபவையல்ல.

விஷமா ? விஷயமா ?

இவற்றில் வெளியாகும் விஷயங்கள் கொலை, கொள்ளை, திருட்டு, வழிப்பறி, கற்பழித்தல், கள்ளக்காதல், கள்ளக் கையெழுத்திடல் முதலியவையாகும். இளைஞர்களுக்கு மிகத் தீமையான விஷயங்களை

யெடுத்து ஊட்டும் கதைகள் கொண்டதாகும் இந்த 'காமிக்ஸ்.' இவை அமெரிக்காவில் லக்ஷக்கணக்கானப் பிரதிகள் விற்பனையாகின்றன. அந்நாட்டுச் சிறைச்சாலைகளுக்கு வழிகாட்டும் ஏடுகளாகவும் இவை அமைந்துள்ளன. இந்த ஏடுகளில் ஒரே 'காமிக்ஸ்' களியாட்டமும் கோரக் கொலைகளும் திடுக்கிடும் சம்பவங்களும் காட்டுமிராண்டித்தனமான காட்சிகளும் நிரம்பி வருகின்றன. இவற்றையெல்லாம் வருஷக் கணக்காய்த் தொடர்ந்து படிக்கும் குழந்தைகளின் மனப்பான்மை எப்படியிருக்கும்? சத்தியம், நியாயம், தர்மம், ஜீவகாருண்யம் வாழ்க்கையில் அனுஷ்டிக்கவேண்டிய சிறந்த குணங்கள் இவற்றைக் கற்றுக் கொள்ள வேண்டிய பிராயத்தில் அமெரிக்காவில் வெளியாகும் 'காமிக்ஸ்'களில் விஷயங்களைப் படிக்கும் குழந்தைகள் எப்பேற்பட்ட மனிதராக விளங்குவார்கள்? ராமாயணத்தில் ராமர் தன் தந்தையின் வாக்கை நிறைவேற்றுவதற்காக ராஜ்யத்திலிருந்து வெளியேறி பன்னிரண்டு வருஷங்கள் வனவாசம் செய்தார் என்ற கதையைப் படிக்கும் குழந்தைகளின் மனத்தில் பெற்றோர் சொற்படி நடப்பதே நலம் என்பது நன்ருகப் பதிந்துவிடுகிறது. பரதன் தனக்குக் கிடைத்த ராஜ்யத்தை தன் தமையனுக்கே கொடுத்துவிடுவேனென்ற பிடிவாதத்தைப் பற்றிப் படிக்கும்போது, சகோதர வாஞ்சையின் உண்மை குழந்தைகளுக்கு நன்கு புலப்படுகிறது. விபீஷணன் தன் உடன் பிறந்தானை விட்டு ராமரிடம் சரணுகதி யடைவதிலிருந்து குழந்தைகளுக்கு நியாயமும் தர்மமும்தான் மேலானது என்பது நன்கு தெளிவாகிறது. இப்படி ஆர்வத்துடன் படிக்கும் கதைகள் தான் குழந்தைகளின் பிற்கால மனப்பான்மைக்கும் நடவடிக்கைகளுக்கும் காரணமாகின்றன.

தீங்குக்குத் தூண்டுதல்

"மூன்று துப்பாக்கி தாமஸ்" "மரணக்கண் ஜோ", "ரத்தக் கறை மேரி" முதலிய பாத்திரங்களின் வீரச் செயல்களைப் பற்றி தினந்தோறும் படிக்கும் இளைஞர்கள், கொலையிலும், கொள்ளையிலும், கற்பழிப்பிலும் ஈடுபடாமல் வேறென்ன செய்வார்கள்?

உதாரணமாக 'காமிக்ஸி'ல் காணப்படும் சித்திரங்கள் வருமாறு: அழகான பெண்ணை ஆவலோடு பார்க்கும் கொலைகாரன், துப்பாக்கிப் பிரயோகம், கழுத்தைத் திருகிக் கொலை செய்தல், தூக்கிவிடுதல், கன்னம் வைத்தல், ஒரு பெண்ணின் கன்னத்தில் அறைதல், கண்ணைக் குத்துதல், அரை நிர்வாணமாய்ச் சீர்குலைக்கப்பட்ட பெண்கள், கோடரி முதலியவற்ருல் கொலைசெய்தல், பிணந்தின்னல், மனிதர்களால் பச்சையாகக் கடித்து உண்ணப்பட்ட மனித உடல், களவாடிய காரில்

போலீஸ்காரரை நோக்கித் துப்பாக்கியால் சுட்டபடி கொள்ளைகாரர் சவாரி. இத்தகைய சித்திரங்களின் நடுவே வெளியாகும் விளம்பரங்களோ சொல்லத்தரமன்று கர்ப்பத்தடை மருந்துகள், தாதுபுஷ்டி லேகியம், மனிதரைப் பயமுறுத்தப் போலித் துப்பாக்கிகள், கைப் பிரம்பில் மறைக்கப்பட்ட கத்தி, பெண்கள் மார்பகத்தைப் பெரிதாக்கத் தைலம், அடுத்த வீட்டில் குளித்துக்கொண்டிருக்கும் நிர்வாணப் பெண்ணைப் பார்க்க மலிந்த தூரதிருஷ்டிக் கண்ணாடி முதலிய பொருள்களைப் பற்றியே கவர்ச்சிகரமான விளம்பரங்கள் நிறைந்திருக்கும்.

புதியனவல்ல

கானகக் கதைகள், கிரகங்களுக்குத் தாவும் மனிதர்கள் 'காமிக்ஸ்' உலகத்துக்குப் புதியனவையல்ல. கானகக் கதைகளில் வரும் வெள்ளையர்களோ அழகானவர்கள், கண்ணுக்குக் குளிமையானவர்கள். ஆனால் காட்டுமிராண்டிகளோ கறுத்த அவலட்சண ரூபம் கொண்டவர்கள். கத்தியால் அல்லது துப்பாக்கியால் கொலைசெய்வதிலும் பார்க்கக் கோரமான சித்திரவதை செய்யும் முறையே கையாளப்படும். பீதியைப் புகட்ட வெளியாகும் இத்தகைய 'காமிக்ஸி'ல் கொலைகாரன் கடைசியில் தன்னைத்தானே சுட்டுக் கொண்டு சட்டப்படி தண்டனைக்கு தப்பித்துக் கொள்வதும் உண்டு—பெரிய—லட்சிய வீரனைப்போல், இராவணனும் கம்சனும் தீமை செய்வதில் 'காமிக்ஸ்' கதாநாயகர்களிடம் பிச்சை வாங்கக்கூட யோக்யதையற்றவர்கள்.

எழுத்துக்கூட்டி வாசிக்கப் பழகும் வயதிலேயே 'காமிக்ஸி'ல் மோகம் பிறந்து விடுகிறது. அப்புறம் சொல்லவா வேண்டும்? அறியாப் பருவத்திலேயே கொலையும் களவும் சர்வ சாதாரண இயற்கை நிகழ்ச்சிகள் என்ற எண்ணம் தோன்றிவிடுகிறது. அவை வெறுக்கப்படவேண்டிய தவறுகள் என்றே குழந்தைகளுக்குத் தோன்றுவதில்லை. அதன் பின் பல வர்ண ஷர்ட்டும் ஒரு குழாய் மாதிரி நீண்ட காற்சட்டையும் ஒருகோணங்கித் தொப்பியும் அணிய ஆசைப்படுகிறான். அதில் தவறு ஒன்றுமில்லையென்று நாமும் பணத்தைக் கொடுத்து வாங்கிக்கொடுக்கிறோம். சினிமாப் படங்களில் 'ஆங்கிலம் பேசும் சீரியல் படம்' என்ற முத்திரை யொட்டி வருகிறதே, அதைப் பார்க்கிறான். கொள்ளைக்கூட்டத்தினர், கொலைகாரரைப் பற்றிய படத்தில் பையன் கற்றுக்கொள்வது கொள்ளையடிக்கவும், கார், சைக்கிள் களவாடவும், நடு வழியில் தட்டிப் பறிக்கவும், அங்கேயிருந்து ஆங்கிலமல்லாத ஒரு கொச்சை மொழிபேசக் கற்றுக் கொள்கிறான். அப்பொழுதும் நாம் 'அதனாலென்ன?' என்றிருந்து விடுகிறோம். ஆனால் போலீஸ் காரனுக்கோ பொது

ஜனத்துக்கோ உபயோகமில்லாத இந்தப் படங்கள் சட்டங்களை மீறி சமூகக் கட்டுப்பாடுகளை மீறிச் செய்யக்கூடிய தீய காரியங்கள் அத்தனைக்கும் வழி காட்டுகின்றன.

பரீட்சித்தல்

இவைகளில் சிலவற்றைச் சந்தர்ப்பம் வாய்க்கும்போது நடைமுறையில் பரீட்சித்துப் பார்த்துக்கொள்ள விரும்புகிறான் பையன். சில நாள் தப்பி ஒருநாள் சிறைக்கம்பிக்குப் பின்னால் நிற்கிறான். அப்போது நாம் தலைமேற் கைவைத்துக் கண்ட மிச்சம் என்ன? ஒரு நீதிபதி சொல்வதுபோலவே முன்பெல்லாம் சிறுவர்கள் நீதி மன்றங்களில் மாங்காய் திருடுவது போன்ற சிறிய குற்றங்களுக்கே விசாரிக்கப்பட்டார்கள். ஆனால் இன்றோ அவர்கள் மத்தியில் மகாமோசமான அக்கிரமங்கள் நடைபெறுகின்றன. இவற்றைப் படித்ததன் பயனாகக் குற்றவாளிக் கூண்டிலேறிய குழந்தைகளுக்கு உதாரணம் வேண்டுமானால் நூற்றுக்கணக்கில் சொல்லலாம். தாய் தந்தையைக் கொன்று சுகம் அனுபவிக்க நினைத்த மைந்தர் கூட உண்டு.

தவறான எண்ணம்

சில முதியவர்கள் 'காமிக்ஸி'ல் வெளிவரும் கற்பனை இயக்கைக்கு முற்றும் முரணானது, அசாதாரணமானது என்று நினைக்கிறார்கள். அதனால் குழந்தைகள் அவற்றை நம்ப மாட்டார்கள் என்றும் நினைக்கிறார்கள். அது தவறு. அடிக்கடி இம்மாதிரிக் கதைகளைப் படிக்கும் குழந்தைகள் மனத்தில் அத்தகைய எண்ணங்களே பதிந்து விடுகின்றன. நீதி நியாயம்என்றபேச்சுக்கேஇடமில்லாமல் தீயநெறியை அடைவதையே நோக்கமாக எத்தகைய செயலையும் செய்யலாம் என்றநீதியைத் தான் கற்றுக்கொள்கிறார்கள். கதவில் எப்படித் துப்பாக்கியைச் செருகிவிட்டால் திறக்கிறவர்மீது குண்டு பாயும், எப்படிக் கொலைகளைச் சாதாரண மரணம்போல மூடி மறைக்கலாம், கொள்ளைக்குப் பின்னால் விளக்கை அணைத்துவிட்டுத்தப்பி ஓடலாம் என்பனவற்றையே 'காமிக்ஸ்' போதிக்கின்றன. மனித இறைச்சியைத் தின்று கொழுத்து வளரும் மனிதர்கள் கூடச் சர்வ சாதாரணமாக இக்கதைகளில் இடம் பெறுவார்கள். சட்டத்தின்படி தண்டனை கிடைக்கவேண்டுமாயின் குற்றவாளி வெறும் முட்டாள்தனமாக நடந்து அகப்பட்டான் என்றுதான் கதை முடியும். ஆகவே "கட்டாயம் வேண்டும். அசட்டுத்தனமாக அகப்பட்டுக்கொண்டானல்லவா?" என்ற உணர்ச்சிதான் குழந்தையின் மனத்தில் பதியும்.

சுவை கண்ட பிறகு...

இன்னும் சிலர் இக் கதைகளைப் படிக்க ஆரம்பித்துச் சுவை கண்ட பிறகு இலக்கியங்

களைப் படிக்கச் சிறுவர்கள் முனையலாம் என்று நினைக்கிறார்கள். அது பொய். இலக்கியங்களுக்குக் 'காமிக்ஸ்' உருவம் கொடுக்கும்போது கூடத் தவறான பகுதிகளுக்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. இந்த அழகில் இலக்கிய நூல்களைப் படிக்கும் ஆவலைக் 'காமிக்ஸ்' தூண்டுவதாவது!

வேறு சிலரோ குழந்தைகளுக்கு இயற்கையாக உள்ள மிருகவேட்கையைத் தணிக்கக் 'காமிக்ஸ்' உபயோகப்படுவதாக நினைக்கிறார்கள். ஒரு நாளும் அப்படியிருக்க முடியாது. குற்றவாளிக் கூண்டிலேறும் குழந்தைகள் 'காமிக்ஸ்' படித்தே அக் கதிக்கு ஆளானார்கள் என்பது தெளிவாய்த் தெரிகிறது.

மேல்நாடுகளில் சில வியாபாரிகள் இப்பொழுது நிலைமையை உணர்ந்துவிட்டார்கள். "நாங்கள் என்னசெய்வது? இன்றுவரை தெரியாமல் இருந்து விட்டோம். இவற்றையெல்லாம் படித்துப் பார்க்க எங்களுக்கு அவகாசமேது? சொன்னால் தெரிந்துகொள்கிறோம்" என்கிறார்கள். ஆகவே உங்கள் கடமை விகாரமான கெடுதிகளைப் போதிக்கும் கேவல நூல்களை அம்பலப் படுத்தவேண்டியதே.

இவை அவசியமா?

வனப்புடன் உங்கள் வீட்டில் தவழும் குழந்தை, வட்டிலில் உள்ள சோற்றைத் தரையில் சிந்திவிட்டுச் சிரிக்கும் சிசு, தொட்டிலில் கால் கட்டை விரலை ருசி பார்க்கும் பாலன், மண்ணை அள்ளி வாயில் அடக்கி விளையாடும் மைந்தன், 'அம்புலிமாமனே அழ கழ சொக்கே' பாடுங் குமாரன், தத்தித் தளர்நடை நடந்து மகிழ்வூட்டும் மகன் வருங்காலத்தில் இராட்சதனாக மாறுவதைத் தடைசெய்யவேண்டும். 'எத்தித் திருடும் அந்தக் காக்கை', 'கொத்தித்திரியும் அந்தக் கோழி', 'வாலைக் குழைத்துவரும் நாய்', 'பாலைப் பொழிந்துதரும் பசு' அத்தனைக்கும் தோழனாய் வாழ வேண்டிய பாப்பாவுக்கு மனித குலத்தின்மீது அன்பில்லாத அரக்கர்களாக மாறும் வித்தையைக் கற்றுக் கொடுக்கின்றன 'காமிக்ஸ்.' பிணக் குவியலின் மத்தியில் சிரித்து மகிழும் மக்களை உருவாக்குகின்றன 'காமிக்ஸ்' ஈவு, இரக்கம், தயை, தாட்சண்யம் என்ற வார்த்தைகளுக்கே இடமில்லாமற் செய்கின்றன 'காமிக்ஸ்.' இவை அவசியம்தானா? இவற்றைத் தொலைக்க மார்க்கமே இல்லையா?

அமெரிக்காவிலும் மற்ற மேல் நாடுகளிலும் மாணவர்களும் மற்ற இளைஞர்களும் ஏராளமாய்ப் புரியும் கொடிய செயல்களுக்குக் காரணமாயிருப்பது இந்த 'காமிக்ஸ்' என்ற பத்திரிகை ரகங்கள் தான் என்பது வாசகர்களுக்குப் புலனாகும். இந்த உண்மையை மேல்நாடுகளிலுள்ள சிந்தனையாளர்களும்

நன்கு அறிந்து இவற்றால் நேரிடும் தீங்குகளை யொழிப்பதற்குள்ள வழிகளை ஆராய்ந்து கொண்டு தானிருக்கின்றனர்.

அமெரிக்காவில் உற்பத்தியாகும் விஷப் பத்திரிகைகள், கட்டுக் கட்டாக நம் நாட்டுக்கு வருவதோடு நம் நாட்டிலுள்ள சில பத்திரிகைகளும் இந்த 'காமிக்ஸி'ல் சில ரகங்களைப் பிரசுரித்து வருகின்றன. இதனால் தான் மேல் நாட்டு இளைஞரைப் பீடிக்கும் வியாதி நம் நாட்டு இளைஞர்களையும் பீடிக்குமோ யென்று பயப்படவேண்டியிருக்கிறது.

சமீபத்தில் இலங்கையில் நடந்த கல்லூரிப் பரிசளிப்பு விழாவின்போது கூடிய கல்வி அதிகாரிகள் அனைவரும் இந்த அமெரிக்க 'காமிக்'ஸைப் பற்றி மிகத் தீவிரமாகக் கண்டித்துள்ளார்கள்.

"தம்பி ஏதாவது புத்தகத்தை யெடுத்துப் படியடா" என்று சொன்ன காலம் மலையேறி விட்டது, "என்ன எழவை யெல்லாமோ வாசித்துத் தள்ளுகிருயேடா" என்று கேட்கும் காலம் இது. எந்தெந்த வீடுகளிலுள்ள இளைஞர்கள் அமெரிக்க 'காமிக்ஸை' படிக்கிருர்களோ, அவர்களின் பெற்றோர்கள் இந்த விஷயத்தில் கண்மூடித்தனமாயிருப்பது மிகவும் கண்டிக்கத் தக்கதாகும். இந்த 'காமிக்ஸை'ப் பார்த்தால் சிறுவர்கள் குட்டிச்சுவராய்ப் போவதுமன்றி அவர்கள் இக்குடும்பங்களுக்குக் கோடாரிகளுமாவார்கள்.

அழகான ரீதியில் கண்ணைக் கவரும் வர்ணங்களில் அச்சாகி வரும் இந்த 'காமிக்ஸ்' சித்திர வேலைப்பாடமைந்த ஒரு பொற்கிண்ணத்தில் நிறைந்துள்ள விஷத்திற்குச் சமானமாகும். நல்லவேளை! தமிழில் இந்த மாதிரி 'காமிக்ஸ்' இன்னும் வெளிவர ஆரம்பிக்கவில்லை. ஒரு வேளை மலிவான விலையில் வர்ணப் படங்கள் வெளியிட வசதியில்லை யென்பது காரணமாயிருக்கலாம்.

—With acknowledgements *to Eelakesari*.



மூன்றக்ஷரம்

அழகான பெண், ஏராள பணம், மற்றும் விரும்பக் கூடிய அநேக சன்மானங்கள், சீர்வகைகள் முதலியவற்றில் மோகங் கொண்ட பட்டதாரி வாலிபனுக்கு ஒரு உதவியளிக்க மூன்று அக்ஷரங்கள் கொண்ட மந்தரம் இருக்கிறது. அதுதான் (I. A. S.) ஐ. ஏ. எஸ்.

சமீபத்தில் ஒரு வாலிபன் கீழ்வரும் விளம்பரத்தைப் பத்திரிகைகளில் வெளியிட்டான்:—

“தேவை: நல்ல உயரமுள்ள அழகான சிவந்த மேனியுடைய பெண்: பணக்காரக்குடும்பத்தைச் சேர்ந்தவளாயிருக்க வேண்டும். ஏராளமான வரதக்ஷிணை தர வேண்டும். வரன் ஐ. ஏ. எஸ்-க்கு படித்துக் கொண்டிருக்கிறார்.”

மணமாகவிருக்கும் பருவமடைந்த பெண்களின் தந்தைகளை ஏமாற்றுவதற்கு இதைவிடச் சிறந்த வழி வேறு உண்டா?

ஐ. ஏ. எஸ். பரீக்ஷையில் வெற்றி பெறுவதற்குப் புத்தகப் படிப்பு மட்டும் போதாது. குண விசேஷம் அனைத்தும் பொருந்தியிருக்கவேண்டும். இதற்காக அநேக வாலிபர்கள் ஹோட்டல்களுக்குச் சென்று பணத்தை வீணாக்குவதோடு சினிமா நடிகர்களுடன் தொடர்பு வைத்துக்கொண்டும் மற்றும் அநேக வழிகளில் உலக அனுபவத்தை தேடிக் கொண்டுமிருக்கிறார்கள். இதனால் பெற்றோர்களின் பணம் வீணாக விரயமாவதைத் தவிர வேறொரு பயனுமில்லை.

நகரவாசிகளான பெண்கள் ஆங்கில சினிமாப் படங்களைப்பார்ப்பதாலும் அயல்நாட்டு நாவல்களை ஏராளமாகப் படிப்பதனாலும் ஆயிரக் கணக்காய்ச் சம்பளம் வாங்கும் வரன்களைத்தான் விரும்புகிறார்கள். ஒரே மூச்சில் தன்னுடைய நடுத்தர வகுப்பு அந்தஸ்தையெல்லாம் விட்டு ஒரு பிரபுவாகிவிடலாமென்ற பேராசை கொண்டவர்களான வாலிபர்களும் ஐ. ஏ. எஸ். பரீக்ஷைக்காக பயிற்சி பெறுகின்றனர்.

ஐ. ஏ. எஸ்-இல் மொத்தமாக எத்தனை பேர் வேலை பெறலாம் என்று தெரிந்தவர்களும், வாழ்க்கையில் ஏதாவது பயனுள்ள தொழிலில் ஈடுபடவேண்டுமென்று விரும்புவோர்களும் இம்மாதிரித் தங்கள் காலத்தையும் பெற்ரோர்களின் சம்பாத்தியத்தையும் வீணாக்கமாட்டார்கள்

இந்தியாவின் சுதந்திரம் என்ற தேனில் விளைந்த நஞ்சாகும் இந்த ஐ. ஏ. எஸ். பைத்தியம் என்று கூருமலிருக்கமுடியாது.

—*Tribune*, Ambala



காந்திஜியின் ஆஸ்ரமத்தில் சமையல் செய்த பாத்திரங்களைத் தேய்ப்பது ஸ்திரீகளை மட்டும் சேர்ந்ததல்ல. எல்லா வேலையிலும் யாவரும் பங்கு கொள்ளவேண்டுமென்ற காந்திஜியின் கட்டளைப் பிரகாரம் ஒவ்வொரு தினமும் ஒவ்வொரு வேலையை ஒவ்வொரு ஆஸ்ரமவாசியும் செய்ய வேண்டும். இதன் பிரகாரம் ஒரு தினம் காந்திஜியும் அவர் சிஷ்யர் குமரப்பாவும் சமையல் பாத்திரங்களைத் தேய்த்துக்கொண்டிருந்தனர். இருவர் கையிலும் தேங்காய் நார்; முழங்கை வரையிலும் அழுக்கும் சாம்பலும்; இந் நிலையில் காந்திஜியின் மனைவி கஸ்தூரிபாய் அங்கு வந்தார். காந்திஜி செய்து கொண்டிருந்த வேலையையும் அவர்கள் கைகளில் படிந்திருந்த அழுக்கையும் பார்த்ததும் ஆத்திரங்கொண்டு "இந்த வேலைக்கெல்லாம் உங்களை யார் கூப்பிட்டார்கள், இந்த இடத்தை விட்டுப் போங்கள்" என்று சீறிக்கொண்டு, காந்திஜியின் கைகளிலிருந்த தேங்காய் நாரைப் பிடுங்கிக்கொண்டு பாத்திரங்களைத் தேய்க்க ஆரம்பித்தாள். காந்திஜி சிரித்துக்கொண்டே குமரப்பாவை நோக்கி "நீ அதிருஷ்டசாலி. உன்னை அடக்கி ஆளுவதற்கு உனக்கு இம்மாதிரி மனைவியில்லையே" என்று கூறியவண்ணம் வேறு வேலையில் ஈடுபட்டார்.

—*Caravan*,

பாகவத உதயம்

வியாச மகரிஷி நர்மதா நதி தீரத்தில் ஒரு நாள் காலையில் அனுஷ்டானங்களை முடித்துக் கொண்டு ஆஸனத்தில் வந்து அமர்ந்தார்.

'நாராயணா' என்ற கானம் வானவீதியில் கேட்டது. அண்ணாந்து பார்த்தார். அடுத்த நிமிஷம் திரிலோக சஞ்சாரியான நாரத மகரிஷி வீணையை மீட்டிக்கொண்டு, வந்து இறங்கினார்.

நாரதரை உபசரித்து, ஆஸனம் அளித்தார் வியாசர். இருவரும் சிறிது நேரம் சம்பாஷித்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது நாரதர்:

" சந்திரனில் களங்கம் போல், தேஜசுடைய உமது முகத்தில் கவலை ஏற்படக் காரணம் என்ன ?" என்று கேட்டார்.

" நாரத மகரிஷே! வேதங்களையெல்லாம் வகுத்துக் கொடுத்தேன். பிரம்ம சூத்திரம் செய்தேன். பல புராணங்களை வழங்கினேன். ஆனாலும் என் மனம் நிம்மதி அடையவில்லை. சாந்தி பெறவில்லை" என்றார் வியாசர்.

" வியாச மகரிஷே! நீர் யாராலும் செய்யமுடியாத சிறந்த காரியங்களைச் செய்தீர். ஆனாலும் பக்தியை வளர்க்கும் பகவானுடைய சரித்திரங்களையும், கல்யாண குணங்களையும் இன்னும் பாடவில்லை. இதனால் தான் உமக்கு ஆத்ம சமாதானம் ஏற்படவில்லை. ஆகையால் பாகவதத்தைப் பாடும்" என்று சொல்லிவிட்டு, நாரதர் விடை பெற்றுச் சென்றார். வியாசரும் பாகவதத்தைச் செய்தார்.

உலக உபகாரமாகப் பல நூல்களை இயற்றிய வியாசர் பாகவதத்தையும் செய்யவேண்டும் என்ற பகவானுடைய சங்கல்பத்தால் வியாசருக்கு சமாதானம் உண்டாகாமல் இருந்தது.

இன்னொரு வழியாகப் பார்த்தால், அறிவு தெளிந்து, அறிவு நூல்களைச் செய்த வியாசர் அன்பு பெருகி அன்பு நூல்களையும் செய்யவேண்டும். அறிவின் தெளிவினாலே, மூளையின் வளர்ச்சியினாலே எவ்வளவு வியக்கத்தக்க வேலைகளைச் செய்துவிட்டாலும் கூட சமாதானம் உண்டாகிவிடாது. அன்பு வளரவேண்டும். அப்பொழுது தான் சமாதானம்

உண்டாகும் என்று இதில் தெளிவாகிறது.

பறவை இறக்கைகளினால்தான் பறக்கிறது. அதுவும் இரண்டே இறக்கைகள் தான்!

நமக்கு அறிவு, அன்பு இரண்டும் இறகுகள். அறிவுக்கு இருப்பிடம் மூளை. அன்புக்கு இருப்பிடம் இருதயம். இரண்டும் சமமாக வளரவேண்டும். அன்பில்லாமல் மூளை மட்டும் வளர்ந்தால் 'தான்' என்ற அகம் பாவம் வளர்கிறது. பிறரை, அலட்சியம் செய்கிறோம்; பிறர் சுக துக்கத்தை உணர முடியாமல் கொடுமை வளர்கிறது.

அறிவில்லாமல் அன்பு மட்டும் வளர்ந்தால் மூட பக்தி வளர்கிறது. பிறர் கட்சியை உணர முடியாமல் கொடுமையே வளர்கின்றது.

அறிவில்லாவிட்டால் தெளிவு இல்லை. அன்பு இல்லாவிட்டால் சமாதானம் இல்லை. இரண்டுமில்லாத வாழ்க்கை மிருக வாழ்க்கை தான்.

இன்றைய உலகம் மூளை வளர்ச்சியைத்தான் அதிகம் பெறுகிறது. இருதய வளர்ச்சி போதவில்லை,

புத்தி வளர்ந்திருக்கிறது. அணுவைப் பிளந்து அழிக்கும் குண்டுகளைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். பரஸ்பரம் அழித்துக் கொள்ள சர்வ ஆயத்தம் நாம் செய்துகொண்டு இருக்கிறோம். சமாதானம் ஏற்பட வழி என்ன?

அன்பு வளரவேண்டும். இதனால் சகிப்புத்தன்மை வளரும். நாம் வாழ்வதோடு பிறரும் வாழ வேண்டும் என்ற விசால நோக்கம் வளரவேண்டும். அப்பொழுதுதான் உலகத்திலும் நம் மனத்திலும் சமாதானம் உண்டாகும்.

உலகத்தில் இந்த உணர்ச்சியைப் பெருக்கவே தான் அநேக அறிவு நூல்களைச் சிருஷ்டித்த வியாசர் அன்பு நிறைந்துள்ள பாகவதத்தையும் இயற்றினார்.

—எம். கே. எஸ்.



அன்பால் அரசாண்ட அசோகர்

சரித்திரப் பிரபஞ்சத்தில் தோன்றும் அரசர்கள் எல்லோரையும்விட மிகச் சிறந்தவர் அசோகர். சீனாவிலும் திபேத்திலும் இவர் நினைவை அன்புடன் கொண்டாடுகின்றனர். இவர் போற்றிய மதத்தை அகற்றிய பாரதமும் இவரைக் கொண்டாடுகிறது. —H. G. WELLS

தர்மத்தையும் ஒழுக்கத்தையும் கடைப்பிடித்தே அசோகர் பிரஜைகளின் வாழ்க்கையை அமைக்க முயற்சித்தார். சீல வாழ்விற்கு அடிப்படை குடும்பமென்பதே அசோகரின் கொள்கை.

மதத்தையும் தர்மத்தையும் அனுஷ்டிப்பதற்குள்ள பயிற்சியை குடும்ப அங்கத்தினர்களோடு நாம் பழகும் முறையிலிருந்து பெறலாமென்பதே இவர் அபிப்பிராயம். பெற்றோர்களோடும் ஆசிரியர்களோடும் மரியாதையாக நடப்பது மனிதனின் கடமை. துறவிகள், யோகிகள், உறவினர்கள், நண்பர்கள், சிப்பந்திகள், ஏழைகள், நோயாளிகள், துன்பமடைந்தவர்கள் எல்லோரிடமும் பழகுவதற்கு ஒரு தனி மரியாதை உண்டு. இந்த மரியாதைகளையெல்லாம் நன்கு கற்றுக்கொண்டவர்கள் உலக வாழ்க்கைக்கு தானாகவே தகுதியாகிவிடுகிறார்கள் அல்லவா! இப்படித்தான் வாழ்க்கையை நடத்துவதற்குக் குடும்பத்திலேயே பயிற்சி பெறலாமென்பதை அசோகர் ஸ்திரப்படுத்தினார்.

எல்லா வகுப்பினர்களிடையேயும் ஒற்றுமையை வளரச் செய்வதில் மிகவும் ஆர்வங் கொண்டவர் அசோகர். பிற மதங்களைப் போற்றுவதில் எல்லோரும் பயிற்சி பெற வேண்டுமென்பதில் ஆசை கொண்டவர்.

அவர் காலத்திலிருந்த வகுப்புப் பிரச்னைகளை யொழிப்பதற்கு அவர் கீழ்க்கண்ட மார்க்கங்களைக் கையாண்டார் :—

1 எல்லா மதங்களின் சாரத்தையும் போற்றுவது.

2. பிற மதங்களைத் தூஷிப்பதைத் தடுப்பது

3. வெவ்வேறு மதாச்சாரியார்களைக் கொண்ட சதஸ்களை அடிக்கடி கூட்டுவது.

4. எல்லோருக்கும் எல்லா மதத் தத்துவங்களையும் கற்றுக் கொடுப்பது.

அசோகர் அநேக மதங்களின் தத்துவங்களைத் தானே கற்றுக் கொண்டு பிறருக்கு ஒரு படிப்பினையாக விளங்கினார்.

ஜீவராசிகள் அனைத்திடமும் அஹிம்சையைக் கையாள வேண்டுமென்பது அசோகரின் கொள்கை. படிப்படியாக தான் மாமிசம் புசிப்பதை நிறுத்தி இதிலும் வழிகாட்டியாயிருந்தார். யுத்தத்தை அறவேயொழிப்பது மனிதனின் தர்மமென்று கோஷமிட்டார். பிற ராஜ்யங்களை யுத்தத்தால் அடக்குவதற்குப் பதிலாக அன்பால் அணைத்துக் கொள்வதற்கு உலகமெங்கும் தூதர்களை அனுப்பி வைத்தார்.

சமாதானத்திற்கும் சகோதரத்துவத்திற்கும் இன்றைய தலைவர்களுக்கு நூற்றுண்டுக் கணக்காய் வழி காட்டியாக விளங்குகிறார் அசோகர்.

—Radha Kumud Mookerji in *Book University Journal*

உத்தம நண்பன் !

உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த மொகல்சராய் ரயில்வே நிலையத்தில் ஒரு குமாஸ்தாவின் உயிரைக் காப்பாற்றுவதற்காக அவர் வளர்த்த நாய் தன்னுயிரைத் தியாகஞ் செய்திருக்கிறதாம். ஒரு இரவு அவர் நித்திரை செய்துகொண்டிருந்தார். நாய் அவர் கட்டிலின் கீழ் படுத்துக்கொண்டிருந்தது; குமாஸ்தா நித்திரை செய்துகொண்டிருந்த கட்டிலிலே ஒரு பாம்புவரும் சத்தங்கேட்டு நாய் விழித்துக்கொண்டது. பாம்பைக் கண்டதும் அதன்மீது நாய் பாய்ந்தது, உடனே பாம்புக்கும் நாய்க்கும் பலத்த சண்டை ஏற்பட்டது. இந்த சண்டையின் சத்தங்கேட்டு குமாஸ்தா விழித்து எழுந்து உட்கார்ந்தார். அவர் எழுந்திருப்பதைப் பார்த்ததும் நாய் அவர் அருகில் ஓடிவந்தது. உடனே பாம்பு குமாஸ்தாவை நோக்கி மீண்டும் பாய்ந்தது. இதைத் தடுப்பதற்காக நாய் பாம்பின் அருகே வந்தது. அப்போது பாம்பு நாயைக் கடித்ததால் நாய் மாண்டது.

பஞ்சதந்திரக் கதையில் வரும் கீரியின் குருபக்தி இன்று மனிதர்களுக்கில்லாவிடினும் நாய்களுக்காவது இருப்பது ஒரு மகிழ்ச்சி தரும் உண்மையல்லவா ?

—*Hindustan Times*

ஜனத் தொகையைவிட வேகமாய்
மரத்தொகை வளர்ந்தால்—

வனம் வளர்ந்தால் வானம் பொழியும்

"உலகத்தில் அனைவரும் செய்யவேண்டிய முக்கிய காரியங்கள் மூன்று. 1. பிள்ளையைப் பெறவேண்டும்; 2. மரத்தை நடவேண்டும்; 3. கிணற்றைத் தோண்ட வேண்டும்"

—அரபு பழமொழி

ஒரு கவலையடிக்கும் கிணற்றைத் தோண்டுபவருக்கு 10 சாதாரணக் கிணறுகளைத் தோண்டிய புண்ணியம் உண்டு.

ஒரு ஏரியை நிர்மாணிப்பவனுக்குப் பத்துக் கவலையடிக்கும் கிணறுகளைக் தோண்டின புண்ணியம் கிடைக்கும். ஒரு பிள்ளையைப் பெறுபவனுக்குப் பத்து ஏரியை நிர்மாணித்த புண்ணியம் கிட்டுகிறது. ஒரு மரத்தை நடுபவருக்குப் பத்து பிள்ளைகளைப் பெற்ற புண்ணியம் சித்திக்கிறது. இது நம்நாட்டு வேதவாக்கியம்.

மரங்கள் செய்யும் நன்மைகள் இணையற்றது. அவை மழைக்குக் காரணமாகின்றன. மழைத் தண்ணீர் பூமியின் மேற்பாகமுள்ள மண்ணை அடித்துக் கொண்டு போகாமல் காப்பாற்றுகின்றன. ஒவ்வொரு மரமும் ஒவ்வொரு சிறிய அணைக்கட்டுப்போல் தண்ணீரைத் தேக்கம் செய்கிறது.

இவ்வளவு உபயோகமான மரங்களை நாம் எவ்வளவு அலட்சியம் செய்கிறோம்! போதியமட்டும் மரங்கள் இந்தியாவில் இல்லாமலிருந்தும் கூட மரங்களை ஏராளமாகக் கிராமவாசிகள் வெட்டித் தள்ளுகிறார்கள். நம் ஜனத்தொகை வளர வளர எல்லாக் கிராமங்களிலும் விறகுக்கென்றே காடுகளை பிரத்தியேகமாக வளர்க்கவேண்டும்.

மலைப் பிரதேசங்களிலுள்ள பூமி பழ மரங்கள் வளருவதற்கும் காடுகளை அமைப்பதற்கும் மிகவும் ஏற்றதாகும். மலைப் பிரதேசங்களுக்குச் சென்று உணவுப் பயிர்களைப் பயிரிடுவதனால் காலப்போக்கில் உணவுப் பொருள்களின் உற்பத்தியும் க்ஷீணிக்

கிறது. காடுகளும் மறைந்து போகின்றன. மழைத் தண்ணீரில் மண்ணையெல்லாம் அடித்துக்கொண்டு போய்விடுகிறது. மத்திய அமெரிக்காவில் பழைய காலத்தில் வசித்துவந்த ஒரு 'மயன்' என்ற வகுப்பாரின் சரித்திரம் என் நினைவிற்கு வருகிறது. ஒரு காலத்தில் இந்த வகுப்பார் சுபிட்சமாகவும் புகழ்பெற்றும் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் கட்டியிருக்கும் ஆலயங்களுக்கும் ஈடே கிடையாது. அவை யாவும் பாழடைந்து கிடக்கும். இன்றைக்கும் அவற்றைப் பார்ப்போர்களுக்கு அதிசயமுண்டாகிறது. சோளம் என்ற தானியத்தை இவர்கள் தான் முதன் முதலில் பயிரிட்டார்கள். அநேக நூற்றாண்டுகள் இவர்கள் செல்வந்தர்களாய் வாழ்ந்தார்கள்.

இவர்களுக்குக் கால்நடைச் செல்வமே கிடையாது. இதனால் இவர்களுக்கு உரம் தேவையில்லாதிருந்தது; காடுகளை வளர்க்க வேண்டிய அவசியமுமில்லாதிருந்தது.

ஆயிரம் வருஷ காலத்திற்கு இவர்கள் சோளத்தை உண்டார்கள். சோளத்தைப் பயிரிட்ட பூமி காடுகளைப் பலிகொண்டது பூமியின் மேற்பாகத்திலுள்ள மண் மறைந்ததனால் 'மயன்'கள் வசித்த இடங்கள் பாலைவனங்களாக மாறி 'மயன்' என்ற வம்சமே ஒழிந்துவிட்டது.

விவசாய ஆராய்ச்சி நிபுணர்கள் கூறுகிறபடி பூமி, மரங்கள், சீதோஷ்ண நிலை இவை மூன்றும் ஒன்றோடொன்று இணைக்கப் பெற்றவை. மரங்களை வெட்டி உணவுப் பொருள்களை பயிரிட்டால் சில காலத்திற்கு உணவுப் பொருள்களை அதிகரிக்கலாம். காலப்போக்கில் உணவுப் பொருள்களும் மரங்களும் மறைந்துவிடும். பிறகு அங்கு தோன்றுவது பாலைவனம்தான்!

இரண்டாயிரம் கோடி மரங்கள் நம் நாட்டுக்குத் தேவை. ஒரு வருஷத்தில் ஐந்து கோடி மரங்கள் நட்டால் கூட ஒரு நூற்றாண்டில் ஐநூறு கோடி மரங்கள்தான் ஆகும். நம் நாடு சுபிட்சமாய் விளங்குவதற்கு இன்னும் எவ்வளவு பணி செய்ய வேண்டியிருக்கிறதென்பது இதிலிருந்து புலனாகும்.

ஒவ்வொரு பிறப்பின்போதும், ஒவ்வொரு திருமணத்தின் போதும், ஒவ்வொரு இறப்பின்போதும் ஒரு மரத்தை நட்டால் நம் நாடு அளவற்ற நன்மையடையும். *—K. M. Munshi*

க்ஷயம், இருமல், வயிற்றுக் கோளாறு முதலியவை சிகரெட் பிடிப்பதால் ஏற்படுகிறதோ இல்லையோ, வேறு அநேக வழிகளில் இந்த சிகரெட்டு மனிதனுக்கு கொடுந் தீமையை விளைவிக்கிறது.

கொலைகார சிகரெட்டு

●

சிகரெட்டு பிடிப்பவர்களின் அசிரத்தையினால் விளையும் பெரும் ஆபத்துகளுக்களவேயில்லை.

ஒரு பெண்மணி தன் விவாகத்திற்காக மாதாகோயிலுக்குப் போவதற்குத் தயாராகிக் கொண்டிருந்தாள். விவாகத்திற்கான பிரத்தியேக ஆடை பட்டினால் செய்தது. பட்டோ சாதாரணப் பட்டு அல்ல! வானத்தில் சஞ்சரிக்கும் மேகத்தைப்போலவும், அன்ன பக்ஷியின் இரக்கைகளைப்போல் மிக மிருதுவாகவும், கண்ணைப் பறிக்கும் துய வெள்ளை நிறமும் வாய்ந்தது.

மிக ஆவலுடன் பெண்மணி அதைத் தரித்துக்கொண்டாள். தன் அழகிய உருவத்தைக் கண்ணாடியில் பார்த்துக்கொண்டு மகிழ்ச்சியடைந்தாள். நடனமாடியவாறே தன் தந்தையை "அப்பா, அப்பா" என்று சப்தமிட்டு அழைத்தாள். தன் அருமை மகள் அடையப்போகும் அதிருஷ்டத்தை நினைத்து மதிமயங்கிக் கிடந்த தந்தை, அவள் சிங்காரத்தைப் பார்த்து ஆநந்தங்கொள்ள ஓடோடியும் வந்தார். கையிலிருந்த சிகரெட்டை பெண்ணுக்குப் பின்னால் மேஜைமீதிருந்த ஒருதட்டில்வைத்துவிட்டு தன் பெண்ணைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தார். இவ்வளவு அழகிய பெண்ணை அடைந்த பாக்கியத்திற்காக மனதால் கடவுளுக்கு நன்றி செலுத்தினர். பெண்ணின் சிங்காரத்தை நோக்கிக் கொண்டிருந்தபொழுது, மணமகன் வீட்டிலிருந்து பெண்ணை அழைத்துக்கொண்டு போகவந்த ஆட்கள் வாசலிலிருந்த அறிவிப்பு மணியை அடித்தார்கள். கதவைத் திறப்பதற்கு மிக அவசரமாக ஓடினர் தந்தை. அவர் கதவைத் திறந்து வந்தவர்களுக்கு உபசாரம் கூறும்முன்னமே "ஐயோ" என்ற குரல் அவர் காதில் இடிபோல் விழுந்தது. அவர் பெண்ணின் அருகில் சென்றதும் அவர் கண்டது மணப்பெண் அல்ல! அக்னி

ஜ்வாலையால் சூழ்ந்து மரண வேதனை அநுபவிக்கும் துரதிருஷ்டத்திற்காளான ஒரு பெண்மணியே.

இது எப்படி நேர்ந்ததென்று தந்தை திடுக்கிட்டார். இது எவ்வாறு நேர்ந்ததென்பதின் உண்மை எவருக்கும் தெரியாது தான். ஒருவேளை, பெண்மணி நடனமாடிக்கொண்டிருக்கும்போது அவளுடைய ஆடை அவள் தந்தை வைத்திருந்த சிகரெட்டின் மீது பட்டு, சிகரெட்டுப் பொறி ஆடை மீது விழுந்து, ஆடையையும் அவளையும் அக்னிக்கு இரையாக்கி யிருக்கலாம். அது எப்படியானுலும் சரி, மங்கள வைபவத்தன்று நடைபெற்றது மணப்பெண்ணின் புதையல் சடங்குதான்.

1946–ஆம் ஆண்டு ஜூன் மாதம் 6-ந் தேதி சிகாகோவிலுள்ள ஒரு ஹோட்டல் தீயினுல் நாசமடைந்தது. 61 ஆட்கள் விபத்தில் மாண்டனர். எவரோ, தான் பிடித்துக்கொண்டிருந்த சிகரெட்டை அலட்சியமாக விட்டெறிந்ததனுல் நேர்ந்த விபத்தென்று பிறகு தெரியவந்தது.

நான்கு தினங்களுக்குப் பிறகு இதே நகரத்திலுள்ள இன்னெரு ஹோட்டலும் அக்னிக்கு இரையாயிற்று. இந்த ஹோட்டலில் சிகரெட்டுத் துண்டுகளையெல்லாம் காகிதத்தில் ஒரு பொட்டலம் கட்டி மூலைகளில் போட்டு வைப்பது வழக்கமாயிருந்ததாம்.

1947-ம் வருஷத்தில் அமெரிக்காவிலுள்ள ஒரு துறைமுகத்தில் தீ விபத்தினுல் ஒரு கப்பல் மூழ்கியது. இதனுல் 512 பேர்களுக்கு உயிர்ச் சேதமும் கோடிக்கணக்கான ரூபாய் விலை மதிப்புள்ள பொருள்களுக்கு நஷ்டமும் ஏற்பட்டன. இந்தக் கப்பலில் சிகரெட்டைப் பிடிக்கக் கூடாதென கட்டுப்பாடு இருந்திருந்தால் இந்த நஷ்டம் ஏற்பட்டிராது. மேல் நாடுகளில் தினந்தோறும் சிகரெட்டு மூலம் தீ விபத்துகள் நிமிஷத்திற்கொன்று ஏற்படுகிறதென்று கூறுகிருர்கள். இந்த தீ விபத்துகளினுல் அநேக கோடி ரூபாய்கள் விலைமதிப்புள்ள பொருள்கள் வருஷந்தோறும் சேதமாகின்றன.

பொருள் நஷ்டத்தைவிட மிகப் பெரிய நஷ்டம் மனிதர்கள் மாள்வதும் அவர்களுக்கேற்படும் அங்கஹீனங்களும்தான்.

சிகரெட்டே பிடிக்கக்கூடாதென்ற கட்டுப்பாடுள்ள ஒரு தொழிற்சாலையில் தொழிலாளி ஒருவன் ஒளிவு மறைவாக இருந்து

கொண்டு சிகரெட்டு பிடித்தான். மறைவில் நின்றுகொண்டு சிகரெட்டு பிடித்துக் கொண்டிருக்கும்போது எவரோ வருவது போல் காலடிச் சத்தங்கேட்டது. மிக அவசரத்தோடு அவன் நின்றிருந்த மூலையில் கிடந்த குப்பைக் கூளத்தருகே பற்றவைத்த சிகரெட்டை விட்டெறிந்தான். முக்கால் மணி நேரத்திற்குப் பிறகு அந்தத் தொழிற்சாலை அக்னியால் சூழப்பட்டது. 28 வாலிபர்கள் மரணமடைந்தனர். காரணம் ஒரு வாலிபன் விட்டெறிந்த சிகரெட்டுத் துண்டு!

ஒருநாளிரவு ஒருவர், தான் பிடித்துக் கொண்டிருந்த சிகரெட்டை அருகிலிருந்த மேஜை மீது வைத்துவிட்டு புஸ்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தார். மேஜை மீது அவரது துப்பாக்கியும் அதில் குண்டுமிருந்ததை அவர் மறந்துவிட்டார். சிகரெட்டிலிருந்து வந்துகொண்டிருந்த புகை துப்பாக்கிக்குள் புகுந்து அந்த உஷ்ணத்தால் குண்டு இவர் கையை நோக்கிப் பாய்ந்தது. இவர் அதிருஷ்டசாலியானதால் குண்டு இவர் கையை நோக்கிப் பாய்ந்தது.

மற்றொரு நபர் அலட்சியமாய் மேஜை மீது வைத்திருந்த சிகரெட்டுத்துண்டை ஒரு கிளி அவர் இருக்கும் அறையில் கட்டியிருந்த கூண்டிற்குத் தூக்கிக்கொண்டு போயிற்று. அதிருஷ்டவசமாகக் கிளிக் கூட்டிலிருந்து புகை வரத் தொடங்கியதும் இவருக்கு நடந்த விஷயம் தெரியலாயிற்று. அப்போது இவர் நித்திரையிலிருந்திருந்தால் இவர் கதி என்னவாயிருக்கும்?

மோட்டார் ஓட்டிக்கொண்டவாறே சிகரெட்டைப் பற்றவைத்ததினால் ஒரு நபரும், அவர் மனைவியும் மூன்று குழந்தைகள் கொண்ட அவர் குடும்பமும் எதிர்பாராமலே ஒரே கணத்தில் உயிரிழந்தனர். சிகரெட்டு பற்ற வைக்கும் சமயத்தில் எதிரே நன்கு பார்க்காததால் பாதையோரத்திலிருந்த ஒரு மரத்தின் மீது மோட்டார் மோதி, ஒரு சிகரெட்டுக்கு இந்த குடும்பம் பலியாக நேர்ந்தது.

ஒரு எழுத்தாளர் சிகரெட்டுக்கு 'கொலைகாரன்' என்று பெயர் வைத்திருக்கிறார். இரவும் பகலும் ஓய்வேயில்லாமல் வீட்டிலும் பாதையிலும் ஹோட்டலிலும் ரயிலிலும் மோட்டார் காரிலும் தொழிற்சாலையிலும் மனித பலிக்காகக் காத்துக் கொண்டேயிருக்கிறதாம் இந்த 'கொலைகார' சிகரெட்டு.

———

போதாத காலம்!

●

பொதுஜன உபயோகத்திற்காக அமைக்கப்பட்டிருக்கும் மணிக் கூண்டுகள், நம் நாட்டில் அநேக நகரங்களில் உண்டு. மணியைச் சரியாகத் தெரிந்துகொள்வதற்கு மக்கள் சாதாரணமாக இம்மாதிரி மணிக்கூண்டுகளை எதிர்பார்ப்பதில்லை. உதாரணமாக டில்லியிலுள்ள மணிக்கூண்டுகள் புரியும் குறும்புகளைக் கேளுங்கள்:

"புதுடில்லி கானட் சர்க்கஸ் ரயில்வே புக்கிங் ஆபீஸிலுள்ள கடிகாரப் கால வித்தியாசங்களை உணரும் மனித நிலையைத்தாண்டி தியானத்துடன் அசைவற்று நிற்கத் தொடங்கி அநேக மாதங்களா கின்றன! "இந்தக் கடிகாரம் 'ரிப்பேரி'லிருக்கிறது" என்ற சீட்டு அதன்மேல் ஒட்டப்பட்டுள்ளது. இந்தக் கடிகாரத்தை இப் படியே வைத்துக்கொள்வதில் என்ன பயன் என்று புரியவில்லை.

"சப்ஜிமண்டியிலுள்ள மணிக்கூண்டைப் பார்த்துப் பழக்க முள்ளவர்களுக்குச் சரியான மணி தெரிந்துகொள்ள முடியாதென் பதைச் சொல்லத் தேவையேயில்லை. வாரத்தில் இரு தடவைகள் இக்கடிகாரம் 'வேலை நிறுத்தம்' செய்துவிடுகிறது. அதனால் அது சரி யான நேரத்தை எப்போது காட்டுகிறதென்பதே ஜனங்களுக்குத் தெரியாது".

இர்வின் ஆஸ்பத்திரி கடிகாரம் ஒரு "அவசரக் குடுக்கை" அது எப்போதும் நேரத்தை அரை மணியோ முக்கால் மணியோ அதிகமாகவே காட்டும். டில்லி நகர கட்டிடத்திலுள்ள கடிகாரத் திற்கு நான்கு முகங்கள்; ஒவ்வொரு முகமும் வெவ்வேறுவிதமான மணியைக் காண்பிக்கும். சென்னைவாசிகளுக்கும் இந்த விநோத மான அனுபவம் சகஜமானதுதானே!

—*"Hindustan Times"*

புஸ்தகம் படிக்கையில் தூக்கம் வரும்

அசோகா உற்சாகம் தரும்

அஸ்ஸாமின் அவதி

சென்ற மாதம் அஸ்ஸாம் மாகாணத்து மக்களுக்கு ஒரு மிகப் பரிதாபகரமான நிலை ஏற்பட்டது. பிரமபுத்திரா நதியின் வெள்ளப் பெருக்கினால் அநேக ஆயிர சதுரமைல்கள் கொண்ட பிரதேசங்களிலுள்ள கால்நடைகள், மக்கள், கட்டிடங்கள் முதலியவற்றிற்குப் பெரும் நஷ்டமேற்படுவது நூற்றாண்டுகள் கணக்காய் சகஜமானது. ஆனால் சென்றமாதம் ஏற்பட்ட பிரமபுத்திரா நதி வெள்ளப் பெருக்கத்திற்கும் சாதாரணமாக ஏற்படும் வெள்ளப் பெருக்கத்திற்கும் வித்தியாசம் உண்டு. அஸ்ஸாமில் சில வருஷங்களுக்கு முன் சம்பவித்த பூகம்பம் மூலம் அங்கு பலவித மாற்றங்கள் ஏற்பட்டு மேடான பிரதேசங்களெல்லாம் தூர்ந்து பள்ளமாகிவிட்டன. பள்ளத்திலிருந்த பிரதேசங்களெல்லாம் மேடாய்விட்டன.

இம்மாதிரி இயற்கையிலேயே ஏற்பட்ட மாற்றங்கள் மூலம் பிரமபுத்திரா நதிப் படுகையும் மிகவும் உயர்ந்துவிட்டது. சாதாரணமாக முன் காலங்களில் பிரமபுத்திரா நதியில் 25 அல்லது 30 அடி மட்டத்திற்குத் தண்ணீர் இருந்தால், பூகம்பத்திற்குப் பிறகு அந்த ஆழம் எட்டல்லது 10 அடி அளவிற்குக் குறைந்துவிட்டது. இப்படிக் குறைவதால் ஏற்படும் விளைவென்னவென்றால் பிரமபுத்திராவில் வெள்ளப் பெருக்கு சீக்கிரம் ஏற்படுவதுதான்.

ஹிமாலயத்தில் உயர்ந்த பிரதேசங்களில் கோர மழை பெய்த காரணத்தால் திடீரென்று பிரமபுத்திராவில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு முன்னெச்சரிக்கையில்லாமலே நாலாபக்கமும் பிரவாகமானதால் அளவில்லாத கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதுவரையில் பிரமபுத்திராவில் ஏற்ட்ட வெள்ளப் பெருக்குகளினால் உயிர்ச்சேதமும் கால்நடைகள் நஷ்டமும் தான் அதிகமாக ஏற்பட்டிருக்கின்றன. பூகம்பத்தின் விளைவால் ஏற்பட்ட பிரவாகம் அஸ்ஸாம் மாகாணத்தில் திப்ருகார் நகரை மிகத் தீவிரமாகப் பாதித்துவிட்டது.

நகரின் ஒரு பாகத்தையே வெள்ளம் அடித்துக்கொண்டு போய்விட்டது. இதனால் அநேக கட்டிடங்கள் இருந்த இடம் தெரியாமற் போய்விட்டன. இப்படி ஏற்படலாமென்று எதிர் பார்த்து அதிகாரிகள் பிரமபுத்திரா நதிக்கரையில் ஏழு லக்ஷ ரூபாய் செலவில் ஒரு மடை கட்டிவைத்திருந்தார்கள்.

வெள்ளத்தின் தாக்குதலில் இந்தமடை தகர்ந்தது, திப்ருகார் வாசிகளுக்கெல்லாம் முன்னெச்சரிக்கை கொடுத்து அவர்கள் வேறிடங்களில் வசிப்பதற்குத் தற்காலீகமாக அதிகாரிகள் ஏற்பாடு செய்தனர்.

அஸ்ஸாமில் சென்ற மாதம் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கத்தின் அளவிற்கு அநேக தலைமுறைகளாக ஏற்பட்டதேயில்லையென்று தான் சொல்கிறார்கள். ஐரோப்பாவிலும் மேற்கு ஆசிய நாடுகளி லும் இந்த வருஷம் வெள்ளப் பெருக்கம் ஏற்பட்டுள்ளது. ஆனால் இந்த வெள்ளப்பெருக்கம் இந்தியாவிலும் சீனாவிலும் ஏற்பட்ட வெள்ளப்பெருக்குக்கு இணையாகாது.

மழையே பெய்யாத திபேத் ராஜ்யத்தில்கூட இந்த வருஷம் வெள்ளப்பெருக்கம் ஏற்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் பொது வாக ஒரு காரணம் உண்டு என்று தான் கொள்ளவேண்டும்.

வட இந்தியாவிலுள்ள முக்கியமான இரு நதிகள் கங்காவும், பிரமபுத்திராவும் ஆகும். இவ்விரு நதிகளால் பாதிக்கப்படும் மாகாணங்கள் கிழக்கு உத்தரப் பிரதேசம், வடக்கு பீகார், மேற்கு வங்காளத்தின் வடக்கு பாகம், அஸ்ஸாம், நேப்பாளம், ஸிக்கிம், பூட்டான் முதலியவையாகும்.

பீகாரிலும் அஸ்ஸாமிலும் ஏற்பட்ட வெள்ளப்பெருக்குப் பற்றித்தான் இதுவரை நமக்குத் தகவல் கிட்டியுள்ளது. இந்த இடங்களிலெல்லாம் இந்த வருஷம் மழை மிகவும் சொற்ப மாகத்தான் பெய்திருக்கிறது. ஆனால் பீகாரிலும் அஸ்ஸாமிலும் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கைப் பார்க்கும்போது இந்த நதி தீரப் பிரதேசங்களில் சம்பவிக்கக்கூடிய நிகழ்ச்சிகளை நினைத்தாலே பயமாய்த்தானிருக்கிறது!

மழை பெய்ததனால் மட்டும் ஏற்படும் வெள்ளப்பெருக்கினால் மக்களுக்கு நிகழ்கின்ற கஷ்ட நஷ்டங்களுக்கு வழி தேட இன்ஜினீ

யர்களால் முடியும். இம்மாதிரி எதிர்பார்க்க முடியாத விதத்தில் ஏற்படும் வெள்ளப் பெருக்கை தடுக்க வழிதேடுவது தான் இந்த மாகாணங்களின் இன்றைக்குள்ள பெரிய தலைவலி.

இயற்கையில் ஏற்படும் நிகழ்ச்சிகளை நம்மால் தடுக்கமுடியாது. கூடுமானவரையிலும் அவற்றைத் தெரிந்துகொண்டு அவற்றிற்கு நிவாரணம் தேட முயற்சிக்கத்தான் நம்மால் முடியும்.

அஸ்ஸாம் முதலிய மாகாணங்களில் இயற்கையாகவுள்ள பூமியின் ஏற்றத்தாழ்வு நிலைகளைப் பற்றிய முழுத் தகவல்வகளு மில்லை. ஓரளவுக்கு இந்தத் தகவல்கள் அதிகாரிகளிடம் கிடைத்த வுடன் பூகம்பம் முதலிய இயற்கை நிகழ்ச்சிகளால் இந்தத் தகவல் களே பொய்யாகிவிடுகின்றன.

வெள்ளப்பெருக்கால் ஏற்படும் நாசங்களைக்கண்டு அவை மனிதனின் சத்துருவென்று நினைப்பது தவருகும். வெள்ளப்பெருக் கத்தால் நாட்டுக்கு மிக நன்மையுண்டு. பீகார், அஸ்ஸாம் மாகா ணங்களிலுள்ள பூமியின் செழிப்புக்குக் காரணம் வெள்ளப் பெருக்கமே.

கங்கையும் பிரமபுத்திராவும் மிகப் புனிதமான நதிகள். இவற்ருல் நமக்கு தீங்குகள் நேரிட்டாலும் இவற்றின் மீது வெறுப் புக் கொள்ளக்கூடாது. பூமிக்கு உயிரும் மனிதனுக்குப் புண்ணிய மும் தரும் இந்நதிகளை அடக்குவதற்கும் அவை புரியும் தீமை களைத் தடுத்து நன்மைகளை அதிகரித்துக்கொள்வதற்கும் வழி தேடுவதே நம் கடமையாகும்.

—ஜவஹர்லால் நேரு

பஞ்ச கனிகள்

1. எலுமிச்சம் பழம் :

இதற்கு ராஜ கனி என்ற பெயருண்டு. இது போல் மக்களுக்கு உதவக்கூடிய கனி இல்லை என்றுகூட கூறலாம். பித்த மயக்கம், வாந்தி, அதிக தாகம், பிடிப்பு, பக்கசூலை, மகோதரம், பைத்தியம், வயிறு மந்தம் முதலிய வியாதிகளைக் கண்டிப்பதில் இக்கனி முதன்மை பெற்றது.

வெந்நீரில் ஒரு எலுமிச்சம் பழச் சாற்றுடன் தேனாவது, சக்கரையாவது கலந்து இரவில் உணவுண்டு படுக்கைக்குப் போகுமுன் பருகினால் சீதளம், சீதளஜுரம், நெஞ்சில் கரகரப்பு நீங்கும் வெந்நீரில் எலுமிச்சம் பழ சாற்றை கலந்து சர்க்கரை சேர்க்காமல் உணவுண்டு படுக்கைக்குப் போகுமுன் பருகினால், அஜீரணம் நீங்கும் ; பாரிசவாயுவும் குணமாகும்.

ஒரு எலுமிச்சம்பழச் சாற்றுடன் இரு தேக்கரண்டி சுத்தமான தேன் கலந்து புசித்தால், இருமல், உள்நாக்கு வளர்ச்சி நீங்கும்.

ஒரு எலுமிச்ச பழச் சாற்றுடன் சிறிதளவு சர்க்கரை சேர்த்து விடாமல், ஔடதம் நாலு மண்டலம் சாப்பிட்டால், நரைக்கத்தக்க வயோதிகம் நீங்கி இளமையோடிருக்கலாம். இதனால்தான் பெரியோர்கள் இதற்கு ராஜ கனி என்ற பெயரைச் சூட்டினர்போலும்.

2. ஆரஞ்சு பழம் :

இரத்தத்தை சுத்தி செய்வதில் இணையற்றது. நாவிற்கு ருசியைத்தரும். ஆனால் உணவிற்குப் பின்பு தான் இக்கனியைப் புசித்தல் வேண்டும். நல்ல ஜீரண சக்தியை உண்டாக்கி உடலுக்கு சுகத்தை அளிக்குப். நோயினால் பீடிக்கப்பட்டு மிகவும் மெலிந்தவருக்கு இக்கனி சஞ்சீவி போன்றது. இதனால் இருமல், மார்பு நோய், ஈரல் நோய், நீரிழிவு முதலியவை பாஸ்கரனைக் கண்ட பனிபோல் மறைந்துபோகும். நோயாளிகள் பழச் சாற்றையும், மற்றவர்கள் கனியையும் புசித்தல் வேண்டும்.

சோகை, கணச்சூடு, மாந்தம் இவற்றால் பீடிக்கப்பட்ட சிறு குழந்தைகளுக்கு ஆரஞ்சுப் பழ ரசத்துடன், திராக்ஷைப் பழ ரசமும் கலந்து (சமபாகம்) காலை, மாலை உபயோகித்து வந்தால் மேற்சொன்ன வியாதிகள் உடனே நிவாரணமாகும். குழந்தை

களுக்கு பாலுடன் ஆரஞ்சு பழச்சாற்றைக் கலந்து கொடுத்து வந்தால், வயிற்றுக் கோளாறு ஒரு நாளும் அண்டாது. ஆனல் புளிப்பு ஆரஞ்சுப் பழத்தை உபயோகிக்கக்கூடாது.

3. மாதுளம் பழம் :

வெடித்த மாதுளம் பழத்தின் சாற்றைப் பிழிந்து மெல்லிய துணியால் வடிக்கட்டித் தகுந்த அளவு சீனக்கற்கண்டு சேர்த்து சாப்பிட, சூட்டின் வெப்பம் தணிந்து குளிர்ச்சி ஏற்படும். பெண்களுக்கு ஏற்படும் சூதக வாத வியாதிகளையும், வாந்தி, வாயில் நீர் சுரப்பு, கசப்பு, மாந்தம், வீக்கம், நெஞ்செரிச்சல், நீங்கா மயக்கம், அதிஜுரம், மாதர்களுக்கு ஏற்படும் மலட்டு நோய்கள் முதலியவை நீங்கி தேக ஆரோக்கியத்தைக் கொடுக்கும்.

4. தக்காளிப் பழம் :

நமது உணவு வகையில் மிகவும் பிரசித்தி பெற்றுத் திகழ்வது தக்காளிப்பழம். வைத்தியர்களால் பொன்போல் போற்றப்படுவது தக்காளி ஒன்று தான். இதனல் அநேக வியாதிகளும் நிவர்த்தியாகின்றன. நீர்ரோகம் வியாதியஸ்தர்களுக்கு அமிர்தசுரபிக்கொப்பானது. இரத்தத்தை மிகச் சிறப்பாக சுத்தி செய்யும். உடலுக்கு வேண்டிய உப்புச் சத்துக்கள் நிறைந்திருக்கின்றன. வைடமின் A, என்ற ஜீவசத்துகள் இதில் அதிகம் இருக்கின்றன. தேக வளர்ச்சிக்கு தக்காளிப்பழம் முதன்மை ஸ்தானம் பெற்றது. அதுவுமின்றி அய சத்தும் மூளைக்கு வேண்டிய பாஸ்பரசும் இப்பழத்தில் இருக்கின்றன. பதார்த்த வகைகளில் வேண்டியமட்டும் இதைச் சேர்க்கலாம்.

5. பேரீச்சம் பழம் :

இதன் அறிய குணத்தை அறிந்தவர்கள் சிலர்தான். இதை அரபு நாட்டில் ஆகாரமாகவே புசிக்கின்றனர். தாதுவிருத்திக்கு பேரீச்சம்பழம் மிகச் சிறந்ததாகும்.

தூசி இல்லாத ஐந்து அல்லது ஆறு சுளைகளை எடுத்து ஒரு பாத்திரத்தில் போட்டு பகல் நேரத்தில் அதற்கேற்ற தண்ணீரை ஊற்றி வைத்துவிடவேண்டும். இரவு போஜனத்திற்குப்பின்பு, அதை நன்ருகப் பிசைந்து (வேறு தண்ணீர் விடாமல்) அதிலிருக்கும் நீரை உட்கொண்டால் தேகத்திற்கு வலிமையையும் நரம்புகளுக்கு வீரியத்தையும் கொடுக்கும்.

—நாமகிரி ஸ்ரீநிவாசன்

சேற்றில் கிடந்தாலும்
மாணிக்கம் மாணிக்கமே

ராவணன் ராமனுக்கு கற்பித்தது

"ராவணன் மிகவும் பக்திமான். அவன் மீதிருந்த ஒரு சாபத்தால் தான் ராக்ஷதனுகப் பிறந்தான்.

"இப்பொழுது பிரமாஸ்திரத்தால் தாக்குண்டு மண்மீது சாகும் தருவாயிலிருக்கிருன். அவன் உயிரைவிடுவதற்குமுன்பு நான் அவனைச் சந்தித்துப் பேசவேண்டும்" என்று நினைத்தவாறே ராமர் தன் சகோதரன் லக்ஷ்மணனை அழைத்தார். லக்ஷ்மணன் அருகில் வந்ததும், ராமர் இவ்வாறு கூறினர். "நான் சொல்வதை மிக ஜாக்கிரதையாய்க் கேள், லக்ஷ்மணு. நாம் ராஜ பரம்பரையைச் சேர்ந்தவராயினும் நம் தந்தையிடம் ராஜ தந்திரத்தைக் கற்றுக் கொள்ளவில்லை. நான் வெகுநாளாக ராஜ தந்திரத்தைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்று ஆசை கொண்டிருந்தேன். ஆனல் விதி அதற்கு வழி விடவில்லை. அரசனுக்குரிய கடமைகளை நான் அறியேன்.

"அரசனுடைய அந்தஸ்திற்கு எது தகுதி, எது தகுதியில்லை என்பதையும் நான் அறியேன். ஏனென்றல் இதைக் கற்றுக் கொடுப்பதற்கு எனக்கெவருமில்லை. ராவணனே நூற்றண்டுகள் கணக்காக தன் ராஜ்யத்தை ஆண்டு ராஜ தந்திரங்களில் நன்கு தேர்ச்சி பெற்றவன்.

"ராஜ தந்திரத்தில் ராவணன் மிகவும் நிபுணனென்பது ஏழுலகும் அறியும். அவன் ராக்ஷதப் பிறவியாதலால் எவ்வளவோ தீங்குகளைப் புரிந்திருக்கிறன். ஆனல் புத்தியுள்ள அரசனுய் விளங்கினன். அவன் உயிர் வெகு சீக்கிரத்தில் போய்விடும். அதற்கு முன்பு அவனிடமிருந்து ராஜ தந்திரங்களைப் பற்றிச் சிறிது அறிய வேண்டுமென்ற ஆவல் எனக்கிருக்கிறது."

"சேற்றில் கிடந்தாலும் மாணிக்கம் மாணிக்கம்தான் என்பது தானே வேதவாக்கு. இதைக் கேட்ட லக்ஷ்மணன் மிக வேகமாய் பிரமாஸ்த்திரத்தால் தாக்குண்டு சாகும் தருவாயிலிருக்கும் ராவணனைக் சந்திக்க ஓடினன். லக்ஷ்மணனைக் கண்ணுற்ற

ராவணன், "லக்ஷ்மணா, நான் பெரும் பாபி, நான் செய்த தவறு களை மன்னித்தருளவேண்டும்" என்று தாழ்மையுடன் கேட்டுக் கொண்டான்.

இதற்கு லக்ஷ்மணன் நடந்த காரியங்களுக்கு "உன்னைப்பழிப் பதில் என்ன பயன்? எல்லாம் விதியின் விளையாட்டு; நீ இலங்கையின் அரசன். மிகப் படிப்பாளி; ராஜ தந்திரத்தில் உபதேசம் கோருவதற்காக என் தமையனார் ராமர் என்னை உன் னிடம் அனுப்பி வைத்துள்ளார்" என்று கூறினார்.

ராவணன்:—"ராமனுக்குத் தெரியாதது ஒன்று உலகத்தி லிருக்கிறதா? அவனுக்கு என்னால் என்ன கற்றுக்கொடுக்க முடியும்? ஆனாலும் ராமன் ஆக்ஞைப் பிரகாரம் அவரது அடிமை யான நான் எனக்குத் தெரிந்ததெல்லாம் அவருக்குக் கற்றுக் கொடுக்கத் தயார். ஆனால் என் பிரபு இங்குதான் வரவேண்டும், அவரிடஞ் சென்று அவரைத் தரிசிக்க எனக்கு இப்போது இயலாது."

உடனே லக்ஷ்மணன் ராமரிடம் சென்று, "ராவணன் என்னி டம் மிக தாழ்மையுடனும், மரியாதையுடனும் பேசினான். உங்களைக் காண ஆவலாயிருக்கிறான். படுகாயமடைந்திருப்பதனால் அவனால் நகரக்கூட முடியவில்லை" என்றான்.

லக்ஷ்மணன் சொற்களைக் கேட்ட ராமன் உடனே ராவணன் குற்றுயிராய்க்கிடந்த இடத்திற்கு விரைந்தான். காயத்தால் ராமனை வணங்கமுடியாததால் மனசால் ராமனை நமஸ்கரித்தான், அடைந்த காயங்களால் பொறுக்க முடியாத வேதனையை அநுபவித்துக் கொண்டிருந்தான். எதிரே நிற்கும் ராம வடிவத்தின் சௌந்தர்யத் தைக் கண்களால் பருகியவாறே, "மனித உருவம் கொண்ட அமரனே, உங்கள் பெருமையை யாரே அறிவர்? அனாதரக்ஷகா, ஆபத்பாந்தவா, எனக்கு அருள்புரியுங்கள், என்மீது இருந்த சாபத் தால் நான் ராக்ஷசனாகப் பிறக்க நேரிட்டது என் அசுர ஹிருதயம் நன்மைக்கும் தீமைக்கும் உள்ள வேற்றுமையை உணரவேயில்லை.

நான் செய்த தவறுகளுக்கெல்லாம் என்னை மன்னிக்க வேண்டும். ரகுவம்ச திலகனுக்கு கற்றுக்கொடுக்க நானா தகுதி? என் பிரபுவுக்குத் தெரியாததும் ஒன்றுண்டா."

ராமன்:—"அதெல்லாம் உண்மையாயினும் கற்றுக்கொள்வது எல்லோரையும் சேர்ந்த கடமையல்லவா? நீ வயதில் முதிர்ந்தவன் பழுத்த உலகானுபவம் வாய்ந்தவன். புகழ்பெற்ற அரசன்; மூவுலகையும் உன் பலத்தால் அடக்கியாண்ட வீரன்; ராஜ்யத்தை யாளும் ரகசியத்தை உன்னிடமிருந்து அறிந்துகொள்ள நான் விரும்புகிறேன்."

ராவணன்:—"என் உயிர் போய்க்கொண்டே யிருக்கிறது. என்னல் பேசமுடியவேயில்லை; எனினும் என் பிரபுவின் கட்டளைக்கிணங்கி இரண்டொரு வார்த்தைகள் சொல்கிறேன். என் அநுபவங்களினுல் நான் கற்றுக்கொண்ட ஒரு மிகப் பெரிய தத்துவம் இதுவாகும். "நற்காரியம் எதையாவது செய்ய விரும்பினல் அதை உடனே செய்யுங்கள். சற்றேனும் தயங்கவேண்டாம். ஒரு விநாடிகூட வீணுக்க வேண்டாம். உடனே செய்யாத நற்காரியத்தைப் பிறகு செய்வது கடினமாய்விடும். இதற்கு அத்தாட்சியுங் கூறுகிறேன்.

"ஒரு நாள் நான் ஆகாயத்திலிருந்து வரும்போது நரகலோகத்தைப் பார்த்தேன். ஒரு வாசலில் புண்ணியாத்மாக்கள் உல்லாசமாக இருந்து கொண்டிருந்தார்கள். மற்றொரு வாசல் இருளால் மூடப்பட்டிருந்தது. இருளடைந்த வாசலுக்குள்தான் எண்பத்திநான்கு நரகக் குழிகள்; இவற்றில்தான் பாபிகளுக்குத் தண்டனை யளிப்பது. பாபிகள் தலையைத் தூக்கினல் யமதூதர்கள் அவர்கள் தலைகளில் அடிப்பார்கள். இதைக்கண்டு என் மனங் கலங்கிற்று. பாபிகளின் துயரங்களை நீக்க நான் மிகவும் ஆவல் கொண்டேன். நான் இலங்கையை யடைந்த பிறகு தினந்தோறும் "இதை நாளைக்குச் செய்யலாம், நாளைக்குச் செய்யலாமென்றிருந்தேன். இப்படி வெகு நாட்கள் கழிந்தன. பிறகு உன் விரோதத்திற்குப் பாத்திரமானேன். நான் செய்யத் தீர்மானித்திருந்த காரியத்தை அன்றே செய்திருந்தால் அந்த நல்ல காரியம் அப்பவே முடிந்திருக்கும். அப்படிச் செய்யாததால் நான் அடைந்த மனோவேதனைக்களவேயில்லை.

"இன்னும் சொல்கிறேன், கேளுங்கள் பிரபுவே! பொன் பூமியான இலங்கையைச் சுற்றி உப்பு நீரைக்கொண்ட சமுத்திரம் ஏன் இருக்கவேண்டுமென்று ஒரு நாள் எனக்குத் தோன்றிற்று.

பிரமா சிருஷ்டித்த ஏழு சமுத்திரங்களில், பாற்கடல், தயிர்க்கடல், நெய்க்கடல் என்ற மூன்றிருக்கும்போது என் ராஜ்யத்தைச் சுற்றி உப்பு நீர்க்கடல் ஏன் இருக்கவேண்டும்? உப்பு நீரையெல்லாம் வற்றவைத்து நெய்க்கடலை இங்கு கொண்டுவரலாமென்று நினைத்தாலும் தினந்தோறும் அந்த வேலையை நாளைக்கு, நாளைக்கு என்று தள்ளி வைத்துக்கொண்டேயிருந்தேன். உங்களை விரோதித்துக்கொண்ட பிறகு அந்த வேலையைச் செய்ய முடியவேயில்லை. இன்றும் அது எனக்கு ஒரு தீராத வேதனைதான். அதனால் தான் உடன் செய்யாத நல்ல காரியத்தை செய்யவே முடியாதென்று நான் கூறும் காரணம்.

பிரமாவின் சிருஷ்டியில் அநேகவிதப் பிறவிகள்; சிலர் பூமியிலே வாழ்கின்றனர்; சிலர் வாயுமண்டலத்திலே வாழ்கின்றனர்; சிலர் ஆகாயத்திலே வாழ்கின்றனர். சிருஷ்டியிலுள்ள பிறவிகள் யாவும் ஆகாய உலகத்தில் சேருவதில் தான் விருப்பம். ஆனால் சிலருக்குத்தான் அதிருஷ்டமும் யோக்யதையும் கிடைக்கிறது. இந்தப் பிறவிகளின் மீது எனக்கு மிகவும் இரக்கமிருந்ததனால் எல்லோருக்கும் ஆகாய லோகத்திற்கு நேரடியாகப் போகும் ஒரு பாதையை விஸ்வகர்மாவிடஞ் சொல்லி நிர்மாணிக்கத் தீர்மானித்தேன். ஆனால் இதையும் நாளைக்கு, நாளைக்கென்று தள்ளிப் போட்டுக்கொண்டுவந்தேன். இதைமட்டும் அன்றே செய்திருந்தால் எனக்கு எவ்வளவு புண்ணியங் கிடைத்திருக்கும்? ஆகாய லோகத்திற்குப் போவதற்கு விருப்பமுள்ள எத்தனை கோடி ஜனங்கள் மடமடவென்று ஆகாய லோகத்திற்குச் சென்று என்னை வாழ்த்தியிருப்பார்கள்? அதையும் அப்போதே செய்யாததால் அதைப் பற்றியும் ஒரு தீராத மனோவேதனை என்னைப் பீடித்துள்ளது.''

ராமன்:—''இலங்காதிபதியே! நற்காரியங்களை உடனுக்குடன் செய்ய வேண்டியதைப் பற்றி எனக்கு வேண்டிய உபதேசஞ் செய்துவிட்டாய், தீங்கான காரியங்களை விரைவாகச் செய்வதால் விளையும் தீமையைப் பற்றியும் எனக்குச் சற்று விளக்கவேண்டும்.

ராவணன் :—'' இந்த விஷயத்தைப் பற்றி அளவற்ற தீங்கு புரிந்த என்னால் எவ்வளவோ கூறமுடியுமே. ஆனால் இப்பொழுது என் உடல் உள்ள நிலைமையில் அதிகம் பேச முடியாது. ஒரே ஒரு

உதாரணம் மட்டும் கூறுகிறேன். லக்ஷ்மணன் சூர்ப்பனகையின் மூக்கையும் காதையும் அறுத்தவுடனே சீதையைப் பலாத்காரமாக அபகரிக்கத் தீர்மானித்தேன். இரண்டொரு தடவைகள் இன்றைக்கு வேண்டாம்; நாளைக்குத் தான் போவோமே என்று நான் நினைத்த துண்டு. ஆனால் நல்ல காரியங்களைத் தள்ளி வைத்ததுபோல் இதை நான் தள்ளிவைக்கவில்லை. வெகு சீக்கிரம் சென்று சீதாபிராட்டி யையும் எனக்குப் பிற்காலத்தில் நேரப்போகும் சீர்கேட்டையும் அழைத்து வந்தேன். என் குலத்தோரெல்லாம் நசித்தாய்விட்டது. நானும் யமனுடன் போராடிக் கொண்டிருக்கிறேன். என் தங்கை யின் தீய எண்ணத்தை நான் பூர்த்தி செய்யாமலே யிருந்தால் எனக்கு இந்தக் கதி ஏற்பட்டிருக்குமா ?

என் பிரபுவே! நன்மையைப் பற்றியும் தீமையைப் பற்றியும் எனக்குத் தெரிந்ததெல்லாம் சொல்லிவிட்டேன்.''

ராவணனின் பேச்சு இடறியது. மூடிக் கொண்டிருக்கும் கண் களால் ராமனின் பாத கமலங்களை ஒற்றிக்கொண்டான், ராம நாமத்தை உச்சரித்தவாறே ராவணனின் ஆத்மா பிரிந்தது.

—Sudha Mazumdar in Bhavan's *Book University Journal.*

தன்னடக்கமே யோகம்

கீதையில் பகவான் கூறியுள்ள பிரகாரம் யோகம் என்பது தினந்தோறும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மூச்சைப் பிடிப்பதோ அல்லது மனித சமூகத்தினின்று ஒதுங்கியிருப் பதோ அல்ல. யோகம் என்பது வாழ்க்கையின் தன்மையே யாகும். யோகம் என்பது, வாழ்க்கையில் ஒவ்வொரு அம்சத் திலும் தன்னடக்கத்தை அப்பியசித்து, சமூகத் தொண்டுக்கு தேகத்தையும் மனத்தையும் பண்படுத்துவதுமாகும். பண்பாட்டின் அடிப்படை, தன்னடக்கம். அழகு, மதம், நாக ரிகம் இந்த மூன்றின் ஐக்கியம் தான் தன்னடக்கம்.

—ராஜாஜி

மேல் நாட்டு இலக்கியப் பிரபஞ்சத்தில் நிலவியிருந்த ஒரு சுவையான அம்சம்.

இவரும் ஒரு கவி

●

ராமாயணத்தை இயற்றிய வால்மீகி இளம் வயதில் ஒரு வழிப்பறிக் கொள்ளைக் காரனுயிருந்தாராம். இவர் ஞானம் பெற்ற பிறகு இராமாயணத்தை இயற்றியதோடு ஒரு பெரும் முனிவராகவும் மாறினர். தெய்விகச் சாகுந்தலத்தை இயற்றிய காளிதாஸர் இளம் வயதில் ஆடு மேய்ப்பவனக இருந்ததாகத் தான் வரலாறு கூறுகின்றது.

இம்மாதிரி உலகமெங்கும் கொண்டாடப்படும் இலக்கியக் கர்த்தாக்கள் அநேகரின் வாழ்க்கை மிகவும் மோசமாய் இருந்ததாக சரித்திரத்தில் அத்தாட்சிகள் உண்டு.

இலக்கியங்களை இயற்றுவது சரஸ்வதி தேவியின் கடாக்ஷத்தினுல் தான் என்பது பாரத மக்களின் நம்பிக்கை. இந்தக் கடாக்ஷத்தைப்பெறுவோர்கள் வாழ்க்கையின் தரத்கை உயர்த்த வேண்டிய கடமையையும் பெற்றவர்களென்ற நம்பிக்கை நம் நாட்டில் வளர்ந்தது. இதனுல் தான் மோசமான வழிகளில் வாழ்க்கையை நடத்திக்கொண்டிருந்தவர்கள் கூட ஸ்தோத்திரங்கள், பாடல்கள் முதலியவற்றை இயற்றத் தொடங்கிய பின்னர் இவர்கள் பக்தர்களாகவும் சத்காரியங்களில் ஈடுபடுபவர்களாகவும் மாறிவிடுகிருர்கள்.

எழுத்துத் திறமை, கடவுளின் அருளால் மட்டுந்தான் மனிதனுக்குக் கிடைக்குமென்ற நம்பிக்கை மேல் நாடுகளில் கிடையாது. சில நூற்ருண்டுகளுக்கு முன்பிருந்த சில பிரபல எழுத்தாளர்கள் சதாபஞ்சமாபாதகங்களான காரியங்களிலீடுபட்டே தங்கள் ஆயுள் பூராவையுங் கழித்தார்கள். மகத்தான இலக்கியங்களென்று இன்றும் கருதப்படும் கவிதைகள், நாடகங்கள் முதலியவை இயற்றும் சமயத்தில் இவற்றின் கர்த்தாக்கள் கொலை, கொள்ளை, வழிப்பறி, விபசாரம் முதலிய தீங்கான காரியங்களிலேயே ஈடுபட்டிருந்தார்கள்.

மேற்கூறியவற்றிற்கெல்லாம் தக்க உதாரணமாவார் பிராங்காய் வில்லாண் என்ற ஒரு பிரெஞ்சுக் கவி. விபசாரிகளின் வீடுகளில் மட்டுமே சற்று இன்பத்தைக் கண்ட இவர் இரு பிரபல கவிதை நூல்களை இயற்றியுள்ளார். இவர் பதினைந்தாம் நூற்ருண்டில் பிறந்தவரானுலும் இவரைப் பற்றி "பலவிதக் கட்

டுக் கதைகள் வழங்கி வருகின்றன. இவர் தோற்றத்தைப் பற்றிக்கூட விதவிதமான தகவல்கள் உள்ளன. சிலர்கூறுகிறபடி இவர் குள்ளமாகவும் பருமனாகவும் உள்ள மனிதர். மற்றுஞ் சிலரின் அபிப்பிராயப்படி ஒல்லியாயும், உயரமாகவுமுள்ளவர். நீரே கண்டறியாததும் அடர்த்தியானதுமான தலைரோமங்கள் கொண்டவர்.

இம்மாதிரி ஒரு தகவலும் திட்டமாக இல்லாத கவியைப் பற்றி ஒரு தகவல் மாத்திரம் திட்டமாக உள்ளது. அது என்னவென்றால் இவர் பெயர் வில்லாண் அல்ல என்பதே.

இவர் தந்தை ஒரு கூலிக்காரராயிருந்தார். ஒரு குழந்தையை வளர்ப்பதற்கு இவருக்குச் சக்தியில்லாததால் இந்தச் சிறுவனை ஒரு தூர பந்துவிடம் ஒப்படைத்தார். அந்தப் பந்து இந்தச் சிறுவனை மாதாகோயில்பாதிரியாக்கவேண்டுமென விரும்பினார். ஆனால் சிறுவன் பெரியவனானதும் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றான். அதனால் பாதிரியாவதற்குச் சற்றேனும் விருப்பமில்லை. கல்வி கற்றுக்கொண்டிருக்கும்போதே கெட்ட சகவாசத்திலும் தீச்செயல்கள் புரிவதிலும் அபிலாஷை கொண்டவராயிருந்தார். பூட்டுகளை உடைப்பதில் நிபுணத்துவம் பெற்றிருந்த ஒரு கொல்லனின் மகன்தான் வில்லாணின் மிக நெருங்கிய நண்பன். இவருடைய பந்து இரவு வேளைகளில் வெளியில் சென்று கெட்டுப்போகக் கூடாதென்பதற்காக இவர் நித்திரை செய்யும் அறையைப் பூட்டிவைப்பது வழக்கமாயிருந்தாலும் வில்லாண் பூட்டை உடைக்கும் தன் நண்பனின் உதவியால் அறையைவிட்டு வெளியேறி விபசாரிகளின் வீடுகளில் இரவு முழுவதும் கழித்துவந்தார். இந்தப் பூட்டை உடைக்கும் நண்பன் 1460–ம் ஆண்டில் கொள்ளைக் குற்றத்திற்கும் கற்பழித்த குற்றத்திற்கும் தூக்கிலிடப்பட்டான். வில்லாணின் வேறு சில நண்பர்களும் தூக்கிலிடப்பட்டார்களென்பதைக் கூறினால் இவர் சகவாசத்தையும், வாழ்க்கைத் தரத்தைப் பற்றியும் வேறென்ன கூற வேண்டும்?

மாதாகோயில் பாதிரியார் வேலையை இவர் விரும்பாததால் வயிறு வளர்க்க வேறு வழியைத் தேடினார். திருடிய பொன், வெள்ளிப் பொருள்களை உருக்குவதில் நிபுணனான ஒரு பொற்கொல்லன், பாதிரி வேலையிலிருந்து நீக்கப்பட்ட ஒரு காலி, ஒரு விபசாரித் தரகன், இரு விபசாரிகள், முதலியோர் அடங்கிய ஒரு கோஷ்டியை யமைத்துப் பணம் சம்பாதிக்கும் வழியைத் தேடலானார் வில்லாண். இவர் காதலித்த விபசாரிகளைப் பற்றியெல்லாம் இவரே கவிதைகளியற்றியுள்ளார். அநேக கவிதைகளில் இவர்குறித்துள்ள ஒரு ஸ்திரீ மற்றொருவரின் காதலில் ஈடுபட்டு அந்தக் காதலன்

18672

வில்லாணை அடிக்க நேர்ந்தது. அதிலிருந்து இந்த ஸ்திரீ இவரது கவிதைகளில் ஒரு ராக்ஷஸியாகவே சித்திரிக்கப்பட்டாள். இப்படி மற்றொரு மனிதனால் அவமானப்படுத்தப் பட்டதால் இவர் பாரிஸ் நகரத்தை விட்டே வெளியேறினார். புகழ் பெற்ற இவரது காவியமொன்று இச் சமயத்தில்தான் எழுதப்பட்டது.

இவரைப்பற்றி ஒரு ருசிகரமான தகவல் என்னவென்றால் இவர் சதா கவிதைகளைப் பாடிக்கொண்டோ எழுதிக்கொண்டோ இருப்பாரென்பதாகும். விபசாரிகள் வீட்டில் உல்லாசமாயிருக்கும் போதும் மது அருந்திக் கொண்டிருக்கும் போதும் சந்தர்ப்பத்திற்குத் தகுந்தவாறுள்ள கவிதைகளை நிமிஷத்தில் பாடிவிடுவார்.

ஒரு சந்தர்ப்பத்தில் வீதியில் ஒரு சச்சரவில் அகப்பட்டுக் கொண்டார். அந்தச் சச்சரவில் வில்லாண் ஒரு பாதிரியைக் கொன்றுவிட்டார். மாதா கோயில் பாதிரி உத்தியோகத்திற்காக தலை உச்சியில் ரோமங்களை எடுத்துவிட்டிருந்தார். பாதிரி அடையாளமுள்ளவர்கள் கொலை புரிந்தாலும் அவர்களுக்கு மரண தண்டனை கிடையாது. இதனால் வில்லாண் உயிர் தப்பியது. ஆனால் மற்றொரு கொலைக்காகப் போலீசாரிடம் சிக்கிக்கொள்வாரென்று அவருக்குத் திட்டமாகத் தோன்றியதால் அவர் பாரிஸ் நகரத்தையே விட்டு நாடோடியாகத் திரிந்து வந்தார்.

ஒரு நகரத்தில் திருட்டு, கொள்ளை முதலிய வேலைகளிலீடுபட்டிருந்த ஒருவன் நாட்டுப்புறத்திற்குச் சென்று எப்படிப் பிழைப்பது? அதற்கும் வில்லாண் வழி காண்பித்திருந்தார். நாட்டுப்புறங்களிலுள்ள மாதாகோயிலில் இரவு நேரத்தில் புகுந்து அங்குள்ள உண்டியல் பெட்டிகளைத் திருடியும் விவசாயிகளின் வீடுகளுக்குச் சென்று பிச்சையெடுத்தும் சில வருஷங்கள் தள்ளினார். பின்னர் போலீசாரிடம் அகப்பட்டுக்கொண்டு சிறைத்தண்டனையடைந்தார்.

பதினோரும் லூயி சக்ரவர்த்தியின் மகுடாபிஷேக வைபவ சம்பந்தமாக அநேக குற்றவாளிகளை விடுதலை செய்த போது வில்லாணையும் விடுதலை செய்தனர்.

இந்தப் பிரெஞ்சுக் கவிக்கு மானமாக வாழத் தெரியாததனால் மறுபடியும் ஒரு கொலை வழக்கில் அகப்பட்டுக் கொண்டு சிறைக்குச் செல்லவேண்டியதாயிற்று. இத்தடவை இவருக்குத் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டது. இவருடைய தூரபந்துவின் முயற்சியால் தூக்குத் தண்டனை ரத்தாகி தீவாந்திர சிக்ஷையாக மாற்றப்பட்டது. இந்த தண்டனையிலிருந்து இவர் விடுதலையடைந்த பின்னர் இவர் எங்குசென்றாரென்றும் இவருக்கு என்ன

நேர்ந்ததென்றும் ஒன்றுமே தெரியாது. மாயமாகவே மறைந்து போனர்!

இதுவரை கூறியது ஒரு கவியின் கதையா, அல்லது ஒரு குற்றவாளியின் கதையா, என்ற சந்தேகத்திற்குக் காரணமுண்டு. நாலைந்து நூற்றாண்டுகள் முன்பு வரையிலும் ஐரோப்பாக் கண்டத்திலிருந்த கவிகளும் மற்ற எழுத்தாளர்களும் அநேகமாக மோசமான வாழ்க்கையி லீடுபட்டிருந்தவர்கள் தான். இதற்கு முக்கிய காரணம் அக்காலத்தில் பேனவால் உயிர்வாழ முடியாதென்பது தான். புத்தகங்களுக்கு விற்பனை வளர வளர எழுத்தாளர்களும் பேனவிலேயே பிழைப்புப் பெறலாம் என்ற நிலைமை ஏற்பட்டது. இதற்குப் பிறகு தான் எழுத்தாளர்களின் வாழ்க்கை சிறப்படைந்தது.

மண்ணிலும் மருந்து!

ஹிருதயத்தைப் பாதிக்கும் வியாதிகள், நீர் ரோகங்கள், வாயு சம்பந்தமான வியாதிகள், விஷப்புண்கள் முதலியவற்றிற் கெல்லாம் ஒன்றுபோல் சஞ்சீவியாயிருக்கும் பென்ஸிலினுக்கு மூலம் பூஞ்சகாளான் ஆகும். இது தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு மருந்தாகும்.

பூஞ்சகாளான் மனிதரால் வெறுக்கப்பட்ட ஒரு பொருளானலும் அதிலிருந்து இவ்வளவு உபயோகமான மருந்து கிடைத்ததனல் இம்மாதிரி வேறு பொருள்களிலிருந்தும் மருந்துகள் கிடைக்குமோவென்ற ஆராய்ச்சி நடந்தது. இம்மாதிரி ஆராய்ச்சிகளைப் பெரும்பாலும் மருந்துகளை உற்பத்தி செய்யும் கம்பெனிகளே தங்கள் எராளமான செலவிலேயே செய்கிருர்கள். இந்த ஆராய்ச்சிகளிலிருந்து தீராத நோய்கள், க்ஷயரோகம், கண்கள், காதுகள், இவற்றைப் பாதிக்கும் நோய்கள்—இவற்றிற்கெல்லாம் இப்போது பிரபலமாயுள்ள அநேக மருந்துகள் கிடைத்துள்ளன. நோய்களை உற்பத்தி செய்யும் புழுக்களை ஒழிக்க வேறு பொருள்கள் மண்ணிலேயேயிருக்கிறதாம். பிரத்தியேகமாக சவங்களைப் புதைக்குமிடங்களிலுள்ள மண்ணில் இம்மாதிரி மனிதனுடைய தீராத நோய்களைத் தீர்க்கும் பொருள்கள் பல உண்டு. இம்மாதிரியான அற்புத மருந்துகள் மனிதனின் நோய்களைக் குணமாக்குவது போல் தாவர வர்க்கங்களின் வளர்ச்சியை அதிகப்படுத்துவதற்கும் பிராணி இனங்களின் நோய்களைக் குணப்படுத்துவதற்கும் மிகவும் உபயோகமானவை. இந்தத் துறையில் ஆராய்ச்சிகள் இன்னும் நடந்துகொண்டிருக்கின்றன.

தந்தியில்லாத் தந்தி!

கம்பியில்லாத் தந்தி மூலமாக ஒருவரோடொருவர் பேசிக் கொள்வது விஞ்ஞான வளர்ச்சி பெற்ற மனிதரால் தான் முடியு மென்று நினைப்பது தவருகும். ஏனென்றுல் அநேக ராஜ்யங் களிலுள்ள மலைவாசிகளுக் கிடையே கம்பியில்லாத் தந்தி மூலம் தகவல்களை அனுப்பும் பழக்கம் நூற்றுண்டுகளாக இருந்துவருகிறது.

விஞ்ஞான முன்னேற்றத்தி ஞல் கண்டுபிடிக்கப்பட்ட கம்பி யில்லாத் தந்திக்காவது சில இயந்திரக் கோளாறுகள் மூலம் தகவல் போய்ச் சேராமலிருக்க லாம். ஒன்றுக்குப்பதில்வேருெரு தகவல் சேரலாம். மலைவாசிக ளிடையேயுள்ள கம்பியில்லாத் தந்தி முறைகளில் ஒருவிதக் கோளாருே, தகராருே ஏற்படு வதேயில்லை.

இரண்டாம் மகாயுத்தத்தில் நடந்த ஒரு விமான விபத்தில் ஒரு அமெரிக்க மாது ஆஸ்தி ரேலியாவிற்கு வடபாகத்தி லுள்ள ஒரு தீவின் மலைப்பிர தேசத்தில் அகப்பட்டுக்கொண் டாள்.

அவள் விமானத்திலிருந்து கீழே விழுந்த சற்று நேரத்திற் குள் அமைதி குடிகொண்டிருந்த அந்தப் பிரதேசத்தில் ஒரு சப்தம் கேட்கத் தொடங்கியது. நிமிஷத் திற்கு நிமிஷம் சப்தம் அதிகரித் துக்கொண்டே வந்தது.

அது என்ன சப்தம் என்று அந்த மாதுக்குப் புரியவே யில்லை. அநேக நாய்கள்சேர்ந்து ஒன்ருகக் குரைப்பது போல் அவள் காதுக்கு கேட்டது. ஆனுல் சற்று நேரத்திற்கெல் லாம் அவளுக்கு உதவிபுரிய ஏராளமாகக் காட்டு மனிதர்கள் அங்கு வந்தார்கள். அவர்களை விசாரித்தபோது அங்கு நிலவி யிருந்த சப்தத்தின் காரணம் தெரிந்தது. விமான விபத்து நேரிடுவதைக்கண்டு உதவிபுரிவ தற்காகவே காட்டுவாசிகள் ஒரு குன்றிலிருந்து மற்ருெரு குன் றுக்குக் குரல் கொடுத்து தகவல் களைத் தெரிவித்து ஆட்களைச் சேர்த்ததாகக் கூறினுர்கள்.

சில ராஜ்யங்களில் காட்டு வாசிகளிடையே சில சம்பிரதா யங்கள் வழக்கத்திலிருந்து வரு கின்றன. உச்சஸ்தாயியில் சில நிமிஷங்கள்வரை நீண்டு கொண்டே போகும் சப்தத் தின் அர்த்தம் "நீ எங்கிருக் கிருய்" என்பதாகும். இதே போல சில நிமிஷங்களுக்கும் நீடிக்கும், ஒரு சப்தம். அதற்குப் பதிலாக வந்தால் "என்ன விஷ யம்? உனக்கு என்னவேண் டும்" என்று அர்த்தம். அதே உச்சஸ்தாயியில் நீடிக்காம லுள்ள குரலைக் கேட்டால், அதன் அர்த்தம்.

(1) "ரொம்ப சரி, விசேஷ மாக ஒன்றுமில்லை."

(2) "இங்குவா"

(3) "இந்த வழியே வா" என்று இப்படியெல்லாம் அர்த் தமாகும். இம்மாதிரி பலவித

சப்தங்களால் இந்த இனத்தார் தங்கள் நண்பர்களைப் பல சந்தர்ப்பங்களில் அழைக்கிறார்கள்.

அமெரிக்காவிலுள்ள சிவப்பு இந்தியர்களிடையே இம்மாதிரி குரல் மூலம் தகவல்களைத் தெரிவிப்பது சகஜம். மற்றொரு இனத்தாரிடம் சண்டைக்குப் போவதைத் தெரிவிக்க ஒரு குரல், சண்டையில் வெற்றி பெற்றுத் திரும்பும் அடையாளமாகவேறொரு குரல்.

இந்தியாவிலுள்ள காட்டுவாசிகளிடையேயும் இந்தக் கம்பியில்லாத் தந்தி பழக்கத்திலுள்ளது. ஒரு வீட்டின் கூரை மீதோ ஒரு குன்றின் மீதுள்ள பாறைமீதோ நின்றுகொண்டு ஒரு மனிதன் குரல் கொடுத்தால் அதிவேகமாக வேறு குன்றின் மீதுள்ளவர்கள் கேட்டு இதே குரலைக் கொடுப்பார்கள். இப்படிச் சில நிமிஷங்களில் தகவல்கள் வெகு தூரம் சென்றுவிடும்.

ஆப்பிரிக்காவிலுள்ள வனவாசிகள் வாயினால் குரல் கொடுப்பதோடு தகவல்களை அறிவிப்பதற்காகக் குழாய்களையும் உபயோகிக்கின்றனர். ஆபத்து நெருங்குங்காலத்தில் இனத்தார்களையெல்லாம் ஒன்று சேர்ப்பதற்குஒரு குழாய்; யுத்தத்திற்குப் புறப்படுவதற்கு எல்லோரையும் அழைப்பதற்காக மற்றொரு குழாய்.

சில வனவாசிகள் தகவல்களைப் பரப்புவதற்கு குழாய்களுக்குப் பதிலாக முரசுகளை உபயோகிக்கிறார்கள். விதவிதமான தகவல்களைப் பரப்புவதற்கு விதவிதமான குச்சிகளால் முரசு கொட்டி பலரக சப்தங்களை உண்டாக்குவார்கள்.

ஆப்பிரிக்கா கண்டத்திற்கு வெள்ளையர்கள், சிங்கம், யானை முதலிய காட்டு மிருகங்களை வேட்டையாடுவதற்கு அடிக்கடி செல்லுவது வழக்கம். புதிய இடங்களைக் கண்டுபிடிப்பதற்கும் அடிக்கடி வெள்ளையர்கள் ஆப்பிரிக்கப் பிரதேசங்களுக்கு வெகு நாளாகச் சென்று கொண்டிருக்கிறார்கள். இதனால் ஆப்பிரிக்காவிலுள்ள காட்டு வாசிகளுக்கு வெள்ளையர்கள் தங்களிருப்பிடங்களுக்கு எதற்காக வருகின்றனரென்று தெரிந்துகொள்ளமிகவும் ஆவல். முதன் முதலாக வெள்ளையர்களை வரவேற்கும் காட்டுவாசிகள் தங்கள் இனத்தாருக்கும் வேறு இனத்தாருக்கும் குரல் மூலமும் குழாய்கள் மூலமும் முரசுகள் மூலமும் தகவல்கள் கொடுத்துக்கொண்டேயிருப்பார்கள்.

இம்மாதிரி மனிதனுக்கு மனிதன் குரல்கொடுத்தோ அல்லது வேறு சின்னங்கள் மூலமாகவோ தகவல்களை பரப்புவது காட்டுமிராண்டித் தனமென்று நாம் நினைக்கவேண்டாம்!

கப்பல் தலைவன் ஒரு கப்பலிலிருந்து மற்றொரு கப்பலுக்கும், ரயில்வே நிலையங்களில் ஸ்டேஷன் அதிகாரிகள், டிரைவர்களுக்கும், தகவல்கள் கொடுப்பது கொடிகளை அசைத்தும், விளக்குகளைக் காட்டியும் தானே!

ஓசையால் வரும் நாசம்

நகரவாசிகள் அநுபவிக்கும் துன்பங்கள் அநேகம். ஜன நெருக்கடியால் ஏற்படும் இடநெருக்கடி, விலைவாசிகளின் உயர்வு, சாக்கடை நாற்றம், அசுத்த ஜலமும் அதனால் வியாதி இவைபோன்ற பல துன்பங்கள் நம் நாட்டிலுள்ள சிறு நகரங்களில்கூட சகஜமானவை. நம் நாட்டிலுள்ள பெரிய நகரங்களிலும் மேல் நாடுகளிலுள்ள எல்லா நகரங்களிலுமுள்ள மக்களும் மற்றொரு துன்பத்தையும் அனுபவிக்கவேண்டி யிருக்கிறது. அதுதான் சப்தம். மோட்டார் வண்டிகள் ஓடும்போது ஏற்படும் சப்தம், மோட்டார் லாரிகள் பஸ்கள் விளைவிக்கும் சப்தம், 'நகரங்களிலெல்லாம் ஓடும் டிராம்', மின்சார வண்டிகளின் சப்தம், ஆகாய விமானங்களின் சப்தம், தொழிற்சாலைகளிலிருந்து வரும் சப்தம் இப்படி நகரவாசமே சப்த மயமாக இருக்கிறது.

சப்தத்தினால் என்ன துன்பமென்று வாசகர்கள் கேட்கலாம். ஓயாமல் உண்டாகும் சப்தத்தினால் மனிதன் நரம்புகள் பாதிக்கப்படுகின்றன. காதுகளுக்கு மந்தம் உண்டாகிறது. தலைவலி ஏற்படுகிறதாம். நீரிழிவு போன்ற வியாதிகளும் சப்தத்தினால் உண்டாகலாமென்பது விஞ்ஞானிகளின் அபிப்பிராயம். புகை, மனிதனுக்குப் பெரும் பகையென்று 'திரட்டி'ன் முன்னொரு இதழில் படித்தீர்கள். புகையின் அளவுக்கு தீங்குகளை சப்தங்களும் விளைவிக்குமென்று தான் கூறவேண்டும்.

பக்கத்து வீட்டுப் பெண் சங்கீதம் பயிலுவதால் ஏற்படும் சப்தம் ஒரு பெரும் துன்பமாயிருந்த காலம் மலையேறிவிட்டது. இப்பொழுது நகரங்களில் இதைவிட லக்ஷம்பங்கு கொடிய சப்தங்கள் நிறைந்துள்ளது. மேல்நாட்டிலுள்ள அநேக நகரங்களிலும் ஆகாய விமானங்களின் சப்தத்தினால் இரவிலும் பகலிலும் அமைதியில்லாமல் போய்விட்டது.

ஆகாய விமானங்கள் அதிகமில்லாத நகரங்களில் வேறு விதமான சப்தங்களால் மனிதனுக்குப் பெருந் துன்பங்கள் உண்டாகின்றன. ஒரேகட்டிடத்தில் அநேக குடும்பங்கள் வசிப்பதனால் சப்தங்கள் அதிகமாவதற்குக் காரணங்கள் பல உண்டு. ஒவ்வொரு குடும்பத்திலுள்ளவர்களும் வேலைக்குப் போவதற்கும் வீட்டிற்கு வருவதற்கும் வேறு வேறுநேரங்

கள். பூட்ஸா காலடியால் ஏற் படும் 'டக்டக்' என்ற சப்தம் இல்லாத நேரமே கிடையாது. குழந்தைகளின் அழுகை, குடும் பத்தினரிடையேயுள்ள சச்சரவு கள், நண்பர்களிடையே உல் லாச சம்பாஷணை, ரேடியோ வின் அலறல் ஆகிய இவை நிறைந்த சூழ்நிலையில் அமைதிக் கிடமெங்கே?

அமைதியற்றதனால் மனித னுக்கு நேரும் நோய்களையும் துன்பங்களையும் நிபுணர்கள் வெகு விரிவாகச் சோதனை செய்து எந்தெந்த வழிகளில் சப் தங்களை சற்றுக் குறைக்கலா மென்பதை ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

புதுக் கட்டிடங்கள் கட்டும் முறைகளிலேயே சில மாற்றங் களைச் செய்தால் கட்டிடத்தில் வசிப்பவர்களை அவ்வளவாகப் பாதிக்காதென்பது சில நிபுணர் களின் அபிப்பிராயம். இதைத்தவிர கட்டிடங் களிலுள்ள கதவுகள், ஜன்னல் கள் முதலியவற்றைச் சப்தங் கள் உட்புகாதபடி அடைத்து வசதியுள்ளவர்களுக்கு அமைதி யளிப்பது மற்றொரு முயற்சி.

ஆகாய விமானங்கள் மோட் டார் வாகனங்கள் முதலிய வற்றிலெல்லாம் சப்தத்தைக் குறைக்கும் கருவிகளை அமைக்க வேண்டுமென்று மேல் நாடு களின் சர்க்கார்கள் படிப்படி யாக கட்டுப்படுத்தி வருகிறார் கள்.

ஐரோப்பாவிலுள்ள சில ராஜ் யங்களில் சப்தங்களின் சக்தி யை அறிவதற்கான கருவிகளை கொண்டு போலீசார் தெரு வெல்லாம் சுற்றுவார். அளவு மீறிய சப்தங்களுக்குக் காரண மானவர்கள் மீது நடவடிக்கை யெடுத்துக் கொள்கிறார்கள்.

அசோகா சுகந்த பாக்குத்தூள்

விலங்குகளையும் சர்க்கார் வாழ்விக்கவேண்டும்

வனாந்திரங்கள் அருகேயுள்ள கிராமங்களில் அடிக்கடி, புலி, சிறுத்தை முதலிய விலங்குகள் பிரவேசித்து மனிதனுக்கும் கால்நடைகளுக்கும் துன்பங்கள் விளைவிப்பதன் காரணமென்ன வென்பதைப் பற்றி அநேகர் சிந்திப்பதேயில்லை. வனாந்திரங்களில் வாழும் மான்களையும் மற்றும் ஆகாரத்திற்குரிய பிராணிகளையும் மனிதர்களே வேட்டையாடிக் கொன்று தின்றுவிட்டால் இவற்றையே புசித்து வளரும் காட்டு விலங்குகள் என்ன செய்யும்? வனாந்திரங்களுக் கருகேயுள்ள கிராமங்களிலிருக்கும் கால்நடைகளையும் மனிதர்களையும்தானே ஆகாரமாக்கிக்கொள்ள வேண்டும். இப்படி காட்டிலுள்ள இயற்கை நிலைமையில் மனிதனின் பிரவேசத்தால் மாற்றம் ஏற்படுகிறது. அதற்குள்ள தண்டனையை மனிதன் அனுபவிக்க நேரிடுகிறது.

மனிதர்கள் துப்பாக்கிகளோடு காடுகளுக்குச் சென்று மனம்போனபடி மிருகங்களைக் கொல்வதைச் சர்க்கார தடைசெய்யவேண்டியது மிகவும் அத்தியாவசியமானது. சமீபகாலம் வரையிலும் காண்டாமிருகங்களில் நம்நாட்டில் மூன்று ரகங்களிருந்தன. இதில் இரண்டு ரகங்களை வேட்டைக்காரர்கள் அறவே மறைய வைத்துவிட்டனர். மற்றொரு ரகம் அஸ்ஸாமில் மட்டும்தான் காணப்படுகிறது. இதுவும் உயிரோடிருப்பதற்குக் காரணம், சர்க்கார் இவற்றை வேட்டையாடக்கூடா தெனத் தடை விதித்திருப்பதால்தான். காட்டெருமைகள் மத்திய இந்தியாவிலிருந்தும் ஆந்திரப் பிரதேசங்களிலிருந்தும் மறைந்துவிட்டன. இப்போது ஒரிஸ்ஸாவில் மட்டும் அபூர்வமாகக் காணலாம். இவை போன்றேதான் கருத்தமான் என்ற மானினம் தக்காணத்திலிருந்தும் சௌராஷ்டிராவிலிருந்தும் மறைந்து அபூர்வமாகச் சில இடங்களில் மட்டும் காணப்படுகின்றன.

ஒரு நூற்றாண்டுக்கு முன்னால் டில்லிக்கருகேயுள்ள காடுகளில் ஒரு பிரிட்டிஷ் அதிகாரி இருநூறு சிங்கங்களை வேட்டையாடினராம். இம்மாதிரி வேட்டைக்காரர்களின் செய்கைகளினால்தான் இப்பொழுது சிங்கம் கத்தியவாரிலுள்ள கீர் என்ற வனத்தில் மட்டுமே காணப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது. காட்டுப் பறவைகள் இனங்களிலும் வேட்டைக்காரர்களின்

கொடுமையினுல் அநேக ரகங்கள் நசித்துப்போய்விட்டன. மனிதர்களை உபத்திரவம் செய்யும் விலங்குகளைக் கொல்வதற்காகக் கிடைக்கும் துப்பாக்கிகள் மூலம் ஒரு தீங்கும் செய்யாத காட்டுப்பறவைகளை மனிதர்கள் ஏராளமாகச் சுட்டுவிட்டதுதான் இதற்குக் காரணம்.

பறவைகளில் மிக விசேஷமான இனம் ஒன்று தக்காணத்திலும் செளராஷ்டிராவிலும் சமீபகாலம் வரையிலுமிருந்தது. 'பஸ்டார்ட்' என்ற பேர் கொண்ட இந்த இனப் பறவை ஒவ்வொன்றும் 30 பவுண்டுக்கு குறையாமல் எடையுள்ளது. மனித சஞ்சாரமில்லாத திறந்த வெளிகளில் வாழும் பறவை இனம் இது. விவசாயம் அதிகரிக்கவே இந்தப்பறவை இனத்திற்கு அமைதியாய் வசிக்க தக்காணத்திலும் செளராஷ்டிராவிலும் இடமேயில்லாமற் போய்விட்டது. சிருஷ்டியில் மனிதனை வாழ்விப்பதற்கு எவ்வளவு பிராணிகள் பலியாக நேரிடுகிறது?

—*Hindu*

டாக்டர்கள் இல்லாத ஆஸ்பத்திரிகள்!

பாரத தேசத்து மக்களின் தேவைக்குத் தக்கவாறு வைத்திய வசதிகள் இல்லாததற்கு டாக்டர்களின் பஞ்சமே காரணம். இந்த விஷயத்தைப் பற்றிய ஒரு பரிதாபகரமான தகவல் மத்தியப் பிரதேசத்திலிருந்து கிடைத்துள்ளது. அந்த மாகாணத்தில் சர்க்கார் நிர்வாகத்திலிருக்கும் எழுபது ஆஸ்பத்திரிகளில் டாக்டர்களே கிடையாது. டாக்டர்கள் இல்லாமலேயே ஆஸ்பத்திரிகளை நடத்துவதில் என்னபலன்? இந்த இடங்களுக்கு வரும் நோயாளிகளைப் பரிசோதித்துத் தகுந்த மருந்துகள் கொடுப்பது யார்?

பயிற்சி பெற்ற டாக்டர்கள்கூட நோயாளிக்கு மருந்து கொடுக்கும்போது வெகு ஜாக்கிரதையாகத் தான் மருந்து கொடுக்கிருர்கள். இந்தத் துறையில் நிலைமை இப்படியிருக்க டாக்டர்கள் இல்லாத ஆஸ்பத்திரிகளுக்குச் செல்லும் நோயாளிக்குத் தான் மாண்டுபோகும் முன்பு ஏதோ ஒரு மருந்தைச் சாப்பிட்டோமென்றுதான் திருப்தியடைய வேண்டும்.

மேற்கூறிய நிலைமை எந்தெந்த மாகாணங்களிலிருக்கின்றனவென்பதை ஆராய்ச்சி செய்யவேண்டிய விஷயமல்லவா?

மிக செட்டாகவும் கட்டுப்பாடுடனும் செலவிடவேண்டியது பணம் மட்டுமல்ல.

ஒரு நாள்

மனிதருக்கு ஒரு தினம் பிறப்பு; மற்றொரு தினம் இறப்பு—இந்த இரு தினங்களுக்குமிடையே யுள்ள காலந்தான் மனிதனின் ஆயுள்.

ஒரு சுவரை எப்படி அநேக கற்களைக்கொண்டு கட்டுகிருர்களோ அது போல் தினங்களான அநேக கற்களால் ஆயுள் என்ற சுவர் கட்டப்படுகிறது. ஒவ்வொரு கல்லின் சக்தியும் அழகும் எப்படி சுவருக்குச் சக்தியையும் கண்ணுக்கு ரம்மியத்தையுமளிக்கிறதோ அதுபோலவே ஒவ்வொரு தினத்திலும் நம் வாழ்க்கையை நடத்தும் தரம் ஆயுளுக்கு அழகையும்உயர்வையுமளிக்கிறது. சுவரைக்கட்டும் போது நாம் ஒவ்வொரு கல்லையும் சோதித்துப்பார்த்து உபயோகித்தால் எப்படிச் சுவரைப் பற்றிக் கவலைப்பட வேண்டாமோ அது போலவே ஒவ்வொரு தினத்தையும் நாம் உத்தம ரீதியில் கழித்தால் நம்முடைய வாழ்க்கையைப் பற்றிக் கவலைப்படவேண்டியதில்லை.

நாம் வாழ்க்கையில் நடத்தும் எக்காரியத்தைப் பற்றியும் நன்ருக யோசனை செய்கிருேம். அதுபோலவே ஒவ்வொரு தினத்தையும் கழிப்பதைப் பற்றியும் நாம் யோசிக்கவேண்டும். ஒவ்வொரு தினமும் நமக்குக் கிடைப்பது 24 மணி நேரம் தான். அதில் 8 மணி நேரம் நாம் தூக்கத்தில் செலவிடுகிருேம். மற்ற நேரத்தில் ஒரு பங்கை ஆகாரம், தினசரி அலுவல்கள் முதலியவற்றிற்காகச் செலவிடுகிருேம். அதை மூன்று மணி நேரம் என்று வைத்துக் கொள்வோம்.

இப்படி 11 மணி நேரம் போக பாக்கி நமக்கு கிடைப்பது 13 மணி நேரம். இந்த 13 மணி நேரத்தை நாம்எப்படிக் கழிக்கிருேமோ அதை யொட்டியே நம் வாழ்க்கையின் சுகம், துக்கம் வெற்றி, தோல்வி, லாபம், நஷ்டம்—இவை அமையும்.

மாதா மாதம் நமக்கு ஒரு குறிப்பிட்ட தொகை தான் வருமானமாகக் கிடைக்கிறது. இந்த வருமானத்திலிருந்து முதல் முதல் மிக அத்தியாவசியமான செலவிற்காக ஒரு தொகையை ஒதுக்கி வைக்கவேண்டும். பாக்கி செலவுகளையெல்லாம் அதனதன் முக்கியப் பிரகாரம் செய்யவேண்டும். இப்படி செய்தால் தான் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு நியாயமான ரீதியில் வாழ்க்கையை நடத்த முடியும்.

காலத்தை கையாளும் வழியும் இதுபோன்றே தான். 13 மணி நேரம் தான் நம் இஷடப்படி செலவிட முடியுமென்று தெரிந்தால் அதை மிகவும் பயன்படும் வழியில் செலவிடவேண்டும்.

இந்த 13 மணி நேரத்தை நம் இஷ்டப்பிரகாரம் செலவிட நமக்குரிமையுண்டா?

சில அதிருஷ்டசாலிகளுக்கு இந்த உரிமையிருக்கலாம்; ஆனல் பெரும்பாலோருக்கும் இந்த வசதி கிடையாது. 100-க்கு 99பேர் வயிற்றுப் பிழைப்புக்காக விருப்பு, வெறுப்பென்று பாராட்ட வசதியற்று ஏதாவது வேலைக்குப் போக வேண்டியிருக்கிறது. இப்படி பிறருடைய கட்டுப்பாடுகளுக்கிணங்கி தினந்தோறும் ஏழு மணி நேரமாவது செலவிடுகிறோம். இதையும்கழித்தால் நமக்குப் பாக்கியிருப்பது ஆறே மணி நேரம். 24 மணி நேரத்தில் நம் இஷ்டப்படிக் கழிப்பதற்கு தினமும் ஆறு மணி நேரம்தான என்று நமக்கு வியப்பேற்படலாம். ஆனல் ஒரு கணம் யோசித்தால் இது தான் உண்மையென்று நமக்குப் புலப்படும்.

மனிதனுக்கும் மற்ற பிராணிகளுக்குமுள்ள வித்தியாசம் என்ன? பகுத்தறிவல்லவா? பகுத்தறிவைப் பெற கிடைக்கும் சந்தர்ப்பத்தை நாம் வீணக்கக் கூடாதல்லவா?

சென்ற இருப்பத்தைந்து வருஷங்களில் மனிதனின் அறிவை வளர்ப்பதற்குள்ள வசதிகள் அதிகரித்ததற்களவில்லை. இலக்கியம், விஞ்ஞானம், சரித்திரம் முதலிய துறைகளில் வெளியாயிருக்கும் நூல்கள் கணக்கிலடங்கா. இன்னும் அவை அதிகரித்துத்தான் வருகிறது.

ஏதாவது ஒரு விஷயத்தைப் பற்றி நம் அறிவை

வளர்ப்பதற்கு முயற்சி செய்யவேண்டியது நம் கடமையாகும். இதற்காசத்தினமும் நாம் ஒரு மணி நேரமாவது செலவிடவேண்டும், புத்தகங்கள் படிப்பதற்கு நேரமே கிடையாதென்று நாம் நினைக்கக்கூடாது. கண்டிப்பாக நேரங் கிடைக்கும். மாதத்தில் 30 மணி நேரம்; வருஷத்தில் 360 மணிநேரம். என்ன விந்தை! 360 மணி நேரத்தில் படிக்க முடியாத நூல்களோ பெற முடியாத ஞானமோ உண்டா?

தினந்தோறும் ஒரு மணி நேரமாவது உலக விவகாரங்களைப் பத்திரிகை மூலம் படித்தறிந்து கொள்வதற்கு ஒதுக்கிவிட வேண்டும். இதை ஒரு குடும்பத்தோடு சேர்ந்து படித்தோமானால் அவர்களுக்கும்ஒருபொழுது போக்காயிருக்கும். நமக்கும் ஒரு தனி வேலையாகத் தோன்றாது-

அறிவு பெற்றால் மட்டும் போதுமா? மனிதனுக்குப் பொழுதுபோக்கும் தேகப் பயிற்சியும் இன்றியமையாதன அல்லவா?

வேலைக்குச் செல்லும் பெரும்பாலோரும் வீட்டுக்கு திரும்பிவந்தவுடன் ஒருமூலையில் முடங்கிக் கிடக்கத்தான் நினைப்பார்கள். இது மிகவும் தவறான காரியம். வாலிபத்திலே அநேகருக்கு முதுமைப் பருவம் வந்துவிடுவதற்குக் காரணம் இதுதான்.

இப்படிச் செய்யாமல் வீட்டிற்கு வந்ததும் பரந்த வெளியில் சென்று ஏதாவது விளையாட்டிலோ அல்லது தோட்டவேலையிலோ ஈடுபட்டால் வாலிபப் பருவத்தை நீடிக்கலாம். ஓய்வுள்ள ஒரு மணி நேரத்தில் மட்டும் தோட்டவேலை செய்தால் எவ்வளவு ரம்மியமான பூந்தோட்டத்தைச் சிருஷ்டித்துவிடலாம்!

எல்லோருக்கும் குடும்பத்தினரும், உறவினர்களும், நண்பர்களும் இருப்பார்களல்லவா? இவர்களிடமும் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டாமா! குடும்ப நிர்வாகப் பொறுப்பை எக் காரணத்தாலும் கைவிடக் கூடாது. குழந்தைகளின் கல்வியைப் பற்றி அக்கறை கொள்ள வேண்டும். குடும்பத்தினர்கள், உறவினர்கள், நண்பர்கள் முதலிய எல்லோருடைய யோக க்ஷேமங்களையும் தெரிந்து கொள்ள வேண்டும். எனது நண்பர் ஒருவர் சில நாட்கள் நோயாளியாய் படுத்த படுக்

கையாகக் கிடந்தார். எனக்கு ஓய்வில்லாமையால் நான் அவரைப் பார்க்கப் போகவில்லை. சில தினங்கள் கழித்து நான் அவரைப் பார்க்கச்சென்றவுடன் “என்னை இப்போதுதான் பார்ப்பதற்கு உனக்கு அவகாசம் கிடைத்ததா?” என்று அவர் கேட்ட கேள்வி என்னை வெட்கமுறச் செய்தது அதனால் இரண்டல்லது இரண்டரைமணி நேரப் பகுதியை குடும்பக் கடமைகளை நிறைவேற்றுவதற்காக ஒதுக்கிவைக்க வேண்டும்.

நம் குடும்பத்தைப் பற்றியும் உறவினர்களையும் பற்றியும் நமக்குக் கடமைகளிருப்பது போல் சமூகத்திற்கும், தேசத்திற்கும் நாம் செய்ய வேண்டிய கடமைகள் உண்டு. இன்றைக்கு நமக்கிருக்கும் வசதிகளெல்லாம் தன்னலத்தை மறந்து பொது நலத்தில் ஈடுபட்ட மகான்களுடைய தொண்டுகளின் பலனல்லவா? நாம் பிரயாணஞ் செய்யும் வாகனங்கள், நாம் கல்வி கற்றுக் கொண்ட கலாசாலைகள், நோயாளிகள் சிகிச்சை பெறும் ஆஸ்பத்திரிகள், உலகத்திற்கே மகிழ்ச்சி தரும் பல நூல்கள் இவை எல்லாம் தன்னலமற்றவர்களின் தொண்டுதானே! எல்லோரும் அவரவர் குடும்பகாரியங்களில் மட்டும் ஈடுபட்டால் பொதுநல சேவையை யார் செய்வது? அதனால் அவரவர்கள் வயதிற்கேற்றவாறு கிராமத்து வாசகசாலையை நடத்துவதற்கோ கிராமத்து சுகாதாரத்தைப் பாதுகாப்பதற்கோ கிராமத்துக் குழந்தைகளுக்கு விளையாட்டு வசதிகள் செய்து கொடுப்பதற்கோ ஏதாவது ஒரு தொண்டில் ஈடுபட வேண்டியது அவசியம். இதற்கும் ஒரு மணி நேரத்தைச் செலவழித்தால் பாக்கியுள்ளது அரைமணி நேரம்.

இந்த அரைமணி நேரத்தையாவது நமக்கும் கடவுளுக்கும் உள்ள தொடர்பை பலப்படுத்துவதற்குப் பயன்படுத்தவேண்டும். இந்த அரைமணி நேரத்தில் வாழ்க்கையிலுள்ள கவலைகளனைத்தையும் மறக்க வேண்டும். தியானத்திலோ, பிரார்த்தனையிலோ நாம சங்கீர்த்தனத்திலோ, வேறு மதக்கோட்பாடுகளுக்கிணங்கிய கடவுள் வணக்க முறையிலோ ஈடுபட்டு பரமனின் பாதத்தை மனக் கண்ணால் தேட முயற்

சிக்க வேண்டும். "நான் யார்? இந்த வாழ்க்கையின் அர்த்தமென்ன"? என்ற ஆராய்ச்சிகளில் அடிக்கடி ஈடுபடுவது பயனுள்ள காரியம். இந்த அரைமணி நேரத்தை காலையில் கால்மணி நேரமாகவும் மாலையில் கால்மணி நேரமாகவும் பிரித்துக்கொள்வது நன்மையாகும். அமைதியான ஓரிடத்திற்குச் சென்று இந்த அரை மணி நேரத்தைக் கழிப்பதற்கு வசதியுள்ளவர்கள் அதிருஷ்டசாலிகளாவார்கள். இந்த அரைமணி நேரத்தில் நம்விரோதிகளைப் பழிவாங்கும் வழிகளைப் பற்றியும், பண வசதிகள் இல்லாததைப் பற்றியும், வீட்டை பெரிதாக்குவதற்கு வழிகள் தேடுவதைப் பற்றியும், அநேக யோசனைகள் செய்துகொண்டு கடவுளை வணங்குவதில் பயனே இல்லை. இம்மாதிரி நினைவொன்றுக்கும் மனத்தில் இடமே கொடுக்கக் கூடாது. இது ஊசியில் நூல் கோப்பதுபோல் ஒரு சிரமமுள்ள காரியம்தான். ஆனால் முயற்சித்தால் மனிதனுக்குச் சாத்தியமானதுதான். இந்த அரைமணி நேரத்திற்காவது பரமனின் பாதத்தைக் கண்ணாரக் கண்டு அந்த நிகரற்ற இன்பத்தை அனுபவிப்பதற்கு எந்த முயற்சிதான் தகாது.

நாம் 24 மணி நேரத்திற்கு ஜாபிதா தயாரித்துவிட்டோம். "பயமற்று வாழ். ஒரு லக்ஷ்யத்தை நோக்கியே செல். உயர்ந்த நோக்கத்தைக் கைப்பிடி" என்பது ஒரு வேதாந்தியின் உபதேசம். இந்த உபதேசப்படி வாழ்க்கை நடத்தவேண்டுமானால் தினந்தோறும் நம் நேரத்தைக் கழிப்பதில் மேற்கூறியவாறு கட்டுப்பாடுகள் வேண்டும். கட்டுப்பாடுகளுடன் நேரத்தைக் கழித்தால் எதற்கும் நேரங்கிடைக்கும். ஒவ்வொரு தினமும் இரவில் அந்த தினத்தை எப்படிக் கழித்தோமென்ற சிந்தனை நமக்கு மகிழ்ச்சியளிக்க வேண்டும். சில தினங்கள் முயற்சித்தால் இது மிகவும் எளிதாகத் தோன்றும் சாதனைதான்.

—K. P. Kesava Menon in *Jeevitha Chinthakal.*
(Malayalam Book)

அளவில் சிறிது; ஆனல் ஆற்றலிலோ பெரிது

உ-யி-ர்-நா-டி

பிரபஞ்சத்தில் எத்தனையோ மிகப் பெரிய காரியங்களுக்குக் காரணமாயுள்ள மனித ஹிருதயம் ஒரு மூடிய கையளவு பருமன்தான்.

நிமிஷத்திற்கு 75 தடவைகள் இரத்தத்தை அழுக்கி வெளியே தள்ளி 60,000 மைல்கள் நீளமுள்ள இரத்த குழாய்களில் இரத்தத்தை ஓடச் செய்கிறது. மனித ஹிருதயம், ஒரு மனிதன் ஆயுள் பூராவும் இப்படியே அமுக்கி, அமுக்கி வெளியே இரத்தத்தை பரவச்செய்யும் சக்தி, ஒரு யுத்தக் கப்பலை கடலிலிருந்து அப்படியே மேலே தூக்கும் சக்திக்கு இணையாகும்.

ஒரு வருஷத்தில் மூன்றரைக் கோடி தடவை ஹிருதயம் அடித்துக்கொள்கிறது. 60 வருஷத்தில் 222 கோடி தடவைகள் அடிக்கிறது.

ஒரு மனிதனின் ஆயுள் 60 வயது என்று வைத்துக்கொண்டோமானல் அந்த ஆயுளில் 22 வருஷங்கள் ஓயாமல்வேலைசெய்வதாகவும் 38 வருஷங்கள் ஓய்வெடுப்பதாகவும் கொள்ளலாம்.

மனிதனின் உடல் நலம் பாதிக்கப்படும் சமயங்களில் ஹிருதயம் இயற்கையாய் செய்யும் வேலையை விட எத்தனையோ பங்கு அதிகமாய் வேலைசெய்கிறது. சமீபகாலம் வரையிலும் ஹிருதயத்தின் வேலை நின்றல் மனிதன் மாண்டுவிட்டதாகத்தான் விஞ்ஞானிகளும், வைத்தியர்களும் கருதி வந்தனர். மனிதனின் ஹிருதயம் வேலைசெய்வது நின்றுவிட்டால் மனிதன் மாண்டுபோகவில்லை என்பது இன்றைய விஞ்ஞானிகளின் கருத்து. அமெரிக்காவில் எத்தனையோநோயாளிகளின் ஹிருதயம் நின்றபின்னர் மருந்துகளை உபயோகித்து மாண்டவர்களை மீண்டும் உயிர்ப்பித்துள்ளார்கள்.

ஒரு அபாயகரமான ஆபரேஷன் செய்யும்போது மனிதனின் இயற்கை ஹிருதயத்திற்குப் பதிலாக அதன் வேலையைத் தொடர்ந்து செய்து உயிர் போகாமற் பாதுகாக்க இன்றைய வைத்திய நிபுணர்கள் செயற்கை ஹிருதயத்தைக் கூட கண்டுபிடித்துள்ளார்கள்.

இந்தியாவில் புராதன காலந் தொட்டேபழக்கத்திலுள்ள நாடி வைத்தியம் என்பது ஹிருதயத்தின் நிலையை நன்கு அறிந்து அதை அடிப்படையாய் வைத்துக்கொண்டு தகுந்த சிகிச்சை செய்வதேயாகும்.

அளவில் மிகச்சிறிதான ஏதாவது ஒரு பொருள் மனிதன் வாழ்க்கையிலும், உலக சரித்திரத்திலும் அளவற்ற அசாதாரண காரியங்களுக்குக் காரணமாயிருந்திருக்குமானல் அது மனித ஹிருதயம் தான்.

—Rustom Jal Vakil in *Book University Journal*

சுண்டைக்காய், வற்றல்

●

அற்பமான விஷயங்களைக் குறிக்கவேதான் நாம் சுண்டைக்காயை உதாரணமாகக்கூறுகிறோம். ஆனால் அந்தச் சுண்டைக்காய் நமக்கு அளவற்ற நன்மை செய்கிறது. கசப்பான பொருள்களை அநேகர் விரும்புவதில்லை. ஆயினும் கசப்பிலே நல்ல காரியங்கள் உண்டு. கசக்கும் மருந்துகள் அநேக நன்மைகளைச் செய்கின்றன. கசப்பை நாம் அவ்வளவாக வெறுத்து ஒதுக்கவேண்டியதில்லை. ஏனெனில், கசப்பு அறுசுவைகளுள் ஒன்றாயிருப்பதோடு கபம், கோழை போன்ற கடின நோய்களையும் கண்டிக்கிறது. சுண்டைக்காய், தூதுளங்காய், பாகற்காய், பேய்ச் சுரைக்காய், நிம்பநெய், வல்லாரை முதலியவை கசப்புச் சுவையுடையன. இவற்றை வேண்டியபோது உட்கொண்டால் எத்தனையோ வியாதிகளை நீக்குவதோடு, இன்னல் வந்துற்றிடும்போது இடருறாதிருக்கும் சகிப்புத் தன்மையையும் இவை நமக்குத் தந்துதவுகின்றன.

கசப்புள்ள பொருள்களுள் இங்கு நாம் சுண்டைக்காயின் சிறப்பான குணங்களை ஆராய்வோம். இதனிடத்து ஏராளமான 'ஏ' ஜீவசத்து இருக்கிறது. இச்சத்து, கரப்பான் சர்ம வரட்சி போன்ற—குறிப்பாகக் குழந்தைகளுக்குக் காணுகின்ற—நோய்களை மாற்றவல்லது. சுண்டைக்காய் வற்றலில் இது 720 'யூனிட்ஸ்' வரை உண்டெனக் கணக்கிடப்பட்டுள்ளது. காய் கறிகளுள் சுண்டை வற்றலே அதிகச் சத்துள்ளது. ஆதலின் அனைவரும் இதனை வாங்கி உரிய முறையில் (பொரியல், பொறிக்கறி போன்றவைகளாக) உப்பிலூறவைத்து ஆக்கியுண்ணுதல் அளவற்ற நன்மையைத் தரும்.

சுண்டைக்காய், சுண்டை வற்றல் ஆகியவைகளின் குணங்கள் பற்றி முனிசிரேஷ்டர்கள் மொழிந்தருளிய அற்புத சிந்தாமணி (குணவாகடம்) கூறுவதைக் கேளுங்கள் :

சுண்டைக்காயின் குணம்

நெஞ்சிற் கபம்போம்
நிறைகிருமி நோயும்போம்
விஞ்சு வாதத்தின்

விளைவும்போம்—வஞ்சியரே
வாயைக் கசப்பிக்கு
மாமலையிலுள்ள சுண்டைக்
காயைச்சுவைப்பவர்க்குக்காண்:

(கசப்புச் சுவையை யுடைய மலைச் சுண்டைக்காயால் மார்புச் சளி, கிருமிரோகம் வாதாதிக்கம் ஆகியவை போம். குறிஞ்சி நிலம் விசேஷமாதலின் 'மாமலையிலுள்ள சுண்டைக்காய்' என்றார்.)

சுண்டைவற்றலின் குணம்

பித்த வரோசகம்போம்
பேராப் புழுச்சாகும்
உற்ற கிராணியறும்
உட்பசியாம்—சத்தியமாய்ப்
பண்டைக் குதவாமப்
பற்றுமறும் ஆரையுந்தான்
சுண்டைக்காய் வற்றலுண்ணச்சொல்.

(சுண்டைக்காய் வற்றலால் பித்த அரோசகம், மலக்கிருமி, கிராணி, மூலம் ஆகியவை போம். நல்ல பசி உண்டாகும்.)

—*Eelakesari*,

அணைக்கட்டே ஆலயம்!

"நான் பாக்ரா அணைக்கட்டைப் பார்வையிடச் சென்ற போது சட்லஜ் நதி தீரத்தில் நின்றுகொண்டுகரையிலிருபக்கங் களிலுள்ள மலைக்காட்சியில் மெய்மறந்திருந்தேன்; அப்போது அருகேயிருந்த இன்ஜினீயர் நிபுணர்கள் "உலகில் வேறெங் குமே இம்மாதிரி பிரமிக்கத்தக்க உயர்ந்த அணைக்கட்டு இருக் காது" என்றார்கள். இந்த மனிதனின் பிரம்மாண்ட சிருஷ்டி யைப் பார்த்தவாறே இங்குமங்கும் உலாவிக்கொண்டிருக்கும் போது, மனிதன் தன் நிலைமையை உயர்த்துவதற்காகப் பாடு படும் இடமே புனிதமான ஆலயம்: அதுவே மசூதி; அதுவே குருத்துவாரா என்ற சிந்தனை உதித்தது."

—ஜவஹர்லால் நேரு

நற்செய்தியே நன்மருந்து

உங்கள் பிள்ளையோ, மாப்பிள்ளையோ அல்லது வேறு நெருங்கிய உறவினரோ, ராணுவத்தைச் சேர்ந்தவர்களா? நீங்கள் அவர்களுக்கு அடிக்கடி கடிதம் எழுதுவதுண்டா? அடிக்கடி எழுதுவதில்லையானல் ராணுவத்திலிருப்பவர்கள் அவர்களின் குடும்பத்தினர்களின் கடிதங்களை எவ்வளவு ஆவலுடன் எதிர்பார்க்கிருர்களென்பது உங்களுக்குத் தெரியவில்லையென்று ஆகும். ராணுவத்தில் சேர்ந்த ஒருவனுக்கு ஆறுமாதங்களுக்குத் தன் வீட்டிலிருந்து கடிதம் வராவிட்டால் அவன் மனவேதனை எவ்வளவிருக்குமென்று சொல்லவே முடியாது. அமெரிக்காவிலிருந்து கொரியாவிற்குச் சென்ற ராணுவப்படைகள் "எங்கள் ஊரில் எங்களை மறந்துவிட்டார்களா" என்று அடிக்கடி மேலதிகாரிகளிடம் கேட்டார்களாம். தூரதேசங்களுக்குச் சென்று மாதக் கணக்காகவும் வருஷக்கணக்காகவும் தங்கும் படைகளுக்கு இவர்கள் தினந்தோறும் உண்ணும் உணவைவிட முக்கியம் குடும்பத்திலிருந்துவரும் கடிதம் தான்.

இப்படி உற்றுர் உறவினர்களால் மறந்து போய் தவிக்கும் படைகளுக்கு ஆறுதல் அளிப்பதற்கு ஒரு சங்கத்தை அமெரிக்காவில் ஸ்தாபித்துள்ளார்கள். இந்தச் சங்கத்தின் வேலை யென்னவென்றுல், படையைச் சேர்ந்த ஒவ்வொருவருடைய ஊருக்கும் சென்று அவர்களுடைய உறவினர்களைக் கொண்டோ, உறவினரில்லாதவர்களுக்கு அவர்கள் நண்பர்களைக் கொண்டோ கடிதம் எழுதவைப்பதுதான். இந்த ஸ்தாபனத்தின் தொண்டு மூலமாக அடிக்கடி கடிதங்கள் பெறும் சிப்பாய்கள் கவலையற்று மிகவும் குஷியாக யுத்தவேலையில் ஈடுபடுகிருர்கள். யுத்தம் நடந்துகொண்டிருக்கும் பொழுது படைகளுக்கு வீட்டைப்பற்றியும் உறவினர்களைப்பற்றியும் சிந்திப்பதற்கே நேரங் கிடையாது. ஆனல் யுத்தமில்லாத சமயத்தில் முகாம்களிலும் வெளிநாடுகளிலும் போய்த் தங்கும் படைகளுக்கு வேறு வேலையில்லாததால் சதா குடும்பத்தினரைப் பற்றித்தான் சிந்தித்துக் கொண்டிருப்பார்கள். எப்பொழுது திரும்ப ஊருக்குச் செல்வோம், எப்பொழுது குடும்பத்தினரைப் பார்ப்போமென்று ஏங்கிக் கொண்டிருப்பவர்களுக்கு உறவினர்களிடமிருந்துவரும் கடிதங்கள் எவ்வளவோ குதூகலத்தையளிக்கும்.

இது போலவே தான் அயலூர்களுக்கோ, வெளிநாடுகளுக்கோ சென்று கல்விகற்றுக் கொள்ளப்போகும் மாணவ மாணவிகளின் நிலைமையும். பெற்றோர்களிடமிருந்தோ, சகோதர சகோதரிகளிடமிருந்தோ காளைப் பருவத்திலுள்ளவர்களுக்குப் பிரியமான விஷயங்களைப்பற்றி விரிவான கடிதங்கள் கிடைத்தால் மிகஉற்சாகத்துடன் கல்வி பயில்வார்கள். பெற்றோர்களும் மற்றவர்களும் தங்களை மறந்துவிட்டார்களென்று திகிலடைந்தால் படிப்பிலுள்ள சிரத்தை குறைந்துவிடும். இப்படி நேரிடாமல் பார்த்துக்கொள்வது பெற்றோர்களின் கடமையாகும்.

ஒரு ராணுவ ஆஸ்பத்திரிக்கு அடிக்கடி சென்றுகொண்டிருந்த ஒருவர் கூறும் தகவல்கள் மிகப் பரிதாபகரமானது. ஆஸ்பத்திரியிலுள்ள நோயாளிச் சிப்பாய்களின் முகங்களை நோக்கினால் எவரெவருக்குக் கடிதங்கள் வந்திருக்கின்றன, எவரெவருக்கு வரவில்லையென்பது நன்கு விளங்கும். மனைவியிடமிருந்தோ தந்தையிடமிருந்தோ கடிதங் கிடைத்த நோயாளி சிரித்த முகத்துடனிருப்பார். அவர் வியாதி நிலைமையைப் பற்றிய சீட்டை நோக்கினால் அவருடைய ஜுரம், வேறு கோளாறுகள் எல்லாம் சற்றுக் குணமடைந்ததாகத் தெரியும். கடிதங்கிடைக்காதவர்களின் கதியைப் பற்றிச் சொல்லவா வேண்டும்! ஏற்கனவே அவனைப் பீடித்த வியாதி கடிதம் வராத வேதனையால் பன்மடங்கு அதிகரித்திருக்கும்.

ராணுவத்தில் சேர்ந்ததனாலோ கல்வி கற்றுக் கொள்வதற்காகவோ, வெளிநாடுகளுக்குச் சென்று தங்குபவர்களுக்கு அவர்கள் உறவினர்கள் அடிக்கடி கடிதங்கள்எழுதுவது முக்கியமான கடமையாகும். கூடுமானவரையிலும் அவர்களுக்கு நல்ல செய்திகளைத்தான் எழுதவேண்டும். துக்ககரமான விஷயங்களை மறைத்துவைப்பது தீங்காகாது. அவர்கள் நண்பர்களைப் பற்றியும் ஊரில் நடக்கும் சுவையான விஷயங்களைப் பற்றியும் அவர்கள் கல்வி பயின்றுகொண்டிருந்த பள்ளிக்கூடம், அவர்களின் பள்ளித்தோழர்கள் தொழில் முதலியவைகளைப் பற்றியும் கடிதங்கள் எழுதுவது தூரதேசங்களில் இருக்கும் இளைஞர்களுக்கு அளவற்றஉற்சாகத்தையளிக்கும். ராணுவத்தில் அங்கத்தினராயிருப்பவர்களிடம் கேள்விகள் ஒன்றுங் கேட்காமல் நல்ல செய்திகள் கொடுப்பதே நலம்.

நித்திரையை தராது மாத்திரை

"தூங்காமல் தூங்கி" பெறும் சுகம் என்னவென்று அறிவதற்கும் அதை அனுபவிப்பதற்கும் தாயுமானவரைப் போன்ற மிகச்சிறந்த வேதாந்திக்குத்தான் சாத்தியம். தூங்காமல் இருப்பதில் சுகமில்லையென்றும் அதனால் துன்பம் தான் ஏற்படுமென்பது பாமரமக்களும் அறிந்த விஷயம்.

தூக்கம் வராமலிருப்பதற்கு என்ன காரணம்? பகல் முழுவதும் தன் வேலையைச் செய்துவிட்டு இரவு எல்லோரும் நித்திரை செய்யும் நேரத்தில் படுக்கையில் படுத்தால் சிலருக்கு நித்திரையே வருவதில்லை. கடிகாரம் அடிக்கும் மணியை எண்ணிக்கொண்டே இரவு முழுவதும் கழிக்கநேரிடுகிறது. நோயாளிகளைப் பற்றி இங்கு கூறவில்லை. சாதாரண ஆரோக்கியம் படைத்தவர்களைப் பற்றித் தான் கூறுவது.

மேல் நாடுகளில் டாக்டர்களிடம் வருபவர்களில் பெரும்பாலோருக்குள்ள நோய் இரவில் நித்திரை இல்லாததுதான். "இரவில் எனக்குத் தூக்கம் வருவதற்கு ஏதாவது கொடு" என்று டாக்டரிடம் கெஞ்சுபவர்களின் எண்ணிக்கையையும் தோற்றத்தையுங் கண்டால் எவருக்குத்தான் மனமிளகாது?

தேகம் களைப்படைவதனால் மட்டும் நித்திரை வருகிறதென்று நினைப்பது தவறு. மனிதன் மூளையிலுள்ள ஒரு முக்கியமான பாகத்தில் களைப்பேற்பட்டால்தான் நித்திரை வரும்.

அந்த பாகத்தில் களைப்பு ஏற்படாமலிருப்பதற்கு அநேக காரணங்களிக்கலாம். படுக்கையை விரித்து நித்திரைக்குச் செல்லும்பொழுது மனத்தில் யாதொரு குழப்பமுமிருக்கக் கூடாது.

கொலைகளைப் பற்றித் துப்பறியும் நாவல்களை நித்திரைக்குச் செல்லும்போது படித்தால் தூக்கம் வருவதற்குப் போதிய அமைதி ஏற்படாது. இதுபோலவே தான் ஏதாவது சினிமாவோ, நாடகமோ பார்த்து வந்த உடனே நித்திரை செய்வதற்கு முயல்

வது பயனில்லாததாகும். மனிதன் மனத்திலுள்ள அநேக கவலைகளாலும் நித்திரை பாதிக்கப்படலாம். வியாபாரம், காதல், உத்தியோகம் முதலிய விஷயங்களைப் பற்றிய கவலைகள் மனத்தில் குடி கொண்டால் இவற்றாலும் நித்திரை பாதிக்கப்படும்.

நித்திரையை வரச் செய்வதற்காக உள்ள 'தூங்கச் செய்யும் மாத்திரைகள்' மேல் நாடுகளிலும் இந்தியாவிலுள்ள நகரங்களிலும் ஏராளமாக விற்பனையாகின்றன. ஸ்நானத்திற்கு சோப்பை உபயோகிப்பது போலவே, நித்திரை வராவிடில் மாத்திரைகளை விழுங்குவது பெரும்பாலான மக்களுக்குப் பழக்கமாகி விட்டது. இந்தப் பழக்கத்திலுள்ள பெரும் தீங்கென்னவென்றால் விஷப் பொருள்கள் கொண்ட இம் மாத்திரைகள் பொதுமக்களிடம் தற்கொலை செய்துகொள்வதற்கு வேண்டிய அளவுக்குமேலே இருக்கின்றன. தற்கொலைகள் செய்துகொள்வதற்கு அநேகர் கையாளும் வழியும் இந்த 'தூங்கவைக்கும் மாத்திரைகளே'. இந்த மாத்திரைகளிலுள்ள விஷப்பொருள்கள் காலப்போக்கில் அநேகரின் உடல் நலத்தையும் பாதிக்கிறது.

தூக்கம் வராமல் துன்பப்படுபவர்கள் டாக்டர்களிடஞ் சென்று அவரவர்கள் தேகாரோக்கிய நிலையைச் சோதித்துக்கொண்டு தகுந்த சிகிச்சைபெற வேண்டும். இம்மாதிரி சிகிச்சை பெறாமல் வேறெந்த மருந்துகளை உபயோகித்தாலும் ஆரோக்கியத்தையளிக்கும் நித்திரையை மனிதன் பெறமுடியாது.

எல்லோருக்கும் ஒரே கால அளவிற்கு நித்திரை யிருக்க வேண்டுமென்று நினைப்பது தவறு. அவரவர்கள் உடல் நிலைமையைப் பொறுத்ததாகும் இந்த விஷயம். எட்டு மணி நேரம் கூலி வேலை செய்யும் ஒருவனுக்கு நான்கு மணி நேரத் தூக்கத்தினால் தேகத்தின் சோர்வு நீங்கலாம். நான்கு மணி நேரங்கூட வேலை செய்யாதவர்களுக்கு எட்டு மணி நேரம் தூக்கம் தேவையாயிருக்கலாம். இதெல்லாம் அவரவர்களின் ஆரோக்கிய நிலையைப் பொறுத்திருக்கிறது.

தூக்கம் வருமோ வராதோவென்ற பயமுள்ளவர்களுக்கு தூக்கம் வராமலிருப்பது இயற்கை. இதற்காகவே சுகாதார நிபுணர்கள் எல்லோரும் படுக்கையில் படுப்பதற்கு இரண்டு மணி நேரம் முன்பிருந்தே தேகத்தையும் மனத்தையும் தூக்கத்திற்குத்

தயார் செய்துகொள்ளவேண்டுமெனக் கூறுகிறார்கள். வசதியான படுக்கை, சுமாராக காற்றோட்டமுள்ள இடம், காலத்திற்குத் தக்கவாறு ஆடைகள், போர்வைகள் முதலியவை தேகத்திற்குச் சுகமளிக்கும். மனத்திற்கு அதிர்ச்சி தராத நூல்களைப் படித்தால் மன அமைதி ஏற்படும். நித்திரைக்கு முன்பு பிரார்த்தனை என்பது கிறிஸ்துவர்களின் கோட்பாடு. இதைச் சரியாக அனுஷ்டிப்பது எல்லோருக்குமே சுகமான நித்திரை வருவதற்கு உதவியா யிருக்கும்.

நாகரிக மனிதர்கள் தூக்கம் வருவதற்காக 'விஸ்கி', 'பிராந்தி' முதலிய மதுபானங்களை நித்திரைக்குப் போகுமுன் அருந்துவ துண்டு. காலப்போக்கில் இது மிகவும் கெடுதியை விளைவிக்கு மென்றுதான் சுகாதார நிபுணர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். நித்திரை பங்கத்திற்கு டாக்டரிடம் சிகிச்சை பெற்றுக்கொள்வது தான் சிறந்த வழி. மாத்திரைகளை உபயோகித்துத் தானே சிகிச்சை செய்துகொள்வ்து மிகவும் அபாயகரமானது.

சிரிப்பே வனப்பு

கடவுள் சிருஷ்டியில் மனிதன் மட்டுமே சிரிக்கும் சக்தி பெற்றவன். ஜீவராசிகளிலேயே இவ்வளவு விசேஷமான ஒரு சக்தியை பெற்றவர்களாயிருந்தும் சில மனிதர்கள் சிரிப்பது கௌரவக் குறைவென்று கருதுகிறார்கள். இது மிகத் தவறான எண்ணமாகும்.

சிரிப்பு என்பது தேகமும் மனமும் ஒத்துழைத்துச் செய்யும் ஒரு செய்கை. இதற்கு அளவற்ற ஆறுதலளிக்கும் சக்தியுண்டு. துக்கத்திலாழ்ந்து கிடப்பவர்களுக்கும், நோயால் பீடிக்கப்பட்டவர்களுக்கும், மூளைக் கோளாறுள்ளவர்களுக் கும் சற்று சிரிப்பு மூட்டினால் அளவற்ற நன்மை ஏற்படுகிறது.

மனமாற அடிக்கடிச் சிரிக்கக்கூடிய மனிதன் ஆரோக் கியத்தையும் தெளிவான மனத்தையும் பெறுகிறான். இயற்கையாக நாம் பெற்ற அழகு அழிந்து போகாம லிருக்க ஒரு சிறந்த வழி அடிக்கடி சிரிப்பதுதான். சிரிப்பதன் மூலம் முகத்திலுள்ள சதைகள் நன்கு பயிற்சிபெறுவதால் முகத்திற்கு வசீகரம் ஏற்படுகிறது.

கம்பிமீது கலியாணம்!

மேல் நாடுகளில் விவாகச் சடங்குகளையொட்டின கட்டுப்பாடுகள் நாகரிகத்தின் வளர்ச்சியினுல் மறைந்து போகத் தொடங்கியுள்ளன. மாதாகோயிலுக்குள் சென்று பாதிரி வேத வசனங்களைச் சொல்லி பந்துமித்திரர்கள் முன்பு மணம் செய்துகொள்வதை விரும்பாதவர்களும் இப்போது அநேகரிருக்கிருர்கள். அடிக்கடி விநோதமுறையில் நடக்கும் விவாகங்களின் தன்மைகளை இக் கட்டுரையில் காணலாம்.

சர்க்கஸ்களில் உயரக் கம்பிகள்மீது நடக்கும் நடிகர்கள் இருவர் மணந்து கொண்டார்கள். அவர்கள் சர்க்கஸில் தினமும் புரியும் வீரச் செயலை செய்தவாறே மணம் புரிந்து கொள்ளவேண்டுமென்று பாதிரியிடம் கூறினுர்கள். பாதிரிக்கும் இம்மாதிரி அசாதாரணமான விவாகங்களில் கலந்து கொள்வதில் பழக்கமுண்டு. அதனுல் அவர் இந்தக் காதலர்களை அவர்கள் விரும்பியபடியே மணஞ் செய்விக்க ஒப்புக் கொண்டார்.

பாரிஸ் நகரத்தில் ஒரு வீதியில் 50 அடி உயரத்திற்கு மேல் இரு பக்கத்திலுள்ள கட்டிடங்களோடு சேர்த்து கட்டியிருந்த கம்பிகளின் மேல் இந்த மணமக்கள் நின்ருர்கள். ஒரு ஏணி மூலம் ஏறி இவர்கள் கம்பி மீது நின்ற இடத்திற்கு பாதிரி வந்து இவர்கள் மணத்தை முடித்து வைத்தார். இந்தத் தம்பதிகளை புகைப்படம் பிடிக்கவந்த போட்டாகிராபரும் ஒரு கட்டிடத்தின் மீது ஏறி மற்ருெரு சர்க்கஸ் காரரின் தோள்மீதேறி இவர்களைப் போட்டோ எடுத்தார்.

உச்சாணியில் ஏறிக்கொண்டு மணஞ் செய்துகொண்டவர்களைப்போல் நீருக்குள் நுழைந்தும் மணஞ் செய்துகொள்வோரும் மேல் நாடுகளிலிருக்கிருர்கள். நீருக்குள் ஆழ்ந்து சென்று முத்துக்குளிப்பவர் இனத்தைச் சேர்ந்த மணமக்களிருவர் அவர்கள் தொழிலில் ஈடுபட்டவாறே மணஞ் செய்துகொண்டார்களாம். பாதிரி கரையிலிருந்தவாறே டெலிபோன்மூலம் வேத வாக்கியங்களைக்கூறி மணத்தை முடித்து வைத்தாராம்.

மேல் நாடுகளில் பனிக்கட்டி விழுங்காலங்களில் கால்களில் ஒருவித மரக்கட்டைகளைக் கட்டிக்கொண்டு பனிக்கட்டிமீது அதிவேகமாகச் செல்வார்கள். இந்தத் துறையிலும் நிபுணத்துவம் பெற்றவர்களுக்கு வருவாயும் புகழும் ஏராளமாகக் கிடைக்கும். இந்த ரகத்தைச் சேர்ந்த மணமக்கள் இருவர் எட்டாயிரம் அடி உயரமுள்ள ஒரு குன்றின் மேல் தங்கள் கால்களில் மரக்கட்டைகளைக் கட்டிக்கொண்டு அதிவேகமாய் சென்றவாறே மணம் புரிந்து கொண்டனராம்.

விருப்பப்படி வெயிலும் மழையும்

இந்தியாவில் சில இடங்களில் செயற்கை மழை பெய்வதற்கு எடுத்த முயற்சிகளைப் பற்றி வாசகர்கள் அறிவார்கள். இந்தத் துறையிலும் இதையொட்டிய துறைகளிலும் மேல் நாடுகளில் நடத்தும் சாதனைகள் மிக முக்கியமானவை.

தென் ஆப்பிரிக்கா, பிரான்ஸ், இத்தாலி முதலிய தேசங்களில் பயிர்களையழிக்கும் ஆலங்கட்டி மழையை சாதாரண மழையாக மாற்றுவதற்கு நிபுணர்கள் பல வழி கண்டுபிடித்திருக்கிறார்கள். மிக வேகமுள்ள ஒரு வகை வெடிகுண்டை ஆலங்கட்டி மழை தொடங்குவதற்கு முன் மேகங்கள் மத்தியில் அனுப்பி வைத்தால் இந்த குண்டு வெடிப்பதில் ஏற்படும் உஷ்ணத்தால் பனிக்கட்டிகளெல்லாம் உருகி சாதாரண மழையாக மாறுகிறது; பயிர்களுக்கும் பாதகம் ஏற்படாமல் மழை பெய்கிறது.

புயற்காற்றால் மனிதனுக்கும், பொருள்களுக்கும் ஏற்படும் நஷ்டங்களை தடுப்பதற்கு இப்போது வழிகளிருக்கின்றன. அணுகுண்டைக் கண்டுபிடித்த மனிதனால் கூடப் பயங்கர வேகத்துடன் வரும் புயற்காற்றை எதிர்த்து நிற்க முடியாதானாலும் அது நோக்கி அடிக்கும் திசையை மாற்றமுடியும். புயற்காற்று என்பது இருவாயுவின் விசைகள் சேர்வதால் உண்டாவது. இந்த விசைகளில் ஒன்றின் திசையைத் திருப்பிவிட்டால் புயற் காற்றின் திசையை மாற்றவோ அல்லது அது கிளம்பாமல் அறவே தடுக்கவோ முடியும்.

சமுத்திரத்தில் புயற்காற்று கிளம்பும் இடங்களில் ஏராளமாக எண்ணெயை ஊற்றிப் பற்றவைப்பது புயற்காற்றைத் தடுப்பதற்கு ஒரு வழி. எண்ணெய் எரியுமிடத்திலுள்ள உஷ்ணக்காற்று மேல்நோக்கிப் போகும்பொழுது அந்த இடத்தைநோக்கி புயற்காற்றின் விசை பாயும். ஓரிடத்தில் இம்மாதிரி எண்ணெயை ஊற்றித் தீயை உண்டாக்கி இந்த விசையைப் பாயவைக்கும்பொழுது அருகில் மற்றொரு இடத்திலும் எண்ணெயை ஊற்றித்தீயைப் பற்ற வைத்துக்கொண்டிருப்பார்கள். விசை அங்கேயும் பாயும். இப்படி

நிலத்தை நோக்கிப் பாயக்கூடிய புயலை சமுத்திரத்திற்குள்ளேயே குறிப்பிட்ட இடங்களில் பாய வைத்து மனிதனுக்குத் தீங்கு விளைவிக்கும் புயலைத் தடுத்துவிடலாம்.

அமெரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் விவசாயிகளுக்கு எப்பொழுதெல்லாம் தேவையோ அப்பொழுதெல்லாம் மழையைப் பொழியச் செய்கிறார்கள். மேகங்கள் எங்கெங்கே கூடுகின்றன, காற்று எங்கெங்கேயிருந்து வீசுகிறது, இவையெல்லாம் பற்றித் தீவிரமாய் ஆராய்ச்சிகள் செய்திருக்கிறார்கள். இந்த ஆராய்ச்சிகளின் மூலம் புயலைத் தடுப்பது, தேவையான சமயத்தில் மழையை பொழியவைப்பது, போதிய அளவிற்கு மீறிப்பெய்யும் மழையைத் தடுப்பது முதலிய வேலைகள் சாத்தியமாயிருக்கிறது.

இந்தத் துறையில் நடக்கும் ஆராய்ச்சிகளும் இப்பொழுது அமைந்துள்ள கருவிகளும் காலப்போக்கில் அபிவிருத்தியடைந்தால் மனித சமூகத்திற்கு கிடைக்கும் அளவற்ற நன்மைகளுக்குச் சில உதாரணங்கள் கீழ்வருமாறு :—

கால நிலை ஆராய்ச்சிக் கழகத்திற்கு விண்ணப்பஞ்செய்து அறுவடை நடக்குமிடங்களில் பெய்யக்கூடிய மழையைத் தடுத்து விடலாம். வெப்பம் அதிகரித்து குறிப்பிட்ட இடங்களிலுள்ள மக்களின் உடல் நிலை பாதிக்கப்பட்டால் அங்கு மட்டும் மழையைப் பெய்யச் செய்யலாம். திருவிழாக்கள், கொண்டாட்டங்கள், கண்காட்சிகள் முதலியவற்றிற்கு இடைஞ்சல் ஏற்படும்வண்ணம் பொழியும் மழையை வேறிடங்களுக்குத் துரத்தி மக்களுக்கு மகிழ்ச்சியூட்டலாம்.

இதெல்லாம் இன்று கனவுகள் போலிருக்கின்றன. வெகு சீக்கிரத்தில் இவை உண்மையாகிவிடுமென்பது விஞ்ஞானிகளின் அபிப்பிராயம்.

———

ASOKA SCENTED BETELNUT POWDER

பலியாகாத எலி !

ஒரு வீட்டில் எலிகளின் உபத்திரவம் பொறுக்க முடியாமலே இருந்தது. வீட்டுக்காரர் இந்த உபத்திரவத்தை யொழிப்பதற்காக எலிக்கூண்டு, எலி பாஷாணம் முதலியவற்றையெல்லாம் கையாண்டு பார்த்தார். ஒன்றுக்கும் மசியவில்லை எலிகள்! முடிவில் இவருக்கு ஒரு யோசனை தோன்றியது. அதன்படி ஒரு அகல பாத்திரம் நிறையத் தண்ணீரை வைத்தார். ஒரு சிறு பலகையை ஒரு புறம் கயிற்றால் அறையின் உத்திரத்தின் மீது கட்டி பாத்திரத்தின் விளிம்பில் வைத்தார். பாத்திரத்திற்குள் நீண்டிருக்கும் பாகத்தில் ஒரு தின்பண்டத்தை வைத்தார். எலிகள் இந்தப் பலகையின் மீது ஏறித் தின்பண்டத்தை எடுக்கச் சென்றால் பலகை அசைந்து எலி தண்ணீருக்குள் விழுந்து விடும். எலிகள் பலகை மீது ஏறுவதற்கு வசதியாக பாத்திரத்தின் அருகே ஒரு 'ஸ்டூலை'யும் வைத்திருந்தார். இந்த வழியால் தன் வீட்டில் நடமாடும் எலிக் கும்பலே ஒழியுமென்று பெருமிதங்கொண்டார்.

ஆனால் தினமும் பலகை மீது வைக்கும் தின்பண்டங்கள் மறைந்தனவே யன்றி எலிகள் ஒன்றுகூட தண்ணீருக்குள் விழவில்லை. இதன் இரகசியத்தை யறிய வேண்டி ஒரு நாளிரவு இந்த வீட்டுக்காரர் ஒளிந்திருந்து கவனித்தார். சற்றுநேரம் காத்திருந்த பின்னர் இரு எலிகள்வந்தன. 'ஸ்டூல்'மீது ஏறி இரண்டும் பலகை மீது தாவின. ஆனால் இவர் நினைத்தபடி தின்பண்டத்தை நோக்கிப் பாயவில்லை. பலகையில் கயிறு கட்டியிருந்த பாகத்தில் ஒரு எலி உட்கார்ந்து கொண்டது. மற்றொன்று மெல்ல மெல்ல தின்பண்டத்தைப் பற்றிக்கொண்டு வந்தது. கூட்டாளி எலி பலகையின் கயிறு கட்டிய பக்கத்திலிருந்ததால் பலகை அசையாமல் தின்பண்டத்தை எடுக்க வந்த எலியைத்தண்ணீரில் விழச்செய்யாமல் கர்ப்பாற்றியது! எலியின் சூழ்ச்சி தன் சூழ்ச்சிக்கு இணையாயிருந்ததைக் கண்டு வீட்டுக்காரர் வியப்புற்றார்.

பாலைப் பொழியும் மரம்

●

வட அமெரிக்காவிற்கு தென் கோடியிலும் பனமா கால்வாய்க்கு வட பாகத்திலும் இருக்கும் கோஸ்டாரீக்கா என்ற ராஜ்யத்திலுள்ள காட்டுப் பிரதேசங்களில் இயற்கையின் விசித்திர சிருஷ்டி ஒன்று இருக்கிறது—அது தான் பால் சுரக்கும் மரம்!

கத்தியால் மரத்தில் குத்தினால் அதிலிருந்து பாலைப் போல் ஒரு சாறு வெளியாகிறது. அங்குள்ள காடுகளில் வேலைக்குச் செல்பவர்கள் பசி தோன்றும் போது இந்தப் பாலை ஒரு இலையில் பிடித்து அப்படியே அருந்துவார்கள். இந்தப் பாலை எவ்வளவு அருந்தினாலும் தேகத்திற்கு யாதொரு தீங்கும் நேரிடுவதில்லை. அந்தக் காட்டுப் பக்கங்களிலுள்ள மக்கள் இந்தப் பாலைத் தாராளமாக அருந்துவதால் நல்ல தேகாரோக்கியம் பெற்றிருக்கிறார்கள்.

வருஷத்தில் ஏழு மாதங்கள் மழை பெய்யும் இந்த ராஜ்யத்தில் இவ்வகை மரங்கள் ஏராளமாக வளருகின்றன. கோடைகாலத்தில் இந்த மரத்திலுள்ள இலைகளெல்லாம் உதிர்ந்து விடுகின்றன.

முழு வளர்ச்சி யடையும் பருவத்தில் இந்த மரம் நூறடி உயரமிருக்கும். முன் காலத்தில் இந்த மரத்தின் பட்டையிலிருந்து காடுகளில் வசித்த மக்கள் மிகவும் முரடான ஒரு துணியைத் தயாரித்து வந்தனர். இந்தத் தொழில் இப்போது அங்கு மறைந்து விட்டது.

மரத்திலிருந்து எடுத்தவுடன் இந்தப் பால் சாதாரண பாலேடு போன்றேயிருக்கும். காப்பியிலோ—டீயிலோ கலந்து அருந்தினால் அசல் பாலின் சுவை போன்றே யிருக்கும். ஐஸ்கிரீம் போன்ற பதார்த்தங்களுக்கு இந்தப் பால் மிகவும் உபயோகமானதாயிருக்கிறதாம். இந்த மரங்கள் தென் அமெரிக்காவின் வட பாகங்களிலுள்ள ராஜ்யங்களிலும் வளருகின்றனவாம்.

———

மகாகவி காளிதாஸரின் மனேசக்திக்கு ஒரு உதாரணம்.

ஸ - ஸே - மி - ரா

●

உலகிலுள்ள பொருள்களில் சாதாரணமாய் புலப்படாத தத்துவ ரகஸ்யத்தை அறியக்கூடிய உள்ளாராய்ச்சி யுள்ளவன் தான் மகா புருஷன் என்று கொண்டாடப்படுகிருன். அப்படிப் பட்ட மகாபுருஷர்களில் மகாகவி காளிதாஸர் தலை சிறந்தவர். அவருடைய மேதா விலாஸத்தை விளக்க அவருடைய சரித்திரத் திலும் கவிதைகளிலும் பல ஆதாரங்கள் உள்ளன. அவருடைய ஸாரத்தை கிரகிக்கும் சக்தியை உணர்த்தும் கதை இது.

தார் தேசத்தில் அரசாண்டு வந்தார் போஜர் என்ற பேரரசர். அவர் சிறந்த அறிவாளி. கலையையும் கலைஞர்களையும் போற்றி வந்தார். கலைஞர்கள் அவரிடம் சென்று தங்கள் திறமையை வெளிப்படுத்தித் தக்க சன்மானம் பெறுவது வழக்கம். ஒரு நாள் சைத்திரிகன் ஒருவன் அரச சபைக்கு வந்தான். ஒருவருடைய சில அடையாளங்களைக் கொண்டே உருவம் முழுவதும் வரையக் கூடிய சக்தி தன்னிடமுள்ளதாக அவன் கூறினன். அரசரும் அவனை பரிசோதிக்க விரும்பி ஒரு கூந்தல் பந்தைக் கொடுத்து அக் கூந்தலுக்குரிய உருவத்தை வரைய உத்தரவிட்டார். சைத்திரிகன் தன் முழுத்திறமையுடன் அக் கூந்தலுக்குரிய ராணியின் படத்தை எழுதி முடித்தான். படம், பார்ப்பவர் மனத்தை வசீகரித்தது. ராணியே படத்தில் வந்து அமர்ந்திருப்பதுபோல் தென்பட்டது. படத்தை வரைந்து முடித்து உற்றுப்பார்த்தான் சைத்திரிகன். அவன் முகம் சிணுங்கியது. படத்திலுள்ள ராணியின் இடையில் மிக சூட்சுமமான புள்ளி தென்பட்டது. அதை அழிக்க அவன் கை முற்பட்டது. ஆனல் புள்ளி அழியவில்லை. வருத்தத்துடன் கையிலிருந்த குச்சியை எரிந்து விட்டு அயர்ந்து உட்கார்ந்துவிட் டான். அந்த வழியே வந்த மகாகவி காளிதாஸர் விசனத்துட னிருக்கும் சைத்திரிகனைப் பார்த்து காரணத்தைக் கேட்டார்.

சைத்திரிகன் படத்திலிருக்கும் புள்ளியைக் காண்பித்து "இந்தப் புள்ளியை எவ்வளவு அழித்தாலும் அழியவில்லை. உடலிலுள்ள மச்சம்போல் இருந்துகொண்டிருக்கிறது. அதனால்தான் கவலையா யிருக்கிறேன்" என்றான்.

காளிதாஸர் அந்தப் புள்ளியை உற்றுநோக்கினார். அது உடலிலுள்ள மறு தான் என்று உணர்ந்தார். சைத்திரிகனை சமாதானப்படுத்தினார். "அந்தப் புள்ளியை அழிக்க வீணாக முய லாதே. சிறந்த சித்திரத்தை உருவாக்கும்போது அதிலுள்ள மச்சங்கள் தானாகவே உருவாகும், அதனால் நீ பயப்படாதே. ராணியின் இடையில் மச்சம் இருந்தாலும் இருக்கலாம்" என்று கூறி சைத்திரிகனுக்கு தைரியமூட்டினார், காளிதாஸர்.

தயாரான படத்தை எடுத்துக்கொண்டு அரண்மனையை அடைந்தான் சைத்திரிகன்.

அரசர் படத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் பார்த்துக் கொண்டே வந்தார். அவர் எதிரில் ராணியே வந்து நிற்பதுபோல் தோன்றியது. ஒவ்வொரு அங்கங்களையும் அவர் கண்கள் ஊடுரு விப் பார்த்தன. இடையிலுள்ள புள்ளியை கவனித்ததும் அவர் முகம் கோபத்தால் சிவந்தது. சிவந்த முகத்துடன் சைத்திரிகனை நோக்கினார். தான் நினைத்தது உண்மையாகவே முடிந்ததே என்று சைத்திரிகன் கலங்கினான்.

"உனக்கு எப்படித் தெரியும், ராணியின் இடையில் மச்சமிருப் பது?" என்று அதட்டினார் அரசர்.

சைத்திரிகன் வாயடைத்து நின்றான்.

"நான் கேட்பதற்கு பதிலுரைக்கவேண்டும். மச்சமிருப்பதை உனக்கு யாராவது கூறினார்களா? அல்லது தெய்வ உபாஸனை யால் தெரிந்துகொண்டாயா?"

"நான் நிரபராதி. படத்தை வரைந்துவிட்டுப் பார்த்தேன். நான் வேண்டுமென்று இடையில் மச்சத்தை வைக்கவில்லை. தானாகவே அந்தப் புள்ளி அங்கு ஏற்பட்டிருக்கிறது. அதை அழிக்க எவ்வ ளவோ பாடுபட்டேன் முடியவில்லை. நான் கவலையுடனிருக்கும் சமயம் காளிதாஸர் அங்கு வந்தார். தானாக ஏற்பட்டதை அழிப்பதில் பயனில்லை. ஒரு சமயம் அந்த இடத்தில் மச்சமிருக்க

லாம் என்று கூறினர். அதனால் நான் அதை மறைக்கவில்லை ''
என்றான்.

சபையிலிருந்த காளிதாஸர் சிரித்துக்கொண்டே மறுதளிக்காமல் இருந்துவிட்டார்.

சபை கலைந்தது. தன் ராணியிடத்திலேயே சந்தேகம் ஏற்பட்டது அரசருக்கு. தன் பிரிய நண்பனான காளிதாஸருக்கு ராணியின் இடையிலுள்ள மச்சம்தெரிந்த விதத்தை எண்ணி மனம் புழுங்கினர். கோபம் எல்லை கடந்தது. தனக்குத் துரோகம் செய்த கவியை கொலைசெய்வதென்று தீர்மானித்துவிட்டார், போஜராஜன்.

மதியூகி மந்திரி காளிதாஸர் கொல்லப்பட்டார் என்ற செய்தியை நம்பும்படி செய்தார். உண்மையில் காளிதாஸர் இறந்ததற்காக அரசர் வருந்தினர். புலம்பினர். தனிமையில் அழுதார். ஆனால்,...............

2

போஜராஜனின் குமாரன் காட்டிற்கு வேட்டையாடச் சென்றான். பிராணி ஒன்றைத் துரத்திக்கொண்டு வெகுதூரம் சென்றுவிட்டான். பரிவாரங்கள் அவனைவிட்டுப் பிரிந்துவிட்டன. அஸ்தமிக்கும் வேளை. கவ்வும் இருட்டு. வழி தெரியாமல் தவித்தான் ராஜகுமாரன். புலி ஒன்று அவனை நோக்கிப் பாய்ந்து வந்தது. களைத்திருந்த குதிரையைத் தட்டிவிட்டான். குதிரை அடி எடுத்து வைக்கக்கூட மறுத்துவிட்டது. குதிரையின்மேலிருந்துகொண்டே தலைக்குமேல் தொங்கிக்கொண்டிருந்த கிளையைப் பிடித்து மரத்தின் மேல் ஏறிவிட்டான். ஆனால் மரத்திலிருந்த கரடியைப் பார்த்துத் திகைத்துப் போனான். கரடி அவனைக் கடிக்கவில்லை. அவனுக்கு அபயம் அளித்தது. மரத்தினடியில், ராஜகுமாரன் கீழே இறங்கி வருவான் என்று புலி எதிர்நோக்கிக் கொண்டிருந்தது. அவன் மரத்தைவிட்டுக் கீழே இறங்கவேயில்லை.

கரடியைப் பார்த்து புலி சொல்லியது. ''நண்பா! இயற்கையாகவே மனிதன் நமக்கு விரோதி, அவனுக்கு இடமளிக்காதே. அவனைக் கீழே தள்ளி விட்டு, பசியால் வாடிக்கொண்டிருக்கும் எனக்கு ஒருவேளை ஆகாரத்திற்கு ஏற்பாடு செய்''.

தன்னை அண்டியிருப்பவனைக் கீழே தள்ள மனம் வரவில்லை கரடிக்கு. அதனால் புலியின் வார்த்தைக்கு செவி சாய்க்கவில்லை. சிறிது நேரத்திற்கெல்லாம் அரசகுமாரன் கரடியின் மடியில் தலையை வைத்து அயர்ந்துவிட்டான். அவனை கீழே விழாமல் கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருந்தது கரடி. அவன் கண்விழித்ததும் அவன் மடியில் கரடி தூங்க ஆரம்பித்தது. புலி அரசகுமாரனைப் பார்த்து, "மனிதா! அந்தக் கரடி உன்னைத் தின்பதற்காகவே காப்பாற்றி வைக்கிறது. அது தூங்கி எழுந்தவுடன் உன்னை முதலில் கொன்றுவிடும். ஆதலால் அது தூங்கும்பொழுதே அதைக் கீழேதள்ளிவிடு" என்று கூறியது. அரச குமாரன் புலியின் வார்த்தையை உண்மை என்று நம்பினான். கரடியைக் கீழே தள்ள முயன்றான். கரடியோ அவனை கெட்டியாகப் பிடித்துக்கொண்டது. அதற்குக் கோபம் கொதித்தது. அரசகுமாரனின் நாக்கை வெளியே இழுத்து அதில் ஸஸேமிரா என்று எழுதியது. உடனே அவனுக்குப் பேசும் சக்தி போய்விட்டது. "ஸஸேமிரா" என்ற வார்த்தையை மட்டும் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தான்.

மறுநாள் காலை, அரச குமாரனைத் தேடிக்கொண்டு பரிவாரங்கள் வந்தன. மரத்தடியில் 'ஸஸேமிரா' என்று புலம்பிக்கொண்டிருக்கும் அவனை அரண்மனைக்கு அழைத்துச் சென்றனர். தன் குமாரனின் இந்த நிலையைக்கண்டு அரசர் மனம் புழுங்கினார். வைத்தியர்கள் வந்து பார்த்தார்கள்! வியாதி அல்ல இது என்று சொல்லிவிட்டார்கள். மாந்திரீகர்களுக்கும் புலப்படவில்லை. இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த மந்திரிக்கு காளிதாஸரின் நினைவு வந்தது. அவனால் தான் இதற்குக் காரணம் கூறமுடியும், பரிகாரமும் அவன்தான் செய்வான் என்று தீர்மானித்தார். காளிதாஸர்தான் அரசருடைய கட்டளையின்படி கொல்லப்பட்டுவிட்டாரே!

பிறர் கண்களில் படாமல் மாறுவேடத்தில் உலவி வந்த காளிதாஸரைத் தனிமையில் சந்தித்தார் மந்திரி. எல்லாவிஷயங்களையும் தெரிவித்தார்.

மறுநாள் வடநாட்டிலிருந்து மாந்திரீகம் தெரிந்த கோஷாஸ்திரீ வந்திருப்பதாகவும் அவள் ராஜகுமாரனின் நிலையை சரிப்படுத்திவிடுவாள் என்றும் அரசரிடம் கூறினார் மந்திரி.

ஒரு அறையில் திரையொன்று போடப்பட்டது. திரையின் உள்ளே கோஷா வேஷத்தில் காளிதாஸர் வந்தமர்ந்தார். திரையின்வெளிப் பக்கத்தில் ராஜகுமாரன் நிறுத்தப்பட்டான். அரசர், மந்திரி முதலானவர்களும் அங்கு வீற்றிருந்தனர்.

மந்திரவாதி, ராஜகுமாரனைப் பார்த்து எங்கு என்ன காரணத்தில் இந்த ஆபத்து நேரிட்டது என்று கேட்டாள். வழக்கம் போல் ராஜகுமாரன் 'ஸஸேமிரா' என்று பதில் கூறினன். சிறிது நேரத்திற்கு பிறகு கோஷாவேஷத்திலிருந்த காளிதாஸர் மறை பொருளான ஸஸேமிராவின் முதல் எழுத்தான 'ஸ'வில் ஆரம்பிக்கும் ஒரு சமஸ்கிருத ஸ்லோகத்தைக் கூறினர். அதன் பொருள்:-

"சத்காரியங்களில் சதா கண்ணும் கருத்துமாயிருப்பவர்களை வஞ்சிப்பதில் என்ன சாமர்த்தியமிருக்கிறது.'' அதைக் கேட்டதும் ராஜகுமாரனுக்கு தான் செய்த கெட்டசெயல் நினைவிற்கு வந்தது. அதற்காகப் பச்சாத்தாபமும் ஏற்பட்டது. பச்சாத்தாபத்தினல் கொஞ்ச பாபம் விலகி 'ஸ' என்னும் எழுத்தைவிட்டு ''ஸேமிரா'' என்னும் எழுத்துக்களை மாத்திரம் சொல்ல ஆரம்பித்தான். திரையின் பின்பக்கத்திலிருந்து 'ஸே' என்ற எழுத்தில் ஆரம்பிக்கும் சுலோகத்தைக் கூறினர். அதன்பொருள் :-

''ஸேதுவையும் கங்காநதி ஸாகரத்தில் ஸங்கமமாகும் இடத்தையும் கண்டு தரிசித்தால் ப்ரும்மஹத்தி தோஷம் தீரக்கூடும். ஆனல் மித்திரத் துரோகம் மகாபாபம், விலகாது.'' இதைக்கேட்ட ராஜகுமாரன் 'ஸே' என்னும் எழுத்தைவிட்டு 'மிரா' என்று கத்தினன். பிறகு 'மி'யில் தொடங்கும் சுலோகத்தைக் கூறினர். இதன் பொருள்:-

''மித்திரத் துரோகம் செய்பவன், நன்றி மறந்தவன். நம்பிக்கையைக் கெடுப்பவன், இம் மூன்றுபேர்களும் நரகத்தை யடைவார்கள்.''

'மி'யைவிட்டு 'ரா' மட்டுமிருந்தது. உடனே காளிதாஸர் 'ரா'வில் தொடங்கும் சுலோகத்தைக் கூறினர். இதன் பொருள்:-

''ராஜனே! உன்னுடைய குமாரனுக்கு நன்மை உண்டாக வேண்டுமென்று நீ விரும்பினல் அந்தணர்களுக்கு தானம் செய்ய வேண்டும்.''

அதைக்கேட்ட அரசர் மந்திரவாதி கூறியபடி அந்தணர்களுக்கு தானங்களை வழங்கினர். பாபங்கள் விலகி ராஜகுமாரனுக்குத் தன் நினைவுவந்தது. தான் காட்டிற்குச் சென்றது முதல் நடந்த செய்திகளனைத்தையும் சொன்னன். அதைக்கேட்டு ஆச்சரியமடைந்த அரசர், கோஷா ஸ்திரீயான மந்திரவாதியிடம், "உமக்கு எப்படி இந்த விஷயங்கள் தெரிந்தது?" என்று கேட்டார். "அரசே! ராணியின் இடையிலுள்ள மச்சம் எப்படித் தெரிந்ததோ அதேபோல்தான் காட்டில் நடந்த சம்பவமும் தெரிந்தது" என்று சொல்லி வேஷத்தைக் கலைத்துவிட்டு எதிரே வந்தார் காளிதாஸர்.

மாண்டுபோனதாகத் தான் கருதிவந்த காளிதாஸர் தன் கண்ணெதிரே தோன்றியவுடன் மிகவும் ஆச்சரியமுற்ற அரசன் "அதுதான் எனக்குத் தெரியவேண்டும், ராணியின் இடையில் மச்சமிருந்தது அந்நியருக்கு எப்படித் தெரிந்தது?" என்று கேட்டார். இதற்குக் காளிதாஸர் "அரசே இதில் தவருக எண்ணுவதற்கு ஒன்றுமில்லை. இம்மாதிரி பாமர மக்களுக்கு தெரியாத விஷயங்களைத் தெரிந்துகொள்வதுதான் தேவியின் அநுக்கிரகம். சாதாரண மனிதர்கள் அற்பவிஷயங்களென்று கருதுவதைப் பற்றித் தேவியின் அநுக்கிரகம் பெற்றவர்களுக்கு கவிதைகளும் மற்ற கற்பனைகளும் தோன்றுகின்றன. மழை பெய்யும் மேகமென்று மனிதரால் அசட்டை செய்யப்படும் மேகத்தைக் குறித்து மேக சந்தேசம் என்ற கவிதையை அடியேன் இயற்றியது உங்களுக்குத் தெரியாதா? கண்டதிலிருந்து காணாததை கற்பிப்பதே கவியின் பெருமை; தேவியின் அருமை. இதனுல் தான் என் நண்பன் சைத்திரிகனுக்குக் கூந்தல்பந்திலிருந்து கூந்தலழகியின் உருவத்தை அவ்வளவு தத்ரூபமாகச் சித்திரிக்கச் சாத்தியமாயிற்று. அதே தேவியினருளால் தான் ராஜகுமாரன் இருந்த நிலைமையிலிருந்து அவன் அனுபவிக்க நேர்ந்த துன்பங்களை மனக்கண்ணுல் அறியலானேன்" என்று கூறினர்.

இதைக் கேட்ட போஜமகாராஜா அளவற்ற மகிழ்ச்சியடைந்தார். தன் அறிவீனத்தால் மகாமேதாவியான மகாகவி காளிதாஸரைக் கொல்ல உத்திரவிட்டோமே என்று வருந்தினர். அவரைக் கொல்லாமல் தந்திரமாக இதுவரை காப்பாற்றிவைத்த

மந்திரியின் மதியூகத்தை வெகுவாகப் புகழ்ந்தார். காளிதாஸரை அணைத்துக்கொண்டு தன் தவறுதலுக்காக மன்னிப்புக் கோரி, தன் குமாரனை மீண்டும் பேச வைத்ததற்கு நன்றி செலுத்தினர்.

அது முதல் யாராவது பைத்தியம்போல் உளறினல் அவனைப் பார்த்து "ஸஸேமிரா" என்று சொல்லும் வழக்கம் நிலவி வருகிறது.

காளிதாஸர் "ஸஸேமிரா"வைக் குறித்துக் கூறிய சம்ஸ்கிருத ஸ்லோகம் :—

ஸத் பாவம் ப்ரதிபந்நாநாம் வஞ்சனே காவிதக்நதா
அங்கமாருஹ்ய ஸுப்தாநாம் ஹநநே கிந்நுபௌருஷம்.

* * *

ஸேதும் த்ருஷ்ட்வா ஸமுத்ரஸ்ய கங்காஸாகர ஸங்கமம்
ப்ரஹ்ம்ஹத்யா ப்ரமுச்யதே மித்ர த்ரோஹோ ந முச்யதே.

* * *

மித்ர த்ரோஹீ க்ருதக்னஸ்ச யஸ்துவிச்வாஸ காதக:
த்ரயஸ்தே நாகம் யாந்தி யாவச் சந்தா திவாகரம்.

* * *

ராஜன் போதவ புத்ரஸ்ய யதிகல்யாண மிச்சஸி
தானம் தேஹி த்விஜாதிப்யோ வர்ணாநாம் ப்ராஹ்மணோகுரு:

—பைங்காநாடு.

வயிற்றுக்குள் நடக்கும் நிகழ்ச்சிகள்

தன் சிறு பெண்குழந்தை உடல் நலத்தைப் பற்றிக் கவலை கொண்ட ஒரு தாயார், குழந்தையை டாக்டரிடம் காண்பித்தாள். தகவல்களை யெல்லாம் கேட்டறிந்த டாக்டர் "குழந்தை தினந்தோறும் இரவில் பால் குடிக்கிறளா" என்று கேட்டார். இதைக் கேட்டு ஒன்றும் புரிந்து கொள்ளாத தாயார் "ஆம், தினமும் இரவில் பால் குடிக்கிறள்" என்று பதில் சொன்னள்.

இதற்குப் பதிலாக டாக்டர் "அதனல் தான் கோளாறு; நித்திரைக்கு முன்பு வயிற்றில் பால் சென்றல் நித்திரையின் போது குழந்தை படுக்கையில் புரளுவதன்மூலம் பால் தயிராகிறது; பால் தயிராகி, தயிர் வெண்ணெயாகி, வெண்ணெய் கொழுப்பாகி, கொழுப்பிலிருந்து சர்க்கரை உண்டாகி, சர்க்கரையிலிருந்து போதை உண்டாகி காலையில் குழந்தை எழுந்திருக்கும்போது அதன் மூளையைக் கலக்கிவிடுகிறது" என்றர்.

அமுத மொழிகள்

அரசியல்

உன்னை ஏழைகளிடமிருந்து காப்பாற்றுகிறேன் என்று பணக்காரனிடமிருந்து பணத்தைப் பெறுவதும், உன்னை பணக்காரனிடமிருந்து காப்பாற்றுகிறேன் என்று ஏழையிடத்திலே வோட்டு வாங்குவதும்தான் அரசியல்.

—*Cedric Adams.*

இன்பம்

மிகவும் உயர்ந்ததென நீ தீர்மானிக்கும் ஒரு லக்ஷயத்துக்காக உடலைப் பயன்படுத்துவதுதான் வாழ்க்கையிலே உண்மையான இன்பம்.

—*Bernard Shaw.*

நண்பன்

ஒரு வருஷத்திற்குமேல் பாடுபட்டுக்கூட ஒரு நண்பனைச் சம்பாதிக்க முடியாமல் போகலாம். ஒரே மணி நேரத்தில் ஒரு நண்பனை இழந்துவிட முடியும்.

முக்கியம்

மனிதனது புற நிலைமைகளெல்லாம் அவனது அக நிலைகளிலிருந்தே வருகின்றன. புற நிலைமைகளைத் திருத்தவேண்டுமானால் முதலில் அக நிலைமைகளைத் திருத்த வேண்டும்.

—*James Allen.*

ஏழையாயிருப்பதில் இன்னொரு நன்மையும் இருக்கிறது. வைத்தியர், மற்றவர்களைவிட உங்களைச் சீக்கிரமாகக் குணப்படுத்திவிடுவார்!

—*Kin Hubbard.*

Compiled by *T. S. J.*

ஈழவருக்கு ஈசன் அளித்த நேசன்

சென்ற மாதம் கேரளமெங்கும் ஒரு பிரபல சமூகத் தலைவரின் பிறந்ததின நூற்றுண்டு விழா கொண்டாடப்பட்டது. அது ஈழுவர் அல்லது தீயர் இனத்தைச் சேர்ந்த ஸ்ரீ நாராயண குருஸ்வாமியின் பிறந்த தினத்தின் நூற்ருண்டு விழாவாகும்.

ஒரு நூருண்டுக்கு முன்பு திருவனந்தபுர தாலூகாவில் நாராயண குருஸ்வாமி என்று இப்போது அழைக்கப்படும் நாராயணன் ஒரு சிறு கிராமத்தில் பிறந்தார். ஓரளவுக்குவாழ்க்கை வசதியுள்ள குடும்பத்தில் ஜனித்தவர்தான் இவர். அந்தக் காலத்தில் தீயர் போன்ற தாழ்த்தப்பட்ட வகுப்பார்களுக்குபொதுப் பாதைகளில் சஞ்சரிப்பது, பள்ளிகளில் சேர்ந்து படிப்பது முதலிய உரிமைகள் கிடையாது. அதனுல் சிறுவன் நாராயணனுக்கு வேறு ஜாதியாரின் குடும்பச் சிறுவர்களுக்குள்ள வசதிகள் போல் பள்ளியில் சேர்ந்து கல்வி பயில சந்தர்ப்பங் கிடைக்கவில்லே.

தான் பிறந்த கிராமத்தில் தன் இனத்தைச் சேர்ந்த குழந்தைகளுடன் ஓர் ஆசிரியரிடம் சிறிது காலம் சிக்ஷைபெற்ருர். பிறகு மத்திய திருவிதாங்கூரில் நாயர் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு புகழ்பெற்ற சம்ஸ்கிருத வித்வானிடம் சம்ஸ்கிருதங் கற்றுக் கொண்டார்.

சமஸ்கிருதத்தில் நாராயணன் அபார பாண்டித்தியம்பெற்ருர். வேதாந்தங்களேக் கற்றதனுல் உலகத்திலுள்ள மனிதரெல்லோரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள், வேற்றுமைகள் அர்த்தமற்றவை என்ற கொள்கை பூண்டிருந்தார்.

மலேயாள தேசமெங்கும் உயர்ந்த வகுப்பாருக்கும் தாழ்ந்த வகுப்பாரென்று கருதப்பட்டு வந்தவர்களுக்குமிடையே நிலவியிருந்த முக்கியமான வேற்றுமை ஒன்று தான். உயர்ந்த வகுப்பார்களுக்கு மட்டுந்தான் ஆலயத்திற்குச்செல்லும் உரிமையிருந்தது. இந்த உரிமை தீயர் இனத்தாருக்கில்லாததால் அவர்கள் பட்ட அவமதிப்புக்கு அளவேயில்லே. வேறு மதங்களில் சேர்ந்து அந்த மதத்தாருடைய கோயிலுக்குப் போவதை இந்து மதத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டோர்கள் சற்றேனும் விரும்பவில்லே.

இந்த நிலேமையில் தன்னினத்தாரின் மனக் கவலேயைத் தீர்த்து அவர்கள் நிலேயை உயர்த்துவதெவ்வாறென்ற பிரச்னேயைப் பற்றி வெகு நாட்கள் சிந்தித்தார் நாராயணன். கடைசியாக அவர் கொண்ட முடிவு என்னவென்ருல் தன்

இனத்தாருக்குக் கோயில்களை தானே கட்டி அவற்றில் மூர்த்திகளை தானே பிரதிஷ்டை செய்து அப்பொழுதிருந்த தன் சமூகத்தின் குறைகளை நீக்குவதுதான்.

இதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கும் காலத்தில் முருக உபாஸகரான ஒரு அந்தணரின் பழக்கம் ஏற்பட்டது. அதனால் நாராயணனுக்கும் சைவக் கொள்கையில் பற்று உண்டாயிற்று. திருவனந்தபுரத்தைச் சேர்ந்த ஒரு சிறு கிராமத்தில் முதன் முதலாக ஒரு சிவாலயத்தை அமைத்தார். அந்த ஆலய நிர்வாகத்திற்கு நாலைந்து அங்கத்தினர்கள் கொண்ட ஒரு நிர்வாகக் குழுவையும் அமைத்தார்.

தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவர் ஆலயத்தையுங் கட்டி அதில் விக்கிரகத்தையும் பிரதிஷ்டை செய்ததைப் பற்றி சவர்ண இனத்தாரிடையே மிகவும் கொந்தளிப்பு ஏற்பட்டது. இம்மாதிரி துர்கிருத்தியங்கள் நடந்தால் நாட்டுக்கே நாசமுண்டாகுமென்று அநேகர் கூக்குரலிட்டனர். இந்துமத பிரதிநிதிகள், அன்று திருவிதாங்கூரை ஆண்டுவந்த மூலம் திருநாள் ராமவர்ம மகாராஜாவிடஞ் சென்று கூட இந்தத் தீயன் செய்த அக்கிரமத்தைப் பற்றிப் புகார் செய்தார்கள். கடைசியாக வைதீகர்கள் நாராயணனிடம், அவர் செய்த ஆலயநிர்மாணத்தைப் பற்றிச் சர்ச்சை செய்யச் சென்றார்கள். சாஸ்திரங்களிலிருந்தும் வேதங்களிலிருந்தும், தனக்கு இம்மாதிரி ஆலயத்தை நிர்மாணிப்பதற்கு உரிமையுண்டென்று ஆதாரங்களைக் காட்டி வாதித்து மமதை கொள்ளாமல் நாராயணன் அவர்களிடம் "நான் தீயர் இனத்தைச் சேர்ந்தவன்; நான் பிரதிஷ்டைசெய்த சிவனும் தீயர் சிவன் தான். அதனால் அதைப் பற்றி உங்களுக்குக் கவலை வேண்டாம்" என்று கூறினார். இம்மாதிரி சாந்தமாக வந்த பதிலைக் கேட்ட வைதீகர்களுக்கு எப்படிக்கோபமோவெறுப்போ உண்டாகும்? அன்றிலிருந்து நாராயணனின் இயக்கத்தைப் பற்றி உயர்ந்த வகுப்பார்களிடையே சுமுகமான மனப்பான்மை நிலவியது. தன் சொந்த பிரயாசையால் முன்னேற்றத்திற்கு உழைக்கும் ஒரு இனத்தாரைப் பற்றி எல்லா இனத்தாரிடையேயும் ஒரு அபிமானம் ஏற்பட்டது. பிறகு பன்னிரண்டு வருஷ காலத்திற்கு நாராயணன் அநேக ஆலயங்களை நிர்மாணிக்கும் வேலையிலீடுபட்டார். குமரி முதல் கோகர்ணம் வரை தீயர் இனத்தார்கள் எங்கெங்கு அதிகமாயிருக்கிறார்களோ அங்கெல்லாம் ஆலயங்களை நிர்மாணித்தார். ஆலயங்களில் பூஜை செய்வதற்கு தீயர் இனத்தாருக்குப் பூஜாவிதிகளிலும் மந்திரங்களிலும் பயிற்சியளித்தார்.

தன் இனத்தாருக்கிருந்த ஒரு பெருங் குறையை இவ்வாறு

நிவர்த்தி செய்த பின்னர் சமூக சீர்திருத்தங்களிலும் ஈடுபட்டார். தீயர் இனத்தில் கலியாணம் முதலிய சடங்குகளுக்கு சமூகக் கட்டுப்பாடுகளின்படி செய்யவேண்டிய செலவைத் தாங்க முடியாமல் அநேக குடும்பங்கள் நசித்துப் போய்க் கொண்டிருந்ததால் இம்மாதிரி மக்களுக்கெல்லாம் அறிவு புகட்டினார்.

கடைசியாக அவர் செய்த கோயில் பிரதிஷ்டையைப்பற்றி ஒரு சுவாரஸ்யமான தகவல் உண்டு. வழக்கம்போல் ஒரு சிவன் கோயிலில் விக்கிரகத்தைப் பிரதிஷ்டை செய்ய நாராயணன் அழைக்கப்பட்டார். விக்கிரகத்தை அதன் ஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்வதற்கு முகூர்த்த வேளை வந்தவுடன் நாராயணன் தன் சிஷ்யரிடம் "ஒரு பெரிய கண்ணாடியை கொண்டுவா" என்றார்.

கண்ணாடி வந்ததும் அதை விக்கிரகம் வைக்கவேண்டிய இடத்தில் தூக்கி வைத்துவிட்டு "ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி" என்று சொல்லியவாறே காரியத்தை முடித்தார். விக்கிரகத்திற்குப் பதிலாக கண்ணாடியைப் பிரதிஷ்டை செய்ததைப் பற்றி அநேக ஆக்ஷேபணைகளிருந்தாலும் அதன் உத்தேசங்களைப் பற்றியும், அர்த்தங்களைப் பற்றியும் அறிஞர்கள் பலவிதமாகக் கூறுகிறார்கள். இப்படி பலவித அபிப்பிராயங்கள் வருவதற்கு நாராயணன் ஆலய நிர்மாணத்தை இத்துடன் நிறுத்திவிட்டதும் ஒரு காரணமாயிருந்தது.

தீயர் இனத்தார் திருவிதாங்கூரில் கள்ளிறக்குவதிலும் கள் விற்பனையிலும் ஈடுபட்டவர்கள். "கள் என்பது விஷம்; அதை இறக்கக் கூடாது; விற்கக் கூடாது, அருந்தக் கூடாது" என்ற பிரசாரத்தைத் தன் இனத்தாரிடையே தீவிரமாகச் செய்தார்.

அன்று ஒரு சிறு கிராமத்தில் முதல் முதலாக நிர்மாணித்த ஆலயத்தின் நிர்வாகத்திற்காக நியமிக்கப்பட்ட குழு இன்று, "ஸ்ரீ நாராயண தர்ம பரிபாலன யோகம்" என்ற பெயரில் கேரளமெங்கும் விளங்குகிறது.

"ஒற்றுமை அமைதியளிக்கும், கல்விமுன்னேற்றம் தரும்" என்ற அமுத வாசகத்தை நாராயணகுருவின் கைகளிலேயே பெற்ற இந்த யோகத்தார் கேரளத்திலுள்ள தாழ்த்தப்பட்ட சமூகங்களின் முன்னேற்றத்திற்குச் செய்துவரும் தொண்டு, தமிழ் நாட்டில் இந்தத் துறையில் பணியாற்றுபவர்களுக்கும் ஒரு வழிகாட்டியாகும். பிற சமூகங்களை வெறுக்காமலும், பழிக்காமலும் எந்த சமூகமும் முன்னேற்றமடையலாமென்பதே ஸ்ரீ நாராயணகுருவின் சாதனை, உலகத்திற்கு அளிக்கும் ஒப்பற்ற போதனை.

———



உங்களுக்குத் தெரியுமா?

மின்மினிப் பூச்சி பளிச்சுப் பளிச்சென்று மின்னுவதற்குக் காரணம் ஒருவித வைட்டமின் அதனிடம் இருப்பது தான். சோகை பிடித்தவர்களுக்கு மிகவும் தேவையாகவுள்ள வைட்டமின்களில் ஒன்றாகிய 'பாலிக் ஆஸிட்' (Folic Acid) என்பதே அது.

★

ஒவ்வொரு கப் காப்பியிலும் ஒன்றரை முதல் இரண்டு கிரையின் காபீன் (Caffeine) என்னும் பாஷாணம் இருக்கிறது. அதிகமாக காப்பி குடித்தால் வயிற்றிலே ரணமுண்டாகி தொந்தரவைத் தரும்.

★

நமது தேகத்திலுள்ள தாதுப் பொருள்களில் 'கால்சியம்' தான் (சுண்ணாம்புச் சத்து) அதிகம். 154 பவுண்டு எடையுள்ள ஒரு சாராசரி மனிதன் உடம்பிலே 12,000 கிராம் அல்லது 2½ பவுண்டு கால்சியம் இருக்குமெனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. தேகத்திலுள்ள கால்சியத்திலே 99 சதவிகிதம் எலும்பில் தான் இருக்கிறது. மீதிப்பாகம் தோலிலும், பல்லிலும், இரத்தத்திலுமிருக்கிறது.

மனித தேகத்தில் எட்டு ராத்தல் தோல் இருக்கிறது. நாம் ஒரு விநாடிக்கு 18 தடவை சுவாசிக்கிறோம். குழந்தைகள் 40 தடவை சுவாசிக்கின்றன. நுரையீரல் 230 கன அங்குலம் காற்று பிடிக்கும். நாளைக்கு 375 கன அடிக்காற்று உட்கொள்ளுகிறோம்.

★

வாழைப் பழத்தில் நூற்றுக்கு எழுபத்தைந்து பாகம்; மோரில் தொண்ணூறு பாகம்; அரிசிச் சாதத்தில் எழுபத்திரண்டு பாகம்; முட்டையின் வெள்ளைக் கருவில் எண்பத்தாறு பாகம்; ஆரஞ்சு பழத்தில் எண்பத்தேழு பாகம் தண்ணீர் இருக்கிறது!

★

தினமும் செலவாகும் தேகசக்தியில் கால்பாகம், கண்ணால் பொருள்களைப் பார்ப்பதால் ஏற்படுகிறது.

★

இருபத்து மூன்று செகண்டுகளுக்குள்ளாக இரத்தம் தேகத்தை ஒரு சுற்று சுற்றிவிடுகிறது.

பேய் பிசாசுகளையும் மேல் நாட்டினர் பயன்படுத்துகின்றனர்.

மனிதன் மரித்தாலும் ஆவி ஆறுதல் அளிக்கும்

●

இறப்பதோடு மனிதனின் உலக வாழ்வு முடிவதில்லை யென்பது பாரத மக்களின் சித்தாந்தம். ஒரு பிறவி முடிந்ததும் ஒரு ஆத்மா மற்றொரு உடலில் புகுந்து இந்த உலகிலேயே மீண்டும் வாழ்ந்து கொண்டிருக்கிறதென்பதற்குச் சாஸ்திரங்களிலும், இதிகாசங்களிலும், புராணங்களிலும் அநேக அத்தாட்சிகள் உண்டு. இப்படி மறு பிறவி இல்லாத ஆத்மாக்கள் பிரம்மரக்ஷஸ். பிசாசு போன்ற கண்ணுக்குத் தோன்றாத ரூபங்களில் சஞ்சரித்துக் கொண்டிருக்கின்றனவென்ற நம்பிக்கையும் உண்டு.

மேல் நாட்டிலோ இம்மாதிரி நம்பிக்கைகளை பகுத்தறிவு உடையோர்கள், பொதுவாக ஒப்புக்கொள்ளாமல்தானிருந்தார்கள். ஏதாவது அசாதாரண சம்பவங்கள் ஏற்படும் பொழுது மட்டுமே இறந்து போனவர்களுக்கும், உயிருள்ளவர்களுக்கும் சம்பந்தம் இருக்கலாமென்ற சந்தேகம் தோன்றத் தொடங்கியது. இந்த விஷயத்தில் ஆர்வங்கொண்டு ஆராய்ச்சி செய்பவர்களின் தொகை பெருகிக்கொண்டே வந்ததனால் இப்பொழுது அநேக மேல் நாட்டார்களுக்குப் புனர் ஜன்மம் உண்டு என்ற நம்பிக்கை ஏற்பட்டதோடு, புனர் ஜன்மம் பெறாத ஆத்மாக்களைப் பற்றின தகவல்களிலும் ஆர்வங்கொண்டுள்ளார்கள்.

புனர் ஜன்மமெடுக்காமல் உலகத்திலேயே சஞ்சரித்துக் கொண்டிருக்கும் ஆத்மாக்களைப் பற்றி நம் நாட்டில் ஒருவிதப் பீதி தான் உள்ளது. இம்மாதிரி ஆத்மாக்களால் பாதிக்கப்படுபவர்களைப் பேய் பிசாசு பிடித்தவர்களென்று கூறுகிறோம். பேய் பிசாசுகளுடன் தொடர்புள்ளவர்களை, மாந்திரீகர்களென்றும், துன்மந்திரவாதிகளென்றும், மானமாய் வாழ்பவர்களின் சகவாசத்திற்கு யோக்யதை யற்றவர்களென்றுங் கூறுகிறோம். ஆனால் இம்மாதிரி நடமாடும் பேய் பிசாசுகளுடன் மேல்நாட்டில் அநேகர்

தொடர்பு வைத்துக்கொண்டிருக்கின்றனர். பேய் பிசாசுகள் நடமாடிக் கொண்டிருக்குமிடங்களுக்கருகில் கூட நம் நாட்டினர் செல்லமாட்டார்கள். மேல்நாட்டில் சிரமப்பட்டு பேய் பிசாசுகளை வரவழைத்து அவற்றுடன் சம்பாஷணை நடத்துகின்றனர்.

மனோசாஸ்திர ஆராய்ச்சி நிபுணர்கள் பேய் பிசாசுகளுடன் பேசுவதற்கு பிரத்தியேக மனம் படைத்திருக்க வேண்டுமென்று கூறுகிறார்கள். இயற்கையாக இந்த மனம் படைத்தவர்கள் மிகவும் அபூர்வமே. சோதனைகள் மூலம் ஒருவனுக்கோ ஒருத்திக்கோ இந்த மனம் உள்ளதா என்று தெரிந்துகொண்டு, இருக்குமானால் அந்த ஆள் மூலம் அந்தப் பிசாசைச் சந்தித்துப் பேசுவதற்கு ஏற்பாடு செய்கிறார்களாம்.

பேய் பிசாசுகளைச் சந்திப்பதற்கு மேல்நாட்டார்கள் பரந்த வெளிகளுக்குப் போவதில்லை. அவரவரிருக்கும் வீடுகளிலேயே உல்லாசமாகப் பொழுதுபோக்கான விஷயங்களைப் பேசிக்கொண்டிருக்கும்போதே இந்த நிகழ்ச்சியை நடத்துகிறார்கள்.

பேய் பிசாசுகளைச் சந்திப்பதற்கு மேல்நாட்டார் இதுவரை முக்கியமாக இரு வழிகளைக் கையாண்டிருக்கிறார்கள். இரவு வேளையில் விளக்கையணைத்த பிறகு கதவுகளையும் ஜன்னல்களையும் நன்றாக மூடிவிட்ட பின்னர் பிசாசை வரவழைக்கும் ஆணுக்கோ ஸ்திரீக்கோ ஆவேசமுண்டாகும். இருளாயிருக்கும் சமயத்தில் தந்திரசாலியான ஆட்கள் பிறரை ஏமாற்றி விடுகின்றனரென்ற நம்பிக்கை வளர்ந்ததால் இந்த வழியை இப்பொழுது மேல்நாட்டார்கள் அவ்வளவாக விரும்புவதில்லை. இதைப்பற்றி வெறுப்பாகவும் கேலியாகவும் தான் பேசப்பட்டு வருகிறது.

மற்றொரு வழியில் முக்கியமாக உபயோகிப்பது 'ஸ்டூல்' போன்ற, நான்கு கால்கள் கொண்ட ஒரு பலகை; பலகைக்கடியில் ஒரு பென்ஸில்; அந்தப் பென்ஸிலுக்கடியில் ஒரு காகிதத்தை வைத்துக்கொண்டு பலகையின் மீது இரு கைகளையும் வைத்துக்கொண்டால் அடியிலுள்ள பென்ஸில் தானாகவே எழுத ஆரம்பிக்கும். பலகை மீது கை வைக்கும் ஆள் பேய்களைச் சந்திப்பதற்குத் தகுந்த மனம் படைத்தவனா யிருக்கவேண்டுமென்று கூற வேண்டியதில்லையே!

ஒரு தினம் ஒரு அமெரிக்கக் கிராமத்தில் இந்தப் பலகையைத் தங்கள் முன் வைத்துக்கொண்டு அதன் தகவல்களைப் பற்றிக் கிராமவாசிகள் பேசிக்கொண்டிருந்தார்கள். ஒருத்தி இதைச் சோதித்துப் பார்க்கவேண்டுமென்று கூறிக்கொண்டு பலகையினடியில் ஒரு காகிதத்தைச் சொருகி, பலகை மீது இருகைகளையும் வைத்

தாள். உடனே கர கரவென்று பென்ஸில் காகிதத்தில் கிறுக்கும் சத்தம்கேட்டது. சில நிமிஷங்கள் கழித்து, காகிதத்தை யெடுத்து அவர்கள் பார்த்தார்கள். அதில் கண்டிருந்தது இவ்வாறு:—

"அநேக வருஷங்களுக்கு முன்பு நான் இந்தக் கிராமத்தி லிருந்தேன். இதே கிராமத்தில்தான் நான் இறந்தேன். என் பெயர் 'பேஷன்ஸ்'."

இதைக் கண்டு ஸ்திரீகள் அதிசயித்தார்கள்; மீண்டும் அந்த ஸ்திரீ பலகையின் மீது கையை வைத்தாள். பென்ஸில் எழுத ஆரம்பித்து விட்டது!

"உன்னிடம் நான் பேச விரும்புகிறேன். நீ உயிரோ டிருக்கும் வரையிலும் நான் உன் மூலம் பிறரிடம் பேசுவேன். சமையலறையில் சமைத்ததும் விதவிதமான ஆகாரங்கள் சாப்பிட் டதும் எனக்கு நினைவில்லையா?" இவள் பென்ஸில் குறிப்புகளில் வந்த பெயரைக் கண்டதும் சில வருஷங்களுக்கு முன்பு வரையிலும் அதே கிராமத்திலிருந்த ஒரு ஸ்திரீதான் இவள் என்று தெரிந்தது. பிறகு அடிக்கடி இந்தப் பலகை மூலம் இந்த ஸ்திரீயின் தகவல் கிடைத்து வந்தன.

ஒரு தினம் 'பேஷன்ஸ்' என்ற ஸ்திரீ உயிரோடிருக்கும்போது அவளுக்கு நல்ல பரிச்சயமுள்ள டாக்டர் ஒருவர் இவர்கள் வீட்டிற்கு வந்ததும் தற்செயலாக அந்த ஸ்திரீயின் ஆவியோடு இவர்களில் ஒருத்தி பேசிக்கொண்டிருக்கிருர் என்று தெரிந்தது. உடனே டாக்டர் அந்த ஸ்திரீயிடம் 'பேஷன்ஷி'ன் ஆவியை வர வழைக்கச் சொன்ஞர். அவள் உயிரோடிருக்கும்போது அந்த டாக்டரும் அவளும் ஒருவரை யொருவர் கேலி செய்யுமளவிற்கு சகஜமாய்ப் பழகிக் கொண்டிருந்தார்களாம். இப்போது டாக்ட ரின் கோரிக்கைபின்படி அந்த ஸ்திரீயின் ஆவி பிரசன்னமானதும் பழைய ரீதியிலேயே ஏட்டிக்குப் போட்டியான விடைகளை அவர் கேள்விக்குப் பலகையினடியிலுள்ள காகிதம் மூலம் அளித்தாள்.

இந்த நிகழ்ச்சியை அநேக மஞே சாஸ்திர நிபுணர்கள் ஆராய்ச்சி செய்தார்கள். ஒருவரை ஏமாற்றுவதற்குள்ள அம்சங் களே இதில் இல்லை என்று எல்லோருக்கும் புலஞயிற்று. பட்டப் பகலிலோ, இரவாஞல் தகுந்த வெளிச்சத்தை ஏற்படுத்திக் கொண்டோ தான் இந்த ஸ்திரீகள் பலகையினருகில் உட்காரு வார்கள். இதஞல்தான் இறந்தவர்களின் ஆவிகளோடு பேசுவ தற்கு மேல்நாட்டார்கள் இந்த வழியை விரும்புகிருர்கள்.

மேற்கூறிய உதாரணக் கதையில் வரும் இரண்டு ஸ்திரீகளுக் குள்ள பிரத்தியேக மனம் அநேகரும் பெறலாமென்ற நம்பிக்கை மஞே சாஸ்திர ஆராய்ச்சி நிபுணர்களுக்குண்டு.

இந்த மனத்தை விரும்புவோர்கள், அதைப் பெற வழிகளைக் காட்டும் நூல்களும் பிரசுரமாயுள்ளன. மேற்கூறிய பலகையின் மூலமாகவும், ஆவேசம் மூலமாகவும் இறந்தவர்களின் ஆவியைப் பிரசன்னமாக்கும் தொழிலில் ஈடுபட்டு புகழ் பெற்றவர்கள் அநேகர் மேல் நாடுகளில் உண்டு. இவர்களுக்கு, உயிருள்ளவர்களுக்கும் உயிரிழந்தவர்களுக்கும் தொடர்பளிக்கும் 'மத்தியஸ்தர்கள்' என்று பெயர்.

இறந்து போனவர்களோ போயாகிவிட்டது, உயிருள்ளவர்கள் அவர்களைச் சந்திப்பதற்காகப் பாடுபடுவதில் பயனுண்டா வென்று மேல்நாடுகளிலேயே அநேகருக்கு வெறுப்புத் தோன்றுவதுண்டு. இம்மாதிரி வெறுப்புத் தோன்றுபவர்களுக்குப் பூரண திருப்தியளிக்கும் பதில் கூற முடியாமலிருக்கலாம். இருந்தபோதிலும் பெற்றோர், சகோதர சகோதரிகள், உத்தம நண்பர்கள் முதலியோரிடம் உள்ள பந்தம் மரணத்தினால் மறைவதில்லை. சதா கண்ணீருங் கம்பலையுமாக, துக்கத்திலாழ்ந்து இறந்துபோன உறவினரையோ, நண்பரையோ நினைத்துக் கொண்டிருக்கும் ஒருவருக்கு இந்த 'மத்தியஸ்தர்' மூலமாக இறந்து போனவர், உயிரோடிருக்கும்பொழுது தன்னோடு எப்படி சம்பாஷித்தாரோ அதே முறையில் சம்பாஷிக்கச் சந்தர்ப்பங் கிடைப்பது நொந்த மனத்திற்குச் சற்று ஆறுதல் தரத் தகுதியான காரியமல்லவா? அநேகர் இம்மாதிரி 'மத்தியஸ்தர்கள்' மூலம் இறந்து போனவர்களிடமிருந்து மிகத் தேவையான உபதேசமும் ஆறுதலும் பெற்று நன்மை யடைந்திருக்கிறார்களாம். மனிதனுக்கு நன்மையளிக்கும் எக்காரியமும் சிறந்தது என்று கருதுபவர்களுக்கு 'மத்தியஸ்தர்கள்' மூலம் நடக்கும் இம்மாதிரி நிகழ்ச்சிகளைப் பற்றி ஆட்சேபமோ வெறுப்போ இருக்காது.

எப்போதும் உற்சாகம் அளிப்பது
அசோகா சுகந்த பாக்குத்தூள்

அளவற்ற செலவாலும் அணு அனுகூலமில்லை

•

உலகத்திலுள்ள பொருள்கள் எல்லாவற்றிலும் மிகச் சிறிய அளவுகொண்டது, அணு. ஆனால் அணுவைக் கையாளுவதற்காக அமைக்கப்படும் ஆராய்ச்சிசாலைகளும் இயந்திர சாலைகளும், பணச் செலவிலும், அளவிலும் பிரம்மாண்டமானவை. குண்டுகள் தயாரிப்பதற்குத் தகுந்த அணுவைத் தரும் யூரேனியம் என்ற பொருளை தங்கத்திலிருந்து எடுப்பதற்கும் தயாரிப்பதற்கும் கோடிக்கணக்கான பவுன்கள் செலவாகின்றன.

இவ்வளவு செலவில் தயாரித்த பொருளை மறுபடியும் ஒரு தடவை சுத்தப்படுத்துவதற்குக் கோடிக்கணக்கான பொருட் செலவில் அமைக்கப்பட்ட தொழிற்சாலைகள் தேவையாயிருக்கின்றன.

சுத்தப்படுத்திய பொருளிலிருந்து அணுகுண்டு வெடிக்குமாறுசெய்வதற்கும் கோடிக்கணக்கான பவுன்கள் செலவில் அமைக்கப்பட்டுள்ள ஆராய்ச்சி சாலைகளும் தொழிற்சாலைகளும் தேவை.

வெடிப்பதற்குரிய ரூபம் பெற்றபின்னர் அதைச் சோதித்துப் பார்க்கவும் தகுந்ததாயிருந்தால் குண்டுக்குள் அமைக்கவும் கூடிய இயந்திரங்களை அமைப்பது மிகச் சிரமம். இந்த இயந்திரங்களை அமைப்பதற்கும் கோடிக்கணக்கான பவுன் செலவாகும்.

மேற்கூறியதிலிருந்து அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் அணுவை ஆராய்ச்சி செய்வதற்கும் அதை தயாரிப்பதற்காகவும் எவ்வளவு செலவு செய்கிறார்களென்பதை நாம் யூகிக்கலாம். நாகரிக உலகின் முன்னணியில் நிற்கும் இரு ஜன சமூகங்கள் இவ்வளவு பணஞ் செலவுசெய்வதும் சிரமமெடுப்பதும் மனித சமூகத்தை யொழிப்பதற்கல்லவென்று தான் மேல் நாட்டுத் தலைவர்கள் அடிக்கடி கூறுகிறார்கள்.

சமீபத்தில் வெளியான 'அணுவைப்பற்றிய அறிக்கை' என்ற புத்தகத்தில் அதனுடைய ஆசிரியர் இவ்வாறு கூறுகிறார்:- "அணு வந்துவிட்டது. இனிமேல் உலகிலுள்ள எண்ணெயும் நிலக்கரியும் தீர்ந்துவிட்டாலும் மின்சாரம் கிடைக்காதோவென்று பயப்படவேண்டியதில்லை. பளுவேயில்லாத ஒரு பொருள், இந்த அணு. உலகத்திலுள்ள பாலைவனங்களுக்கும் பனி மூடிக் கிடக்கும் பிரதேசங்

களுக்கும் இந்த எரிக்கும் சக்தியைக் கொண்டு சென்று மின்சார சக்தியைச் சிருஷ்டிக்கலாம். பாலைவனத்தில் நீரைப் பாய்ச்சும் சக்தியிருந்தால் உலகம் எவ்வளவு நன்மையைப் பெறும்? பளுவாயிருக்கும் எண்ணெயையும் நிலக்கரியையும் கப்பல்கள் மூலம் கொண்டு போவது நின்றால் உலகத்திற்கு செலவு எவ்வளவு மிச்சமாகும்?''

இந்த எழுத்தாளரின் கருத்துக்களை இப்பொழுது மனப்பால் என்றுதான் கூறவேண்டும். அணுவின் சக்திக்கு அளவென்ன? அதை மனிதனுக்கு எவ்வாறு பயன்படுத்தக்கூடும் என்பதையும் இன்னும் ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறார்கள். அணுவிலிருந்து மின்சார சக்தியைச் சிருஷ்டிக்க முடியுமா என்று சோதிப்பதற்கான ஆராய்ச்சி சாலைகளைக் கோடிக்கணக்கான பவுன்கள் செலவில் நிர்மாணிப்பதற்கு இப்பொழுதுதான் யோசனை செய்து வருகிறார்கள். இன்னும் ஒரு அணுவளவிற்குக்கூட அணுவிலிருந்து மின்சார சக்தி கிடைத்தபாடில்லை.

அணு ஆராய்ச்சி, அணு குண்டு தயாரிப்பு இவ்விரு துறைகளிலும் ஒவ்வொரு ராஜ்யமும் தனிப்படையாக உழைத்துப் பலனையடைவதென்பது சாத்தியமாகாது. இதற்காக ஏற்படுஞ் செலவை ஒரு ராஜ்யத்தால் மட்டும் தாங்க முடியாது. போதிய அளவிற்குள்ள விஞ்ஞான நிபுணர்களும் ஒவ்வொரு ராஜ்யத்திலும் தனிப்படையாகக் கிடையாது. அதனால் மற்ற ராஜ்யங்களின் உதவியுடன் தான் அணு ஆராய்ச்சித் துறையில் பயனடைய முடியும். ஒரு ராஜ்யத்தில் யூரேனியம் கிடைக்கலாம்; மற்றொரு ராஜ்யத்தில் அதை ஒரு தடவை சுத்தப் படுத்துவதற்குள்ள இயந்திர சாலைகளிருக்கலாம்; மூன்றாவது ராஜ்யத்தில் அணுவைப் பயன்படும் ரீதியில் பக்குவப் படுத்துவதற்குரிய தொழிற் சாலைகளிருக்கலாம். இப்படி நிலைமையிருப்பதால் அணு மூலம் உலகம் நன்மையடைய வேண்டுமானால் எல்லா ராஜ்யங்களுக்கிடையே நேசப்பான்மையும் உதவி மனப்பான்மையும் நிலவவேண்டும். இந்த மனப்பான்மை பூரணமாக இதுவரை இல்லாததே மனிதன் அணுவிலிருந்து பூரண நன்மையை யடையாததற்குக் காரணம்.

அணுவிலிருந்து மின்சார சக்தி யெடுப்பதற்குத் தகுதியான இயந்திர சாலைகளை அமைப்பதற்கு, எண்ணெயிலிருந்தும் நிலக்கரியிலிருந்தும் மின்சார சக்தியை எடுப்பதற்குள்ள யந்திரசாலைகளை விட எத்தனையோ பங்கு செலவு அதிகமாகும்.

இதைத் தவிர இவற்றின் நிர்வாகச் செலவும், யந்திரங்களின் பழுது பார்க்கும் செலவுகளும் அளவுக்கு மீறியவை. அணு

வைத் தயாரித்து உபயோகிக்கும் இயந்திரங்களை அமைக்கும் வழிகள் தினந்தோறும் மாறிக்கொண்டேயிருக்கின்றன. அதாவது அணுவிலிருந்து மின்சாரத்தை எடுப்பதற்குத் தகுதியான இயந்திரங்கள் எவையென்று இந்தத் துறையில் உழைக்கும் விஞ்ஞானிகளுக்கு இன்று வரை புலப்படவில்லை. ஒரு ராஜ்யத்தில் விஞ்ஞானிகள் செய்யும் ஆராய்ச்சிகளும் அவர்களுக்கு நேரிடும் அனுபவங்களும்தான் மற்றொரு ராஜ்யத்து ஆராய்ச்சியாளர்களுக்குப் பாடமாக அமைகிறது. அனுபவங்களையும் ஆராய்ச்சிகளையும் இந்தத்துறையிலீடுபட்டுள்ள சகல ராஜ்யங்களுக்கும் ஒவ்வொரு ராஜ்யமும் அளிக்க வேண்டுமென்ற பிரச்னையை எல்லா ராஜ்யங்களும் இன்னும் ஒப்புக்கொண்டாகவில்லை.

அணுவிலிருந்து அணுவளவு கூட நன்மை நாம் இன்னும் பெருததற்கு மேற்கூறியவையே காரணமாகும்.

கண்ணுள செய்திகள் !

எகிப்து தேசத்தில் பழங்காலத்தில் கண்களைத் தொழுதும், அவற்றை ரக்ஷைகளாக உபயோகித்தால் நல்ல ஆரோகியமும் தீட்சண்யமான கண்பார்வையுங் கிடைக்குமென நம்பிவந்தார்கள்.

கண் பார்வையில் தீட்சண்யம் பெற்ற கழுகின் பித்த நீரிலிருந்து தயாரித்த தைலத்தை பழங்காலத்து கிரேக்கர்கள் உபயோகித்துத் தங்கள் கண்களைப் பாதுகாத்து வந்தார்கள்.

சீன தேசத்தில் மூக்குக் கண்ணுடி அசாதாரணமான சக்தி படைத்ததென்ற நம்பிக்கையுண்டு. மூக்குக் கண்ணுடியைத் தரித்துக்கொண்டால் நீண்ட ஆயுளைப் பெறலாமென்றும் கருதிவந்தார்கள்.

மேல் நாடுகளில் அநேக ஸ்திரீகள் காதுகளைக் குத்திக்கொள்வதனால் கண்களுக்கு நன்மையுண்டாகிறதென்று இன்றும் நம்புகின்றனர்.

புராதன காலத்தில் மீசை வைத்துக்கொள்வதால் கண் பார்வை தீட்சண்யமாயிருக்குமென்ற நம்பிக்கை நிலவிவந்தது. ஒரு காலத்தில் கண்களைத் தோண்டியெடுத்து சுத்தஞ்செய்து, திரும்பவும் வைத்துக்கொண்டால் கண்களுக்கு அதிக சக்தி தரும் என்ற நம்பிக்கையும் இருந்து வந்தது.

கண்களைப் பூனே வாலால் துடைப்பதால் கண்களுக்கு ஒரு கோளாறும் நேராதென்ற நம்பிக்கையும் மேல் நாடுகளிலிருந்தது.

"குச்சாமாமா"வின் சிறு தொடர்கதை—இரண்டாம் பாகம்

போதும், போதும் பட்டணவாசம்!

VI

'பிக்னிக்' பார்ட்டி

கல்யாணபுரத்திற்கு வந்து சேர்ந்து ஒரு மாதமாகி இருக்கும். கல்யாணராமனும் சீதாலக்ஷ்மியும் ஒரு லக்ஷிய தம்பதிகளாய் வாழ்வதைப் பற்றித் தான் ஊரெல்லாம் பேச்சு. ஊதுவானே இப்போது பண்ணையின் முழு அதிகாரத்தையும் பெற்று அலுவல்களை கவனித்து வரத் தலைப்பட்டான். அவனுக்கு வயதோடு கூட விருத்தாப்பியம் ஏறுவதற்குப்பதில், வயசு ஏற ஏற வாலிபம் திரும்பத் தொடங்கியது. இன்னும் 2 வருஷத்தில் ஊதுவானுக்கு வயசு 60 ஆகும். அப்போது பரிசம் போட்டு ஒரு பெண்ணைப் பிடித்துக் கலியாணம் செய்யவேண்டியது தான் என்று ஊரில் சிலர் கேலி செய்த வகையில் அவன் உழைப்பை மெச்சிக்கொண்டனர்.

கோவில், குளம் எங்கே போனாலும் கல்யாணராமனுடன் சீதாலக்ஷ்மியும் சேர்ந்து போவது தான் வழக்கம். வயல், காடு, களம் காட்சிகளுக்குப் போனாலோ கல்யாணராமனுடன் ஊதுவான் கட்டாயமாகக் காட்சியளிப்பான்.

அவ்விதம் கல்யாணராமன் வெளியே சென்ற அரை மணிக்கெல்லாம்—சீதாலக்ஷ்மியை சேஷிப் பாட்டி கல்யாணராமனிருக்குமிடம் தேடிச் செல்ல அனுப்பிவிடுவாள்.

"சீலா...அந்த ரெயில் கூஜாவிலே காப்பி இருக்கு. அதை எடுத்துண்டு போய் கல்யாணத்துக்குக் கொடுத்துட்டு வா" என்பாள்.

"அம்மா! இப்பத்தானே உங்க பிள்ளே வெளியிலே போனா! இன்னும் அரைமணியாகல்லே. இதுக்குள்ளே என்ன களைத்துவிடுமாம்? இதுக்குள்ளே இப்படி அங்கலாய்க்கறேளே" என்பாள் சீதாலக்ஷ்மி.

"வயக்காட்டிலே — ரெண்டு சுத்து வந்தா கலகலான்னு போயிடாதோ? அங்கலாய்க்கறேனா? இருக்குண்டியம்மா இருக்கும். நாளைக்கு உன் பிள்ளே வெளியிலே போயிருக்கச்சே நீ அங்கலாய்க்கிறயோ, இல்லே, சும்மா இருக்கறயோன்னு அன்னிக்குத் தெரியும். இப்ப நான் சொல்றதைக் கேக்

கணும்'' என்பாள் சேஷிப் பாட்டி.

''சரி'' என்று சீதாலக்ஷ்மி புறப்படும்போது, அந்தக் குடையை எடுத்துண்டு போயேன். வெயில்லே ரெண்டு பேரும் வேர்க்க விருவிருக்க இருக்கவேண்டாம். அக்கம் பக்கத்திலே மரத்தடியிலே உட்காந்துண்டு இருங்கோ. ரெண்டு பேருக்குங்காணும் காப்பி. உச்சி வேளைக்குத் தனியாகத் திரும்பி வராதே. சிறிசுகள் வரப்படா தூம்பா பெரியவா. அம்மா எதையாவது தின்னுப்பிடுவளோன்னு ஸந்தேகப்பட்டுண்டு ஓடி வராதே. கல்யாணத் தோடயே சேர்ந்தாப்லே வந்து சேரு. தெரிஞ்சுதா, அந்த கருப்புக்கண்ணுடியையும் எடுத்துண்டு போம்மா! கண்ணுடியைப் பாத்துத் தலையைக் கோதிண்டு நெத்திப் பொட்டை நேராக்கிண்டு போயிட்டு வாம்மா. வயக்காட்டிலே வேலைக்கு வரும் ஸ்திரீகள் கூட கல்யாணத்துக்குப் போர சம்பந்தி மாதிரி சிங்காரித்துக் கொண்டு வரணம்னு அந்தக் காலத்திலே கல்யாணம் அப்பா சொல்வார். ஊதுவானைக்கேளு, சொல்லுவான்'' என்று ஆயிரம் ஏற்பாடுகளுடன் சீதாலக்ஷ்மியை அனுப்பி வைப்பாள் சேஷிப் பாட்டி. இம்மாதிரி ஒரு 'பிக்னிக்' பார்ட்டி அனேகமாக வாரத்தில் குறைந்தது இரண்டாவது நடைபெற வழி கோலுவாள் சேஷிப் பாட்டி.

ஒரு சமயம் சீதாலக்ஷ்மி வரச் சிறிது தாமதித்துவிடிலோ ''அம்மா...சின்ன எசமான் நீராகாரம் கொண்டுகினு கொயங்தேயே அனுப்பி வைக்க சொன்னுரு'' என்று சொல்லிக் கொண்டு ஊதுவான் வந்துவிடுவான். பிறகு சீதாலக்ஷ்மியை அனுப்பிவைக்கச் சேஷிப் பாட்டி துரிதப்படுவாள்.

இவ்விதமாகத் தான் கல்யாணமும் சீதாலக்ஷ்மியும் சுக வாழ்வு வாழ்ந்து வந்தனர்.

அன்று ஆடி வெள்ளிக் கிழமை. கோவில் புஷ்கரணிக் கரை மேல் அரசமரத்தடியிலிருந்த புற்றுக்குப் பால் தெளிக்கச் சீதாலக்ஷ்மி வந்திருந்தாள். அச் சடங்கின் வழிகளையெல்லாம் பக்கத்து வீட்டு அய்யங்கார் மாமி ஏற்கெனவே கூட விருந்து சீதாலக்ஷ்மிக்குப் பழக்கிக் கொடுத்திருந்தாள். இன்றைய தினம் அதிகாலையிலிருந்தே சேஷிப் பாட்டியின் கடுபிடிகள் அதிகம். ''சீலா! ஆகட்டும் மங்கள ஸ்நானம், வெந்நீர் ஆறிப்போகிறது.சீலா! புற்றுக்குக் கோலம் போட மாவு எடுத்துக்கோ! அருகம்புல்லு! அரிசி, வெல்லம்...பால்...சந்தனம், மஞ்சள்...குங்குமம், சரி... சரி...வெற்றிலைப் பாக்கு—பழம்...புஷ்பம்...சரி, சரி... அந்தக் கூஜா, சொம்பு எல்லாம் எடுத்துக்கோ ... குளத்திலே தேய்த்து புது ஜலம் எடுத்துக்கோ...விளக்கு...அந்த சாமி விளக்கே எடுத்துக்கோ...தீப்பெட்டி...சரி, சரி...குளத்திலேர்ந்து கல்யாணத்தே . ஒரு

தாமரைப் பூ பறிச்சு கொடுக்கச் சொல்லி—புத்துக்குச் சாத்து... பால் தெளித்தானதும் மொத மொத நாலுபேர் சுமங்கிலி களுக்கு வெற்றிலை பாக்கு மஞ் சள், பழம், குங்குமம், புஷ்ப மெல்லாம் கொடுத்து நமஸ்காரம் பண்ணீட்டு அப்படியே கோவி லுக்குப் போய் சுவாமி தரிச னம் பண்ணிண்டு அம்பாளை வேண்டிக்கோ...எனக்குக் காலாகாலத்லே குடி விளங்க ணும்னு வேண்டிக்கோ......... என்னும் போதே சேஷிப் பாட்டிக்கு அழுகை துத்திக் கொண்டுவரும். கண்ணைத் துடைத்துக் கொண்டே "அந்த ஒரு வைபோகத்தையும் பார்க் கணம்னு இந்த உசிரே கையிலே பிடிச்சிண்டு இருக்கேம்மா சமர் த்தா போய்ட்டு வா......கல்யா ணம். நீயும் கூடவே போய்...பூ பரித்துக் கொடுத்து..."

அப்பப்பா! இந்தக் காரியத்தில் தான் எத்தனை அக்கறை இந்த சேஷிப் பாட்டிக்கு!

அவ்வாறு புற்றுக்குப் பால் தெளிக்கவே அன்று சீதா லக்ஷ்மி குளக்கரைக்கு வந் திருந்த நேரம், அய்யங்கார் ஸ்வாமிகளின் அனுஷ்டானம் நடந்துகொண்டிருந்தது. தாம ரைப் பூ கரையிலிருந்து எட்டிப் பறிக்கக் கூடியவை யாதும் இருக்கவில்லை. கல்யாணம் குளத்தில் இறங்கி இலகுவாக, தாமரையை அலட்டாமல் நீந் திச் சென்று நான்கு புஷ்பங் களைப் பறித்துவந்து சீதாலக்ஷ்மி யிடம் கொடுத்தான்.

"பிறகு சரி! நீ பால் தெளிப் பதற்குள் வீட்டிற்குப் போய் வேஷ்டி மாற்றிக் கொண்டு வந்து விடுகிறேன்" என்று புறப் பட்டான்.

"இத்தனை பூவையுமா பறித்து விடுவது? ஒண்ணு போருமே. நமக்குத் தேவைக்கு மேல் எடுத்து ஏன் வீணாக்கவேண் டும்?" என்று சீதாலக்ஷ்மி கல் யாணத்தைக் கோபிப்பது போல் கடிந்துகொண்டாள்.

"இதற்கென்ன காசா, பணமா? குளத்தில் கிடந்து பாழாவதில் பின்னும் இரண்டு கொண்டுவந்தால் என்ன வென்று கோபிப்பாயோ வென்று பயந்து தான்...நாலா கக் கொண்டு வந்தேன்" என் றான் கல்யாணம்.

"ரொம்ப பயப்படுகிற பிள்ளை தான். போதுமே உங்கள் சமர்த்து. இந்தாருங்கோ. இந்த இரண்டு புஷ்பங்களையும் பக்கத் தாத்து மாமாகிட்டே கொடுங்கோ" என்று பணித் தாள் சீதாலக்ஷ்மி.

அய்யங்கார் ஸ்வாமிகளோ இவ்விளந் தம்பதிகளின் ஊட லைக்கண்டு மிகவும் மனங்குளிர்ந் தார்.

"பசங்கள் இப்படித்தான் இருக்கவேண்டும். பெரியோர் கள் இதைக் கண்டு பூரிக்க வேண்டும்" என்று மனத்தில் எண்ணிக் கொண்டிருக்கையில் கல்யாணம் இரண்டு புஷ்பங் களைக் கொண்டுவந்து கொடுத் தான்.

அதைப் பெற்றுக்கொண்ட அய்யங்கார் ஸ்வாமிகள் "சந்தோஷம் கல்யாணம், நம்ம 'சிலு' ரொம்ப சமர்த்து. அவள் காரியங்களும், பேச்சும், சமர்த்தும் பார்த்தால் எங்காத்து பங்கஜமேதான்னு தோணிப்போறது. பெருமாளுக்கு பாராயணத்தின்போது சாத்துகிறேன். நீயும் மத்யானம் சாப்பிட்டானதும் எங்காத்துப் பக்கம் வாப்பா. உன்னோடே கொஞ்சம் பேசணும்," என்றவர் உடனே தன்னைத் திருத்திக்கொண்டு, "சிலா மத்தியானம் சாப்பிட்டானதும் கல்யாணத்தையும் கூட்டிக் கொண்டு எங்காத்துப்பக்கம் வாம்மா. சித்தே நேரம் பேசணும்" என்றார்.

"அம்மா கிட்டே சொல்றேன் மாமா" என்று சுருக்கமாகப் பதில் சொன்னாள் சீதாலக்ஷ்மி.

"நியாயம், ரொம்ப நியாயம். நானே அப்படித்தான் சொல்லி இருக்கணும்" என்று ஆமோதித்தார் அய்யங்கார் ஸ்வாமிகள்.

VII

கல்யாணத்தின் கதை

அன்று மத்தியானம் கல்யாணராமனும் சீதாலக்ஷ்மியும் அய்யங்கார் ஸ்வாமிகள் வீட்டிற்குச் சென்றனர். சேஷிப் பாட்டி இவர்களை அனுப்பியபோது அங்கு எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று ஒரு பிரஸங்கமே பண்ணி கடைசியில் "பாராயணம் பண்ணின பிரஸாதம் கொடுத்தால், அவரையும், அவாத்து மாமியையும் நமஸ்காரம் பண்ணிவிட்டு வாங்கிக்கோங்கோ" என்றும் எச்சரிக்கை செய்தனுப்பினாள்.

வந்தவர்களை வரவேற்ற அய்யங்கார் ஸ்வாமிகள் சேஷிப் பாட்டி சொன்னபடியே பாராயணப் பிரஸாதம் வழங்கினார். நமஸ்கரித்து அவற்றைப் பெற்றுக்கொண்டபிறகு அவர்களை உட்காரச் செய்து சற்று நேரம் ஏதோ லோகாபிராமமாகப் பேசி வந்த அய்யங்கார் ஸ்வாமிகள் "உன்னை ஒன்று கேட்கவேணும், கல்யாணம்" என்று ஆரம்பித்தார்.

"முதலில்பட்டணம் பட்டணம் என்று பிரமாதப்படுத்தி பட்டணத்தில் குடித்தனம் போட்டாய். ஆனால் ஒரு வருஷத்திற்குள் மூன்று வீடுகள் மாறினாய். சேர்ந்தாப்போல் ஒரு மாஸமாவது ஒரே வீட்டில் சிலாவுடன் குடித்தனம் பண்ணவில்லை. இதற்குள் பட்டணமே புளித்து—பட்டண வாழ்க்கையுங் கசந்துவிட்டது. எங்களுக்கெல்லாம் காரணமில்லாமலே பட்டணம் என்றால் ஒரு வெறுப்பு. உனக்கோ அவ்வெறுப்பு அனுபவத்தால் ஏற்பட்டது. இதற்குக் காரணந்தெரிந்தால் எங்களுக்குள்ள வெறுப்பின் நியாயம் தெளிவுபடும். அப்படி அடிக்கடி வீடு மாற்றின காரணம் என்ன?..." என்று கேட்

டுக் கொண்டே போன அய்யங்காரை இடைமறித்து—

"முதல் முதல் வீடு மாற வேண்டுமென்றதற்கு நான்தான் காரணம். அதை வேணுமானால் சொல்லி விடுகிறேன். இரண்டாவது வீட்டை மாற்றியதற்கு சீலா தான் காரணம். அதை அவளையே கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். மூன்றாவது வீடு பிடிக்காமல் போனது அம்மாவுக்குத்தான். அது ஏன் என்று அம்மாவிடமே கேட்டுக்கொள்ளுங்கள்" என்றான் கல்யாணராமன்.

"சரி முதல் கதையை நீ சொல்லு" என்று அய்யங்கார் ஸ்வாமிகள் சொன்னதும், கல்யாணராமன் ஆரம்பித்தான். இந்த விஷயம் சீதாலக்ஷ்மிக்கும் தெரியாததானதால் அவளும் சிரத்தையுடன் கேட்கத் தயாரானாள்.

★

"மயிலாப்பூரில் தான் நான் முதன் முதலில் ஏற்பாடு செய்த வீடு. சிறியதொரு தெருவில் தான் வீடு இருந்தது. வண்டி, காடி என்பன போன்ற தலை வேதனைகள் ஒன்றுமில்லாதது. அக்கம் பக்கங்களிலெல்லாம் இருந்தவர்கள் 'நடுத்தரம்' என்ற பொருளாதாரத்தில்தான் நிலைபெற்றவர்கள். எதிர் வீடு மட்டும் பூட்டி இருந்தது. அந்த வீட்டிலிருந்தவர்கள் எங்கேயோ வெளியூர் போயிருந்ததாக மட்டும் தான் விசாரித்ததில் தகவல் கிடைத்தது.

வீடு அம்மாவுக்கும் ரொம்பவும் பிடித்திருந்தது. சீலுவை வரவழைத்தேன். சீலு வந்த நான்கு தினங்கள் ரொம்பவும் இன்பமாகக் கழிந்தன. ஐந்தாம் நாள் எதிர் வீட்டுக்காரர்கள் ஊரிலிருந்து வந்து விட்டனர்.

அந்த வீட்டிலிருந்தவருள் பிரதானமானவர் ஒரு பெண் மணி. வயது சுமார் இருபத்தைந்து இருக்கும். இரண்டு வயதில் ஒரு குழந்தை. அதை எடுத்து வைத்துக்கொள்ள நிரந்தரமாக ஒரு "போயி". இவர் தவிர அவ்வீட்டில் வேறொரு ஆடவருமிருந்தார். அவருக்குச் சுமார் 35 வயதிருக்கலாம். எப்பொழுதாவது அத்தி பூத்தாப்போல் அவர் தரிசனம் ஒரு நிமிஷம் காணக் கிடைக்குமே யன்றி மற்ற நேரங்களில் அவ்வித நபரொருவர் வீட்டிலிருப்பதே தெரியாது. வீடு அல்லோல கல்லோலப்படும். ஆனால் மேற்சொன்னவரின் குரல் கேட்கவே கேட்காது.

நாகரிகம், முற்போக்கு என்றெல்லாம் சொல்லும் வகைகளின் முழுத்தோற்றமும் இங்கு காட்சியளித்தன. சினிமாவென்றும், டிராமாவென்றும், நாட்டியமென்றும், நடனமென்றும், காட்சியென்றும், கச்சேரி என்றும், பாட்டு என்றும், கூத்து என்றும், அப்பப்பப்பப்பா... இந்த அம்மாளுக்கு அழைப்புகள் வந்தபடி தான். சிறியதான அந்த தெருவில் இவர்களைத் தேடி வருவோரின் மோட்டார் வண்டிகள் அந்தத் தெரு முழுவதும் நிரம்பிப் பின் இரு

19875 2

புறமும் வழியும். காலையில் 10 மணி வரையில் தெருக் கதவுதிறக்கப்படாது அடைத்தே இருக்கும். பிறகு அந்த 'போயி' எங்கேயோ ஓட்டலிலிருந்து காப்பி, பலகாரங்கள் வாங்கி வருவான். பிறகு அரை மணி நேரங் கழிந்தால் அவ்வம்மணியைக் காணவேண்டி பிரமுகர்கள் ஒவ்வொருவராய் வரத் தொடங்குவர். முதல் வந்த இரண்டு மூன்று பேர்களுக்குத் தான் உள்ளே உட்கார வசதி இருந்தது. பாக்கியுள்ளவர்கள் தெருவில் இரண்டு பேரும் நாலு பேருமாக அங்கங்கே கூடி நிற்பர். அல்லது அவரவர் கார்களிலேயே இருந்து புழுங்குவர்.

இவ்வாறு கூடி நிற்போரின் பேச்சுக்களின் ஆபாசம் சொல்லி முடியாது. இதனிடையில் எதிர் வீட்டு அம்மாள் உடுத்தித்தயாராகி, பிரமுகர்களைக் காண வருவார். அது முதல் அவருடைய அதிகாரத்தின் எக்காளமும், சந்தோஷத்தின் கொம்மாளமும் அந்த வீடு இடிந்துவிடும் போலிருக்கும். ஏன்? தெருவே கிடுகிடுக்கும்.

கூட்டத்திலுள்ள மற்றவரின் பேச்சுக்களோ—மிகவும் அடங்கியே தான் இருக்கும். இவ்வகை வியவஹாரங்கள் 12 மணி அல்லது 12-30 மணி வரையிலிருக்கும். பிறகு ஒவ்வொருவராக பிரமுகர்களின் திரும்புகால் புறப்பாடு. கார்களின் கதவடைப்பும் — ஹார்ன்களின் ஊளையும் அப்பப்பா! வேதாள உலகம் பட்ட பாடுதான்.

பிறகு எதிர் வீட்டு அம்மாளின் சாப்பாடு—சிறிது இளைப்பாறல். பிறகு மூன்று மணிக்குக் காப்பி. இவையெல்லாம் கூட 'போயி' வாங்கி வருபவை. பிற்பகல் மூன்று மணியிலிருந்து பிரமுகர்களின் வரவுதான். நாலு மணி சுமாருக்கு அம்மாளின் புறப்பாடு. கார்களின் அமர்க்களம். வந்த கார் வந்தபடி தான். அம்மாள் வீட்டிலில்லையா? சரி, திரும்பவேண்டியது தான். இவ்விதமான அமர்க்களம் இரவு 9 மணி, 10 மணி வரையிலிருக்கும். இடையில் ஒரு வண்டியில் அம்மாள் வருவார். தொடர்ந்து 10 நிமிஷத்திற்கெல்லாம் வேறு உடையில் அதே வண்டியிலோ வேறொரு வண்டியிலோ வெளியே புறப்படுவார். இவ்விதமான புறப்பாடுகளும், திரும்புகாலும், இடையில் பிரமுகர்களின் விஜயமும், அவர்களின் திரும்புகால் பிரயாணமுமாக இரவு சுமார் 11 மணி வரையில் ஆயினும், அம்மாள் வீடு வந்திருக்கமாட்டார். இரவு 2 மணிக்குப் பிறகு தான் வீடு வருவார். அந்நேரத்தில் அவரை ஏற்றி வரும் கார் தன் கௌரவத்தை விளம்பரப்படுத்திக்கொள்ளும். போக்குவரத்தே அதிகமில்லாத தெரு. அதிலும் இரவு 2 மணிக்கு அங்கே சஞ்சரிக்கக் கூடியவர் ஒருவருமே கிடையாது. நாட்டிலுள்ளவர் எல்லோருமே நிசாசரர்களாகிவிட முடியுமா? நிர்மானுஷ்யமான அந்தத்தெருவில் வீணை, பலஸ்வரங்களும்

ஒருங்கே சேர்ந்த ஹாரன்களை அலற அலறச் சப்தித்து, அயர்ந்து தூங்கும் ஜனங்களை எழுப்பியும்—தொட்டிலில் தூங்கும் குழந்தைகளை அலறிப் புடைக்கச் செய்து மீட்டும் பெரும் போக்கின் துன்பத்தை பூதேவியே சகிக்க முடியாது.

குறிப்பிட்ட அளவிற்கு மேல் மோட்டார் ஹாரன்கள் சப்திக்கக் கூடாதென்றும், ஊர் சத்தமடங்கிய பிறகு எலக்டிரிக் ஹாரனை உபயோகிக்கவே கூடாதென்றும் ஒரு சட்டம் விதித்தால் எவ்வளவு நன்ருய் இருக்கும்! என்னைப் போன்றவர் இதைக் கோருவது யானை மேலிருப்பவனைச் சுண்ணும்பு கேட்பது போல் ஆகுமன்ருே? அல்லது இவ்வகையான நிசாசர விருத்தியை ஏற்றவர் ஏனையவர் வசிக்குமிடங்களில் வசிப்பது வாயற்றப் பூச்சிகளுக்கியற்றும் துன்பமாகும். ஆகவே நிசாசரர்கள் ஒரு பிரத்தியேகமான காலனியை நிறுவிக்கொள்ள வேண்டும் என்ருவது ஒரு சட்டம் இயற்றலாகாதா? இவ்வகை ஏற்பாடுதான் சிறந்தது என்ற வகையில் அர்த்த சாஸ்திரத்தில் சொல்லியிருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். நம் நாட்டின்—சுதந்திர இந்தியாவின்—அரசியலமைப்புச் சட்டத்தை நிறுவியவர்கள் உலகிலுள்ள சகல தேசங்களின் அரசியலமைப்புச் சட்டங்களையும் வாசித்தறிந்து தமக்குப் பற்றியதெனக் தோன்றியவற்றிலிருந்து பத்யமான பாகங்களைப் பொறுக்கி எடுத்து ஒரு அவியல் செய்தார்களே...இதில் பேருக்காவது நமது பண்டைய அரசியல் சட்டங்களைப்பற்றிக் கூறும் அர்த்த சாஸ்திரம் போன்ற நூல்களை மேற் போக்காகவாவது ஒரு தரம் வாசித்து அதில் தமக்குப் பிடித்தமான அம்சம் ஏதாவது உண்டாவென்று பார்த்ததாகவாவது தெரியவருகிறதா? இதையெல்லாம் சொல்லிப் பயனென்ன?

கலெக்டர் வேலை பார்க்கும் ஒருவர் வீட்டிற்கு அவர் நண்பர் ஒருவர் வந்திருந்தாராம். கலெக்டர் வீட்டுத் திண்ணையின் மேல் உட்கார்த்திருந்த ஒரு மடிஸஞ்சிப் பிரகிருதியைப் பார்த்த நண்பர் 'இவர் யார்' என்று கலெக்டரைக் கேட்டாராம். அதற்குக் கலெக்டர் பெரியவரைத் தனது தந்தை என்று உண்மையைச் சொல்வது அகௌரவம் என்று கருதி ஏதோ பதில் சொன்னுர் என்று ஒரு பழங்கதையுண்டே, அந்த கலெக்டரின் மனப்பான்மைக்கு ஒப்பிடலாமல்லவா இப்படி நமது பழைய அரசியல் நிர்மாண விஷயங்களை விவரிக்கும் நூல்களை பகிஷ்கரித்த நிபுணர்களின் மன நிலையை. அவ்வகை நூல்களைத் தொடக்கூடாது; இல்லை அவற்றின் அருகிற் போகவும் கூடாது. இல்லை இல்லை. அவற்றின் பேரைக் கூடச் சொல்லக் கூடாது. அவற்றை மனத்தாலும் நினைக்கக்கூடாது. அப்பப்பா! இந்த பகிஷ்காரம், தீண்டாமையைக்

கூட அதிக்கிரமித்ததாகிறதே. ஆமாம். ஒருவகையில் தீண்டாமையை ஒழிக்க முற்படுபவர் இன்னொரு வகையில் தீண்டாமையைப் புகுத்துகின்றனர். இல்லை, இல்லை, மன்னிக்கவும். வாய் தவறிச்சொல்லிவிட்டேன். ஒரு வகையில் தீண்டாமை ஒழிகிறது. ஆனால் அது தானே இன்னொரு வகையில் முளைக்கிறது. இது நியதி, இயற்கை என்ன செய்யலாம். இதற்கு மாற்று மனிதனால் கண்டு நிறுவமுடியாது. எதிர் வீட்டு அம்மாளின் வாழ்க்கையின் புதுமை இவ்வாறுதான் இருந்தது.

இவ்வகைப் போக்குள்ளவரைக் கண்டால் அக்கம் பக்கத்திலுள்ளவரின் இளம் உள்ளங்கள் எவ்வகை மாற்றத்தையடையக் கூடுமென்று நிச்சயிக்க முடியுமா? இறுகிக் கெட்டிப்படாத சீலாவின் மனசு இவ்வகை நாகரிக மார்க்கத்தில் பிரவேசியாமலிருக்கவேண்டுமே என்று எனக்கு ஒரு கவலையேற்படலாயிற்று.

ஒருநாள் நான் எங்கேயோ வெளியே சென்றிருந்தவன் வீடு திரும்பியபோது சீலா எதிர் வீட்டு அம்மாளின் பேச்சுப் போக்குக்களைத் தன்னை மறந்து கவனித்துக் கொண்டிருந்தாள். நான் உள்ளே வந்ததைக் கூட அவள் அறியவில்லை. இது எனக்கு ஒரு பிரமிப்பை அளித்தது. என் கவலை அதிகமாயிற்று. சற்று நேரம் பார்த்தேன். அவள் கவனம் வேறு புறம் திரும்பவே இல்லை. சட்டையைக் கழற்றி வைத்துவிட்டுச் சமையலறைப் பக்கம் வந்தேன். அம்மா சீலாவைக் கூப்பிட, சீலா வந்தாள். வந்தவள் என்னைப்பார்த்து ஒரே ஆச்சரியத்துடன் "நீங்கள் வந்துவிட்டீர்களா? எப்பொழுது வந்தீர்கள்?" என்றும் கேட்டாள். பளீரென்று அறைந்தாற்போல் பதில் சொல்லவேணுமென்று எனக்குத் தோன்றியது. ஆனால் அதற்குள் அம்மாவே ஏதோ பதில் சொல்லிவிட்டதால் நான் என் கோபத்தை அடக்கிக் கொண்டேன்.

அன்று இரவு முழுவதும் எனக்குத் தூக்கமே வரவில்லை. அளவு மீறிய கூர்ந்த கவனம் விரும்பத்தகாத பாதையில் செல்ல ஆரம்பித்திருக்கிறது சீலாவிற்கு. இதை எப்படி மாற்றுவது? இதை சீலாவிடம் ஒளிவு மறைவு இன்றி கேட்டுவிடலாமா, என்று யோசித்தேன். ஆனால் அதற்குப் பதிலும் மறுப்பும் என்று ஒரு விவாதம் தொடங்கி ரஸாபாச நிலைமை ஏற்படுமாயின் என்ன செய்வதென்ற பயமும் உண்டாயிற்று. எல்லாவற்றிற்கும் மேல் அம்மாவின் மனசு எங்கள் பூசலைக் கண்டு கஷ்டப்படுமே. ஆகவே அது கூடாது. இவ்வாறு இரவு முழுவதும் யோசனையிலேயே கழிந்தது. விடியற்காலம் எப்படியோ கொஞ்சம் தூங்கிவிட்டேன். எழுந்திருக்கவும் சிறிது நேரமாகிவிட்டது.

காலை பத்து மணி சுமாருக்கு ஒரு தீர்மானத்திற்கு வந்

தேன். முதல் நாள் மாலையிலிருந்து சீலா ஒதுங்கி ஒதுங்கியே நின்று வந்தாள். அந்த வீட்டில் எங்கேதான் ஒளிந்துகொண்டிருந்தாளோ! காணக் கிடைக்கவே இல்லை. அம்மாவுடன் பேசுங் குரலாவது கேட்க வேணுமே, அதுவுங் கேட்கவில்லை. அம்மாவும் கூடத்தில் சுருட்டி மடக்கிக்கொண்டு ஒரு ஓரமாக உட்கார்ந்திருந்தாள். வீட்டின் அமைதி ஒருவரோடொருவர் முரண்டிக் கொண்டிருப்பது போல தோன்றியது. சீலாவைக் கூப்பிட்டு இந்நிலையை விளக்கி இதற்குக் காரணம் அவள் மனத்தில் "தான்" என்ற எண்ணம் உதித்திருப்பது தான் என விளக்கி அவ்வகை எண்ணம் உதித்ததற்குக் காரணம் அக்கம் பக்கத்தாரைப் பார்த்துப் படித்த கோணல் வழி தான் என்று சொல்லிவிட வேண்டுமென்று தீர்மானித்தேன்.

"சீலா...சீலா..." என்று குறைந்தது பத்து தரமாவது கூப்பிட்டிருப்பேன். அப்போது மெதுவாக அருகில் வந்து நின்ற சீலா... "என்னவாம் சீலாவுக்கு?" என்று கடுகடுக்கக் கேட்டாள். என்ன ஒரு தரம் கூப்பிடும் முன் "இதோ வந்துவிட்டேன்" என்று குரல் கொடுத்து ஓடிவரும், சீலாவா இப்படிக் கேட்பது? என்ன வேணும்? என் கூப்பிட்டீர்கள்? என்று தேனொழுகக் கேட்கும் சீலாவா இப்படிப் பேசுகிருள்? சரி, சரி, நாம் எண்ணியது சரிதான் என்ற தீர்மானத்திற்கு வந்தேன். இதைப் பற்றிப் பேசுவதில் இனிப் பயனில்லை. விஷயத்தை இனிமேலும் முற்றவிடக் கூடாது. இவ்வழியில் சீலாவின் மனம் போவதை உடனே நிறுத்தவேண்டும், அதற்கு ஒரே வழிதான். விரும்பத்தகாத போக்குள்ளவர் வசிக்கும் பிரதேசத்திலிருந்து வெளியேறுவதுதான் முதற் காரியமாகச் செய்யவேண்டியது. அதற்கு......? அதற்கு வீடு மாற வேண்டும். எங்கே போவது? அதுவரையில் இந்நிலையை நீடிக்கவிடுவதா? இல்லை கூடாது என்று எண்ணி ஒரு கணத்தில் தீர்மானித்தேன்.

"இன்று சாயங்காலம் மதுரை போகிருேம். புறப்படத் தயாராய் இரு" என்றேன். இதற்கு சீலா ஒன்றுமே பதில் சொல்லவில்லை. "சரி, நீ போகலாம்" என்று உடனே அவளை யனுப்பிவிட்டேன்.

அன்று மாலை வண்டியில் புறப்பட்டு மறுநாள் மதுரை போய்ச் சேர்ந்தோம். மதுரையில் எங்களைக் கண்டதும் மாமருக்கும் மாமியாருக்கும் ஒரே திகைப்பு. அடுத்த வண்டியிலேயே நான் சென்னைக்குத் திரும்பினேன். "அந்த வீட்டில் சீலாவுடன் அரைக்கணங் கூட குடித்தனம் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுவிட்டது. வேறு வீடு பார்த்துக் கொண்டு மாறியதும் தெரியப்படுத்துகி

றேன். சீலாவைக் கொண்டு வந்துவிடுங்கள்'' என்று மட்டும் மாமனாரிடஞ் சொன்னேன். நான் அங்கிருந்த வரையில் சீலா கலகலப்பாகவே இல்லை. ஆகவே அவள் தப்பை அவள் உணர்ந்திருக்கிறாள் என்று எண்ணி ஒரு வகை திருப்தியுடன் திரும்பினேன்.

சென்னைக்கு வந்ததும் அம்மா ''என் போக்கு ஏதோ புதிர்போடுவது போல் இருக்கிறதே'' என்றாள். அதற்கு என்னவோ பதில் சொல்லி மழுப்பினேன்.

பிறகு, மிக மிக முயன்று ராயப்பேட்டையில் ஒரு வீட்டை ஏற்பாடு செய்தேன். ஆனாலும் இதற்கு நான்கு மாதங்கள் பிடித்துவிட்டது. இதனிடையில் சீலா வாரத்திற்கு இரண்டு கடிதங்கள் எழுதிக் கொண்டிருந்தாள். அதில் ஒன்றிலாவது மயிலாப்பூரில் நடந்த விஷயத்தைப்பற்றி எழுதியதே இல்லை. ''வேறு வீடு கிடைத்ததா?'' என்று மட்டும் மறுபடியும் மறுபடியும் எழுதிக் கேட்பாள். ''வீடு செளகர்யமாகக் கிடைக்காவிட்டால் என்ன? நாம் நம்ம ஊருக்கே போய்விடலாமே'' என்றும் எழுதுவாள். இதிலிருந்து, ''ஒருக்கால் சீலாவிற்குப் புதுமைப் பித்து தலைக்கேறவில்லையோ'' என்று எண்ணினேன். ''அல்லது ஏறின பித்தம் இறங்கிவிட்டதா?'' என்றும் ஓர் எண்ணம் தோன்றும். இதற்குள் ராயப்பேட்டை வீடு ஏற்பாடாகி—வீடு மாற்றலும் பூர்த்தியாயிற்று. அதன் பிறகு நான்கு தினங்களுக்குள் சீலாவும் வந்து சேர்ந்தாள். பிறகு அந்த வீட்டில் குடித்தனம் பண்ண முடியாதென்றது சீலா தான். ஆகவே அது விஷயம் அவளையே கேளுங்கள்'' என்றான் கல்யாணம்.

VIII

சீலாவின் கதை

அய்யங்கார் தம்பதிகளிருவரும் இக்கதையை ரஸித்துக் கேட்டு இடி இடி என்று சிரித்தனர். இடையில் அரசியல் விஷயங்களையும் - சமூகத்தின் சீர்கேட்டைப் பற்றியும் – நாகரிகத்தின் விபரீதப் போக்கைப் பற்றியும் கல்யாணம் சொன்னவற்றை அய்யங்கார் ஸ்வாமிகள் மிகவும் ரஸித்தார். ஆனால் அவ்விஷயங்களில் அவருடைய அபிப்பிராயம் யாது என்பது மட்டும் சற்றும் அறியக்கூடவில்லை. பிறகு, ''சரி, சீலா உன் கதையைச் சொல்லம்மா'' என்றார் ஸ்வாமிகள்.

★

''அதெல்லாம் ஒண்ணுமில்லே மாமா, இவா எதை யெதையெல்லாமோ நினைத்துக் கொண்டு என்னென்னமோ வெல்லாம் அர்த்தம் பண்ணிண்டுட்டா. ஒரு வார்த்தை என்னோடு சொல்லியிருக்கப் படாதோ?'' என்று ஆரம்பித்தாள் சீலா.

எதிர் வீட்டில் சிட்டுக்குருவி ஒன்று கூடுகட்டிக்கொண்டிருந்தது. அந்த குருவித் தம்பதிகள் கூடுகட்டும் அழகை நான் பார்த்துக் கொண்டிருந்தேன். சுவற்றில் ஒரு சிறிய வழி. ஒரு குருவி தான் நுழையமுடியும். அதன் உள்ளே இருந்த இடத்தின் விஸ்தாரம் எப்படிப்பட்டதோ தெரியாது. ஆண் குருவிக்குக் கழுத்தில் கருப்பு வர்ணம் அதற்கு ஒரு அழகைக் கொடுத்தது. இதற்கு நீலகண்டன் என்று நான் பெயர் வைத்தேன். நீலகண்டன் வெளியில் போய் வைக்கோல், புல், பஞ்சு, தேங்காய் நார் இவற்றை எடுத்துவரும். கூண்டின் வாயிற்புரத்தின் விளிம்பில் உட்கார்ந்தபடி "ராணீ, ராணீ, ராணீ," என்று கூப்பிடும். வைக்கோலை மூக்கில் வைத்துக் கொண்டே இவ்விதம் கூப்பிடுவதே ஒரு தனி அழகு. பெண் குருவி அப்போது வெளியே வரும். பிறகு இரண்டு குருவிகளும் ஏதோ அதனதன் வழியில் பேசும். பெண் குருவி வெளியே போய்விடும். நீலகண்டன் கூண்டினுள்ளே, தான் எடுத்து வந்த பொருளுடன் புகும். ஒரு நிமிஷத்திற்குள் எத்தனை தரம் இது நடக்கும்! பாவம்! அலுப்பே தட்டாமல் எப்படித்தான் இவ்வாறு உழைக்கின்றனவோ? இதைப் பார்த்துக் கொண்டே என்னையும் மறந்திருந்தேன். இதைக் கொனஷ்டையாகப் புரிந்து கொண்டாளாக்கும் இவா. நான் பார்த்தேன். முகத்தில் ஒரு கடுகடுப்பு. என்னமோ ஏதோ? தானே தெளியும் வரையில் நாம் சற்று எட்ட நிற்பது தான் சரி என்று சும்மா விருந்தேன். இவர் மனத்திலிருந்ததை ஒரு வார்த்தை சொல்லி இருந்தால் இவ்வளவு வேதனை இருந்திராதே!

"அது போகட்டும் சீலா. இரண்டாவது வீட்டிற்கு வந்த பிறகு நீயல்லவா ஆக்ஷேபங்களைக் கிளப்பினாய்? அது ஏன்? அதைச் சொல்லம்மா" என்றார், அய்யங்கார் ஸ்வாமிகள்.

"ரொம்ப சுருக்கமாகச் சொல்லி விடுகிறேன் மாமா" என்று ஆரம்பித்தாள் சீதாலக்ஷ்மி.

"இரண்டாவது வீட்டில் மாடியிலே ஒரு குடி, கீழே நாங்கள் இருந்தோம். மெத்தை மேலே இருந்தவர்கள் உங்கள் ஜாதிக்காரர்கள். ஆனால் குணத்தில் மட்டும் ரொம்ப வித்தியாசம்.

"எங்கள் வீட்டில் அம்மாவுக்கு எப்பொழுதும் நான் சின்னவளாகவே [கொஞ்சம் வெட்கத்துடன்] இவர் கூப்பிடும் போதெல்லாம் ஓடி ஓடி இவர் வாயைப் பார்த்துக்கொண்டே நிற்க வேணுமென்று ஆசை."

"பாருங்கோ மாமா, சீலா என்னைப் பழிப்பதை" என்றான் கல்யாணம். "நான் என்ன பழித்தேன் மாமா? இவர் ஏதாவது தொண தொண வென்று

சொல்லிக்கொண்டே இருப்பார். அதைக்கேட்டுக்கொண்டே நான் இருக்கவேணும்......'' என்ருள் சீலா.

" பாருங்கோ மாமா, நான் தொண தொண என்று நச்சரிப் பேனும், நீங்களே பாருங்கோ'' என்ருன் கல்யாணம்.

இவர்களுடைய ஊடலைக் கண்டு அய்யங்கார் தம்பதிகள் கட கட வென்று சிரித்து மெத்த வும் ரஸித்தனர். பிறகு விளை யாட்டுக்குக் கோபிப்பவர்போல் நடித்து "நீ குறுக்கே பேசப் படாது கல்யாணம், நீ சொல்லு, குழந்தாய்'' என்ருர் அய்யங் கார்.

"அம்மாவுக்கு, நாங்கள் எப்போ பார்த்தாலும் நாடகம் நடிக்க வேணும், தான் வீட்டு வேலை யாவற்றையும் பார்த் துக் கொள்ள வேணுமென்பது. இப்போ இங்கே நடக்கிறதைப் பார்க்கிறீர்களே ! இதேதான் அங்கேயும். மாடிவீட்டு நாட்டுப் பெண்கள் என்னை என்ன மதிப் பார்கள்? தள்ளாத கிழவியை வேலை வாங்குகிறதும் நான் எப் போதும் இவரோடு குலாவிக் கொண்டிருப்பதும் ஏச்சுக்கு அல்லவா இடந்தரும்? நான் என்னளவுக்கு என்ன சொல்லி யும் இது ஏனோ அம்மாவுக்குப் புரியவே இல்லை. நான் மேலும் அங்கேயே இருப்பது எகத்தா ளியை விலை பேசுவதுபோலல் லவா ஆகும்? நீங்களே சொல் லுங்கோ மாமி'' என்று நிறுத் தினுள் சீலா.

அய்யங்கார் தம்பதிகள் ஒரு வரை ஒருவர் பார்த்து நகைத்தனர். "அடியே" என்று தன் தேவியைப் பார்த்து ஸ்வாமிகள் "இந்த சீலா சமுத் துக்கு திருஷ்டி வந்துவிடும்'' என்ருர்.

"சமர்த்தூன்னு ஒரு தரம் சொன்னல் போதாது. திருஷ்டி வந்துடும்னு நூறுதரம் சொல் லுங்கோ. அந்தக் காலத்திலே நிங்களுந்தான்......''என்று அவ் வம்மை சொல்லும்போதே இடைமறித்து.

ஆரம்பிச்சுட்டயா உன் புரா ணத்தை? அந்த காலத்திலே ஆயிரம் நடந்தது. அதைப் பற்றி இப்போ என்ன; உனக்கு ரிஷிபஞ்சமியான பிறகு?...... நீ சொல்லு சீலா'' என்ருர் அய்யங்கார் ஸ்வாமிகள்.

IX

குடும்பத்துக்கொரு கோடாரி

இந்தச் சங்கடம் ஒரு புறம் இருக்க வேறு ஒரு புதிய கோளாறும் இருப்பது எனக் குத் தெரியவந்தது, மாமா. மாடிக் குடித்தனக்காரர் வீட் டில் குமுதம் என்று ஒரு பாட்டி. அவருக்கு ஸ்ரீநிவாஸன், ரங்காச் சாரி என்று இரண்டு பிள்ளை கள். ஸ்ரீநிவாஸன் பெரியவர், இரண்டு பிள்ளைகளுக்கும் கல் யாணமாகி இருந்தது. அல

மேலு பெரிய நாட்டுப் பெண், ரங்கநாயகி சின்னவள். பெரியவளுக்கு ஒரு குழந்தை இருந்தது. சின்னவளுக்கு அப்போது வளை காப்பு வந்திருந்தது. குமுதம் பாட்டி எங்கம்மாவைப் போலல்ல. பிள்ளையும் நாட்டுப்பெண்ணும் குறுக்கு நெடுக்கே போகும் போதும் ஒருவரை யொருவர் பார்க்கக் கூடாது. கெடுபிடியான கண்காணிப்பு. இதைப் பற்றி யெல்லாம் மத்தியான வேளையில் அம்மாவிடம் குமுதம் பாட்டி பேசிக் கொண்டிருப்பார். நிஷ்டூரமில்லாத ஒரு வார்த்தையாவது நாட்டுப் பெண்களைப் பற்றி பேசமாட்டார். அம்மாவோ எல்லாவற்றையும் "உம்...... உம்......" என்று கேட்டுக் கொண்டிருப்பார். மாடிவீட்டு நாட்டுப் பெண்களுக்கு என் பேரிலும் அம்மா பேரிலும் ஒரு அசட்டு மனஸ்தாபம்.

நான் என் பொல்லாத சுபாவத்தால் எங்கள் அம்மாவை மிரட்டி அடக்கிப் படியவைத்து அவரை வீட்டில் ஒரு வேலைக் காரி போல் வைத்திருக்கிறேன் என்று என் பேரில் மனஸ்தாபம். குமுதம் பாட்டிக்குத் தான் இந்த எண்ணம் மிக அதிகம். என்னைப் பார்த்துத் தன் நாட்டுப் பெண்களும் அடங்காப் பிடாரிகளாய் விடுவார்களோ வென்றுபயந்து அவர்களை அதிகமாகவே விரட்டத் தொடங்கினர். அதனால் நாட்டுப் பெண்கள் இருவருக்கும் என் பேரில் ஒரு மனஸ்தாபம். என்னால்தான் தங்களைத் தமது மாமியார் அதிகமாக விரட்டுகிறார் என்று, குமுதம்பாட்டியோ தன்னைப் போலவே எங்கம்மாவும் என்னை ஒரு கெடுபிடியில் வைக்கவேண்டுமென்று ஆசை. இல்லாவிட்டால் தன் நாட்டுப் பெண்கள் தன்னை எதிர்க்க ஆரம்பித்து விட்டாலோ? இதற்காக நாட்டுப் பெண்களை மாமியார்மார்கள் எப்படி அடக்கி ஒடுக்கி நடத்தவேணுமென்றும் தான் எப்படி அந்தக்காலத்தில் தனது மாமியின் கட்டு திட்டங்களுக்கும் கெடுபிடிகளுக்கும் அடங்கி இருந்தாரென்றும் தினந்தோறும் எங்கள் அம்மாவிடஞ் சொல்லி வருவார். இதைக் கண்டு எனக்கு மிகுந்த கவலை ஏற்படலாயிற்று. அம்மாவுக்கு என்னிடம் உயிர். இந்த அன்பில் விஷங் கலந்துவிடுமோ வென்று பயப்படலானேன். குமுதம் பாட்டியின் போதனைகள் அம்மாவுக்கு இல்லாமலிருக்கவேண்டும். இதற்கு என்ன வழி யென்று யோசித்து யோசித்துக் கடைசியில்தான் அத் தீர்மானத்திற்கு வந்தேன். அந்த வீட்டிலிருந்து வேறு வீட்டிற்குக் குடித்தனத்தை மாற்றியாக வேண்டும். ஆனால் இதன் காரணத்தைச் சொன்னால் வீணாக ரகளை ஏற்படக்கூடும். ஏன்? வீடு மாறவேண்டுமென்று சொன்னாலே பூசல் தொடங்க ஆரம்பிக்கலாமல்லவா? ஆகவே ஒன்றுமே சொல்லக்கூடாது. முதலில் மதுரையில் அப்பாவிடமாவது

டில்லியில் அண்ணுவிடமாவது நான் புறப்பட்டுப் போய்விட வேண்டும். புறப்படும்போது கூடமாக வீடு மாறவேணுமென் பதை மட்டுந் தெரிவித்துவிட வேண்டும் என்று தீர்மானித் தேன். இவ்வளவும் நான் சென்னை வந்து நாலைந்து தினங் களுக்குள் ஏற்பட்ட அனுபவ மும் தீர்மானமும். அவ்வாறே அப்பாவுக்கும் அண்ணுவுக்கும் உடனே வந்து என்னை அழைத் துப் போகும்படி கடிதம் எழு தினேன். புக்ககம் வந்த நாலைந்து தினங்களுக்குள்ளாக இப்படி எழுத எனக்கு மிகவும் வெட்க மாகத்தானிருந்தது. ஆனல் என்ன செய்வது? அதைத் தொடர்ந்து தினமும் ஏற் பட்ட புதிய புதிய அனுபவங் களை எல்லாம் சொல்லி முடி யாது. தினந்தோறும் நானும் கடிதங்களை எழுதிவரலானேன். இப்படி என்ன தினம் எழுதக் கிடக்கிறதென்று அம்மாவோ இவரோ கேட்கவில்லை. உண் மையில் இவர்கள் தங்கமான குணம் பெற்றவர்கள்.

இச்சமயத்தில் மாடி வீட்டின் இரண்டாவது நாட்டுப் பெண்ணை வளைகாப்புக்குப் பிறந்தகம் அழைத்துப்போக ரங்கநாயகியின் தாயார் வந்து சேர்ந்தார். அவர் மகளுக்காக ஏதோ பக்ஷணங்களைச் செய்து எடுத்து வந்திருந்தார். இது ஒரு வழக்கம் போலிருக்கிறது. குமு தம் பாட்டி அந்த பக்ஷணங்களை எவ்வளவு தான் குறை சொன் ஞள்! முறுக்கு, சீடை இதெல் லாம் கர்நாடக பக்ஷணங்கள் என்றுர். அவர்களை ஒன்றுமறி யாத ‘நாட்டுப்புறத்து மண்டூகங் கள்’ என்று சொல்வதற்குப் பதில்தான் இந்த பக்ஷணங்களை சம்பந்தியம்மா கொண்டு வந்த தாகச் சொன்னர். நல்ல வேளை யாகக் கேழ்வரகு மாவு அடை கொண்டுவரவில்லையே என்று சந்தோஷப்படுவதாகச் சொன் ஞர். அந்த “தொரட்டுப்பால்” என்ன பாலில் செய்ததோ அதைச் சாப்பிட்டால் உடம் புக்கு ஒத்துக்கொள்ளுமோ ஒத் துக் கொள்ளாதோ என்று தனக்கு ஒரு அச்சம் இருப்பதா கச் சொன்னர். வீணுக வளர்த்து வானேன்? அந்த பக்ஷணங் களில் ஒரு கடுகளவைக் கூட ஒருவரையும் தின்னவிடவில்லை. பாவம்! ஊரிலிருந்து வந்த அம் மாளுக்குத் துக்கம் துக்கமாய் வந்தது. பெண்ணை வளைகாப் புக்கு அழைத்துப் போக வந்த வர் அழுவது ‘அச்சான்ய’ மென்று எப்படியோ துக்கத்தை அடக்கிக்கொண்டார். ரங்க நாயகி வாயைத் திறந்து அம்மா விடம் பேசவாவது முடியுமா? முடியாது, மாமா! நான்சொன் ஞல் நம்பக்கூடமாட்டீர்கள். அரிச்சந்திர புராணத்தில் ஒரு காலகண்டி வருகிறுளே அவளை நல்லவளாக்கிவிட்டார் குமுதம் பாட்டி. தான் செய்வதையெல் லாம் அம்மாவிடஞ் சொல்லி தான் எவ்வளவு நியாயமானவ ரென்று அம்மாவுக்குத் தெரிவிப் பார், குமுதப் பாட்டி. அம் மாவோ எல்லாவற்றிற்கும் ஒரு

'உம்' என்று மட்டும் பதில் சொல்லிவைப்பார். இவற்றை எல்லாம் பார்க்கப் பார்க்க என் பயம் அதிகரித்தது.

ஒரு நாள் தன்னுடன் பெண்ணை ஊருக்கு அனுப்பி வைக்கும்படி ரங்கநாயகியின் தாயார் குமுதம் பாட்டியின் உத்தரவைக் கேட்டார். பஞ்சாங்கம் பார்த்து, அன்று தான் நல்ல நாளென்று தீர்மானித்திருந்தாராம் ரங்கநாயகியின் அப்பா. குமுதம் பாட்டியோ என்னோடே சொல்கிறீர்களேம்மா, நானென்ன! சாகப் போகிற கிழம். வீட்டில் பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களிடம் தானேம்மா கேட்கவேண்டியது?'' என்று தட்டிக் கழித்தார்.

அந்த அம்மாவோ மாப்பிள்ளை இடமும் அவர் அண்ணைவிடமும் பேசப்படாதாம். இது அவா ஜாதிக் கட்டுப்பாடாம். ஆகவே அந்தம்மா என்ன செய்வார் பாவம்?

''நானெப்படி அம்மா அவாளிடம் கேட்பது? நீங்கள்தான் எனக்காக ஒரு வார்த்தை அவாளிடம் கேட்கணும்'' என்றார்.

குமுதம் பாட்டி திடீரென்று சீறத் தொடங்கினார். ''நன்னா இருக்கிறதம்மா உங்கள் பேச்சு. நான் போய் அவனைக்கேட்டால் உனக்கென்னடீ வந்தது கிழக் கோட்டானே என்று என்னை பல்லின் மேலே போட்டால்? என்னாலே ஆகாதம்மா. நீங்களாயிற்று உங்கள் ஏற்பாடாயிற்று'' என்று சொல்லிவிட்டார், குமுதம் பாட்டி.

ரங்கநாயகியின் தாயார் தவித்தே போய்விட்டார். அன்றைய வண்டியில் புறப்பட்டாக வேணும். மெதுவாக அலமேலுவைக் கொண்டு அவள் புருஷனிடம் தன் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தார். ரங்கநாயகியைக் கொண்டு அவள் புருஷனிடமும் கேட்கச் சொன்னாள். பெரிய பிள்ளை, வீட்டில் பெரியவளாய் அம்மா இருக்கும் போது தான் எப்படி முடிவு சொல்லமுடியும்? என்றார். மற்றும் ''ரங்கு தானே அவன் மனைவியை அனுப்பும் விஷயத்தைத் தீர்மானிக்கவேண்டியவன்? என்று இரண்டாவதாகவும் ஒரு கோடி காட்டினார். ரங்குவோ அண்ணாவைக் கேளு, அம்மாவைக் கேளு என்பார். அண்ணாவோ அம்மாவைக் கேளு, தம்பியைக் கேளு என்பார். அம்மாவோ பிள்ளைகளைக் கேளு என்பார். இவர்களிடையில் அன்றைய பொழுது முழுவதும் இந்த அம்மாள் பட்ட அல்லாட்டம் சொல்லிமுடியாது. கண்ணாமூச்சியாட்டம் காட்டினர். கடைசியில் ஒன்றுமே சாயவில்லை. சொல்லமுடியாத மனத்துயரோடு அந்த அம்மாள் மட்டுந் திரும்பிப்போனாள்.

எனக்கு இந்தச் சம்பவம் கொடுத்த அதிர்ச்சி சொல்லியே முடியாது. ஐயோ இப்படிப் பட்டவர்களை ஏன் தான் பிரமன் படைத்தானோ? எப்படித் தான் பூமிதேவி சஹித்துச்

சுமக்கிருளோ? என்று தோன்றிவிட்டது. இவ்வளவிற்கும் மேல், அன்று இரவு குமுதம் பாட்டி அம்மாவிடம் சொன்னது என்னை என்னென்னவோ செய்துவிட்டது.

"நானென்ன செய்யலாம் மாமி? அவா மாப்பிள்ளேக்கு என்ன குறையோ என்ன குற்றமோ? அந்தம்மாவும் அதைக் கேட்கவில்லே. இந்தப் பிள்ளேயும் சொல்லவில்லே. இந்த ரங்கநுயகிக்காவது துளிதுப்பு வேண்டாமா? தன் ஆம்படையானுக்கு மனஸில் என்ன குறையென்று தன் அம்மாவிடஞ் சொல்லி அதற்கு ஏதாவது வகை செய்யச் சொல்லப்படாதோ? அதைச் சொல்லி எதற்குப் பிறந்தவிட்டிற்கு வீண் செலவு வைப்பது? என்று மௌனமாக இருந்துவிட்டாள். இல்லே, வந்தவளாவது ஏன் இப்படிச் சொல்கிறீர்கள். யாருக்கு என்ன குறை என்று ஒரு வார்த்தை கேட்டிருக்கப் படாதோ? ஏன் கேட்பாள்? அவ்வளவு கெட்டியம்மா, அவ்வளவு கெட்டி. வளே காப்புக்கு அழைத்துக்கொண்டு போனல் என்ன செய்யப்போகிருள் என்பதையாவது சொல்ல வேண்டாமோ? அவள் ஏன் சொல்லுவாள்? எல்லாவற்றையும் எத்திலே சாதிக்கப் பார்த்தாள். இப்படியாயிற்று. யார் என்ன செய்யலாம். ஊரில் இருப்பவர் என்ன சொல்லுவாள்? என் தலேயைப்போட்டு உருட்டுவாள், என் தலேயிலே எழுத்தம்மா. இதுகளே கொண்டு நான் கண்ட பலன் இந்த அவச்சொல் தான் என்று ஒரு மணி நேரம் தான் என்ன நிரபராதி என்பதை அம்மாவிடம் விளக்கினுர்.

அன்றிரவை எப்படித்தான் கழித்தேனே, இப்போது நினேத்தாலும் எனக்கு உடம்பு நடுங்குகிறது, மாமா. காலேயில் முதல் காரியமாக வீட்டு வேலேக்காரி வந்ததும் ஒரு தந்தியை எழுதி அப்பாவுக்கும் அண்ணுவுக்கும் அடித்து வரும்படி அனுப்பினேன்.

இவருக்கும் தெரியும் அம்மாவுக்குந் தெரியும். மறுநாள் அப்பா அண்ணு இருவருமே வந்து விட்டனர். அவர்களேப் பார்த்ததும் எனக்கு 'ஓ' வென்று அழவேணும்போல் இருந்தது. ஆனுலும் எப்படியோ அடக்கிக்கொண்டேன். அன்று மாலே மதுரைக்கு அப்பாவுடன் கிளம்பிவிட்டேன். வேறு வீட்டிற்குக் குடித்தனம் மாற்றியாக வேணும் என்று மட்டும் இவரிடமும் அம்மாவிடமும் கண்டிப்பாகச் சொல்லிவிட்டுத் தான் வண்டி ஏறினேன்.

(அடுத்த இதழில் முற்றும்)

GANZON BROS.

DRESS SPECIALISTS

3, THOPE STREET

TRIPLICANE MADRAS-5.

★

Clothing Contractors to Government of India Supply Dept., Railways & Public Bodies, Ready - to - Wear - Garments Manufacturers and Exporters.

★

IN the hands of the Mester - Tailors and Cutters of GANZONS, Clothes acquire a subtle distinction beyond the power of imitation.

★

GANZONS have set standards of superb craftsmanship- Standards that have been the pride of the firm of Ganzons for over a quarter of a century.

மனித ஜோடிகள்

ஒரே தாய் வயிற்றில் பிறந்த இரட்டையர்களின முகத் தோற்றம் ஒரு அணு அளவிற்கும் ஒன்றுக்கொன்று வித்தியாசமில்லாமலிருப்பதை நாம் இயற்கையின் விசித்திரச் செய்கையாகக் கருதுகிறோம். ஒரே தாய் வயிற்றில் பிறக்கவில்லை யென்பது மட்டுமல்ல, ஒரே ராஜ்யத்திலோ ஒரே கண்டத்திலோ கூடப் பிறக்காத இருவரின் முகத் தோற்றம் ஒன்றாக இருப்பது, இயற்கையின் இதைவிட அதிசயமான செய்கையல்லவா? இம்மாதிரியுள்ள இயற்கையின் செயற்கை இரட்டையர்களின் தகவல்கள் அடிக்கடி வருவதுண்டு.

இங்கிலாந்தில் பிறந்து வளர்ந்த ஒரு மனிதனைப் போலவே முகத்தோற்றம், தேகக்கட்டு, தலை ரோமத்தின் அமைப்பு முதலிய அம்சங்களில் காப்பி அடித்ததுபோல் ஒரு மனிதன் அமெரிக்காவிலோ ஆஸ்திரேலியாவிலோ இருக்கலாம். இதுபோலவே அமெரிக்காவிலோ ஆஸ்திரேலியாவிலோ பிறந்த ஒரு மனிதனின் 'இரட்டையான காப்பி' ஜெர்மனியிலோ, பிரான்ஸிலோ தோன்றலாம். இம்மாதிரித் தோன்றியுள்ள அநேகமாயிர மனிதர்களின் புகைப்படங்களை அமெரிக்காவிலுள்ள ஒரு 'போட்டோ கிராபர்' சேகரித்து வைத்திருக்கிறாராம்.

இந்த ரக மனிதன், இயற்கையின் அநேக விசித்திர சிருஷ்டிகளில் ஒருவன்தான் என்று அலட்சியமாக நாம் கருதுகிறோம். ஆனால் மேல்நாடுகளிலுள்ள சூழ்நிலைகளில் இதெல்லாம் வினோதமான விசித்திரமட்டுமல்ல. இப்படிப் பட்ட 'இரட்டையான காப்பி' மனிதர்களால் பெரும் பயனுண்டு என்ற முக்கியத்துவமுமிருக்கிறது.

சில பிரபல சினிமா நடிகர்களுக்கு, இம்மாதிரி ஆட்கள், அவ்வளவு முக்கியத்துவமில்லாததும் தேகத்திற்கதிகச் சிரமமுள்ள பாகங்களிலும் நடிக்கிறார்கள், ஏராளமாகச் சம்பளம் பெறும் நடிகர் இம்மாதிரி பாகங்களில் நடிக்காமலிருந்தால் அவருக்கு வீண் சிரமமேற்படுவதைத் தடுக்கலாம். சினிமா முதலாளி இந்த நடிகரை, இந்த வீணாக்கும் சமயங்களில் வேறு முக்கியமான பாகங்களை நடிக்கச் செய்யலாம்.

மேல் நாட்டு அரசியல் தலைவர்களுக்கும் இம்மாதிரி 'இரட்டையான காப்பி' மனிதர்கள் சிறந்த உதவி புரிகிறார்கள். ஏனென்றால் அரசியல் தலைவர்களுக்கு ஏற்படும் எதிரிகள் சில சமயம் பிரபல தலைவர்களைக் கொல்லக்கூட அஞ்சமாட்டார்கள்.

முக்கியமான கட்சிக் கூட்டங்களில் தலைமை வகிப்பதற்கும் எதிரிகள் பிரபலமாய்ப் பிரசாரஞ் செய்துகொண்டிருக்கும்போதும், பிரசாரங்களைத் தீவிரமாய் எதிர்க்கும் சந்தர்ப்பங்களிலும் சில பிரபல தலைவர்கள் தங்கள் 'இரட்டையான காப்பி' மனிதர்களை அனுப்பி வைப்பது வழக்கம். ஏதாவது அபாயம் நேரிட்டாலும் முக்கிய தலைவரின் உயிர் தப்பிவிடுமென்பதே இதன் கருத்து. ருஷ்யாவின் தலைவராயிருந்த ஸ்டாலின், ஜெர்மனியின் ஹிட்லர் இவர்களிருவரும் இம்மாதிரி 'இரட்டையான காப்பி' மனிதர்களை டஜன் கணக்காக வைத்திருந்ததாகத்தான் கூறப்படுகிறது. எவர் நண்பர்? எவர் விரோதி? என்று தெரிந்துகொள்ள முடியாத சூழ்நிலையிலே ஆயுள் பூராவும் கழித்த இவ்விருவர்களுக்குப் பதிலாக இவர்களின் 'இரட்டையான காப்பி' மனிதர்களே அநேக சந்தர்ப்பங்களில் ஜனத்திரள் மத்தியில் தோன்றியுள்ளார்களென்று சொல்கிறார்கள்.

இப்பொழுது இங்கிலாந்தில் பிரதமராயிருக்கும் சர்ச்சிலுக்கும் 'இரட்டையான காப்பி' மனிதர்களாக இரண்டு

மூன்று பேர்களிருக்கிறூர்களாம். இவர்களில் ஒருவர் ஐக்கிய நாட்டுச் சர்க்காரில் ஒரு பெரிய பதவி வகித்து வந்தார். முதன் முதலாக சர்ச்சிலும் இவரும் சந்தித்த போது இப்படி இருவருக்கும் ஒரு ஜோடி யிருப்பதைப் பற்றி இருவருக்கும் நம்ப முடியாத அளவிற்கு ஆச்சரிய மேற்பட்டது. சற்று நேரம் இவரைக் கவனித்துவிட்டு சர்ச்சில் இவர் கையைப் பிடித்திழுத்துக்கொண்டு பெரிய நிலைக்கண்ணுடிக்கெதிரே சென்று அவர்கள் இரு உருவங் களையும் கவனித்தார். ''இதுவரையிலும் எங்கு சென்றி ருந்தாய் சகோதரா'' என்று கடைசியாக சர்ச்சில் இவ ரிடங் கேட்டாராம்.

யுத்த நிர்வாகத்திலும் 'இரட்டையான காப்பி' மனிதர் கள் மிகவும் பயன்படுகிறூர்கள். தோல்வியடையும் சைனி யத்திலும் வெற்றிபெறும் சைனியத்திலும் எல்லாச் சேனை களும் சேரும் ஒரு பொதுக்கூட்டம் அடிக்கடி கூட்டப் படும். இக்கூட்டங்கள், எவ்வெப்பொழுது, எங்கெங்கே நடக்கிறதென்றும், ராணுவத் தலைவர் கண்டிப்பாக இதில் கலந்து கொள்வாரென்றும் இரு கட்சிகளும் தங்கள் ஒற்றர் கோஷ்டி மூலம் தெரிந்துகொள்வது வழக்கம். ராணுவத் தலைவரை இச்சந்தர்ப்பங்களில் எதிரியின் ஆட்கள் கொல்ல முயலுவது இயற்கைதானே! இம்மாதிரி முயற்சிகளிருந்தால் அவை பயனடையாதிருக்க வேறு பாதுகாப்பு முயற்சிகள் எடுப்பதோடு இந்த சந்தர்ப்பங் களில் ராணுவத் தலைவர்களுக்குப் பதிலாக அவர்களின் 'இரட்டையான காப்பி' மனிதர்கள் தோன்றுவார்கள். இம் மாதிரி 'இரட்டையான காப்பி' மனிதர்களுக்கு, அவர்கள் எந்த வேலைகளிலீடுபடுகிறூர்களோ அதற்கேற்றவாறு ஊதியமளிக்கப்படுகிறது.

VISIT

OUR

RETAIL SHOW ROOM

FOR ALL YOUR

DRESS REQUIREMENTS

★

ALL ITEMS MANUFACTURED

FROM

SELECTED B & C MILLS FABRICS

★

OMER BROS

106-107, Moore Market,

MADRAS - 3

பெரிய குடும்பங்களுக்கும் சிக்கன சுலப உதவி

இளநரை
தடுத்து
கூந்தல்
செழிக்க

காஷ்மீர்-குஸும்

ஊறின உங்கள் எண்ணெயை உபயோகிக்க

சாதாரணம் - பாக்கெட்டில்

நஞ்சன்கூடு-பல்பொடி

மேலும்

54, அரிய குடும்ப மருந்துகள் விவரப்
புத்தகத்திற்கு எழுதுக

யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, சென்னை - 1.

மலேயா காட்டு ராஜா

●

ஒரு புலி மீதுள்ள கோடுகள் போல் மற்றொரு புலி மீதிருக்காது. இது இயற்கைதானென்றாலும் மலேயா தேசத்தவர்கள் இதற்கு ஒரு சுவையான காரணம் கூறுகிறார்கள்.

மனிதர்கள்தான் புலிகளாக மாறி யிருக்கிறார்களென்பது மலேயா தேசத்து மக்களின் நம்பிக்கை. முன்னொரு காலத்தில் தன்னிடம் கல்வி பயின்று கொண்டிருந்த மாணவர்களின் குறும்பு கள் பொறுக்க முடியாமல் ஒரு ஆசிரியர் அவர்கள் முதுகில் "டாஸ்" என்ற மரத்துக் கிளையினால் அடித்தாராம். இப்படி அடிபட்ட மாணவர்கள் பயமும் வேதனையும் தாங்காமல் பிராணி கள் மாதிரி கைகளாலும் கால்களாலும் தவழ்ந்து புலிகளாக மாறி விட்டார்களாம். ஒரு புலிபோல் மற்றொரு புலிக்குக் கோடுகள் இல்லாமலிருப்பதற்கும் "டாஸ்" மரத்தைக் கண்டால் புலிகள் பயப்படுமென்ற நம்பிக்கைக்கும் இந்தக் கதையைத்தான் காரண மாகக் கூறுகிறார்கள் மலேயர்கள். மலேயா தேசத்தவர்களிடையே புலியைப்பற்றி அநேக விசித்திரமான நம்பிக்கைகள் பரவி யுள்ளன.

மலேயா தேசத்திலுள்ள ஒரு குன்றின் மேல் 'புலி நகரம்' என்றொரு இடமிருக்கிறதாம். இங்குள்ள வீடுகள் மனிதனின் எலும்புகளாலான சுவர்களும், மனிதர் தலை ரோமத்தாலான கூரைகளுங் கொண்டதாம். இந்த நகரத்தில் சிறு ஏரிகளும் இருக் கின்றனவாம்.

புலிகள் மனித ரூபங்கொள்ள விரும்பும்போது ஒரு ஏரியில் நீந்தும். மற்றொரு ஏரியில் நீந்தி திரும்பவும் புலியின் ரூபத்தை யடைந்து விடுமாம்.

மனித ரூபத்தை யடையுங் காரணம், மனிதர்களிடையே சஞ்சரித்து அவர்களைப் பலியாக்கிக் கொள்வதற்காகத்தான்.

'புலி நகர'த்திற்கு ஒரு ராஜாவும் உண்டாம். மந்திரவாதிகளுக்குத் துணை புரிவது இந்தப் 'புலி நகர' ராஜாதானும். மந்திரவாதிகள் இறந்தால் பதினைன்காம் தினத்தன்று அவர்களும் புலிகளாகி விடுவார்களாம். ஒரு புலி வேட்டையாடுபவர்களை ஏமாற்றி இரண்டு மூன்று தடவைகள் உயிர் தப்பிவிட்டால் அந்தப் புலியை மறுபடியும் கொல்லக் கூடாது. அம்மாதிரிப் புலி மிகச் சாதுவாகி விடுகிறதாம். ஒரு சிறு குழந்தையின் அதட்டலுக்குக் கூட அது பயப்படுமாம்.

மலேயா தேசத்தவர்கள், புலிகளைச் சங்கீத ரஸிகர்களென்று நம்புகிறார்கள். முன் காலத்தில் 'புலி நகரின்' ராஜா, புல்லாங்குழல் ஊதிக்கொண்டிருந்த ஒரு குடியானவனைப் தூக்கிக் கொண்டு போய்விட்டதாம். தற்செயலாக அந்தக் குடியானவன், புலி அவனைப் பிடித்துக்கொண்டு போவதற்குச் சற்று முன்புதான் அவன் பாட்டனாரின் ஆவியிடம் ஒரு புதுப் பாட்டைக் கற்றிருந்தானும். அவனைப் 'புலி நகரு'க்குப் புலி தூக்கிச் சென்ற சமயத்தில் பாட்டனாரின் ஆவி அவனிடம் வந்து அந்தப் பாட்டைப் புல்லாங்குழலில் ஊதச் சொல்லியதாம். அதன் பிரகாரம் குடியானவன் அந்தப் பாட்டை வாசித்துக் கொண்டிருக்கும்போது 'புலி நகர'த்துப் புலிகளெல்லாம் மதி மயங்கி விழுந்து விட்டனவாம். அந்தப் பாட்டுக்கு இன்றும் புலியை மயக்கிய பாட்டு என்று தான் பெயராம்.

மலேயாவில் மலைப் பிரதேசங்களிலுள்ள வீடுகளெல்லாம் காட்டு விலங்குகளின் உபத்திரவங்களைத் தடுப்பதற்காக தூண்களின் மீதே கட்டப்பட்டிருக்கின்றன. இரவு நேரங்களில் புலிகள் தூண்கள் உயரத்திற்கு குதித்து வீடுகளுக்குள் புகுந்து மனிதனை ஹிம்சிப்பது மிக அபூர்வம்தான். ஆனாலும் இரவு நேரத்தில் புலியின் சப்தத்தைக் கேட்டால் மலேயாவாசிகள் கிலி தான் அடைகிறார்கள். புலியின் உறுமல்களின் வகைகளையும் அவற்றின் அர்த்தங்களையும் மலேயா தேசத்தவர்கள் நன்கு அறிவார்கள். இரை தேடும் புலியின் உறுமலிலுள்ள உத்வேகமும் பசியால் வாடிக்கொண்டிருக்கும்போது போடும் உறுமலின் மூர்க்கத்தனமும், கொன்று தின்னப் போகும் பிராணியிடம் புலி விளையாடும்பொழுது போடும் சப்தத்தின் தன்மையும் எல்லாம் மலேயர்களுக்குத் தெரியும்.

திரட்டு

சிறந்த மாதாந்திர கட்டுரைப் பொக்கிஷம்

1/C 17, டின்ரோஸ் எஸ்டேட்,
மவுண்ட் ரோடு, சென்னை

- ★ பல ஆங்கிலப் பத்திரிகைகளின் சுவையான சார மிக்க விஷயங்கள்
- ★ 50-க்கு மேலான அரசியல், சமூக, விஞ்ஞான கட்டுரைகள், உண்மைக் கதைகள் !
- ★ பலதரப்பட்ட விஷயங்கள் !
- ★ பொது மக்களுக்கும் மாணவர்களுக்கும் இன்றியமையாதது.
- ★ சிறந்த முறையில் நிறைந்த பக்கங்களைக் கொண்டது.

தனிப்பிரதி விலை எட்டணாதான்.
வருட சந்தா ரூ. 6

மானேஜர், **திரட்டு**
1/C, 17, டின்ரோஸ் எஸ்டேட்,
மவுண்ட் ரோடு, சென்னை-2.

அன்புடையீர்,

திரட்டுக்கு நான் சந்தாதாரராகச் சேர விரும்புகிறேன். இத்துடன் ஒரு வருட/அரை வருட சந்தா ரூ............அனுப்பியுள்ளேன். பத்திரிகையை அடியிற்கண்ட விலாஸத்திற்கு அனுப்பி வையுங்கள்.

வணக்கம்.

விலாஸம் :—

....

....

....

தவளையிலிருந்து எருமை வரையிலும் புலி தின்னாத பிராணி களே கிடையாது. மிகப் பெரிய மிருகத்தைக் கொன்றால் வயிறு நிறையும் வரையில் தின்றுவிட்டு மற்றொரு தடவை தின்பதற் குள்ள ஆகாரத்தை மீத்து வைத்து அதை மற்ற மிருகங்கள் அப கரிக்காமல் பாதுகாக்கும்.

கழுகைக் கண்டால் புலிக்கு மிகவும் வெறுப்பு. ஏனென்றால் அது சிரமப்பட்டுக் கொன்ற விலங்கின் மாமிசத்தை ஏராளமாகக் கழுகு அபகரித்துக்கொண்டு போவதோடு கழுகு, வேட் டைக்காரர்களுக்குப் புலியின் இருப்பிடத்தைக் காட்டிக் கொடுக் கும் ஆள்காட்டியாயுமிருக்கிறது.

குழந்தைக்கு ஒரு இனிப்புப் பண்டம் தரும் திருப்தி, புலிக்கு முதலையின் முட்டை அளிக்கிறது. ஆனால் முதலையிடம் சண்டை யில் அகப்பட்டுக்கொள்வதை புலி விரும்பாது.

வீட்டு வாசலில் உட்கார்ந்துகொண்டு காலைக் கீழே தொங்கப் போட்டால் புலி வந்துவிடுமென்று மலேயா தேசத்தார்கள் நம்பு கிறார்கள். புலியின் கால் சுவடுகளைக் காட்டில் கண்டால் அவற்றை இலைகளால் மூடிவிட்டால், அதற்குத் திரும்பி வர வழி தெரியாதென்றும் நம்புகிறார்கள். புலியைப் பற்றி அவர்கள் கௌரவித்தே பேசுவார்கள். காட்டின் ராஜா, விலங்குகளின் தலைவன் என்னும் பெயர்களால் தான் புலி அழைக்கப்படுகிறது.

சம்பாதித்த வழி !

"நீ லட்சாதிபதியானதன் காரணமென்ன?"

"என் மனைவி தான்"

"உன் மனைவி உனக்கு அவ்வளவு துணைபுரிந்தாளா?"

"அப்படியொன்றுமில்லை; அவளால் எவ்வளவு பணம் செலவழிக்க முடியுமென்பதைத் தெரிந்துகொள்ள முயற்சித்தேன்."

அசோகா சுகந்த பாக்குத்தூள்

மண்ணை விற்றுப் பொன்னைப் பெறுவோர்

●

மண்ணையோ அல்லது கல்லையோ புட்டியில் போட்டு அதற்கு படாடோபமாக லேபிள்களை ஒட்டி 'சகல ரோக சஞ்சீவி' என்று விற்பனை செய்யும் தொழிலைப்பற்றி நம் நாட்டில் அறியாதவர்கள் கிடையாது. பிற நாடுகளிலும் பிரமாதமாக நடந்து வந்த இந்தத் தொழில்களின் தகவல்கள் வாசகர்களுக்குச் சுவாரஸ்யமாயிருக்கும்.

ஆஸ்திரேலியா கண்டத்தில் நகரங்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. அநேகமாக மக்கள் சிறு சிறு கிராமங்களில் தான் வசிக்கிறார்கள். இது மட்டுமல்ல. ஒரு கிராமத்திற்கும் மற்றொரு கிராமத்திற்குமுள்ள தூரம் நூறு அல்லது இருநூறு மைல்கள்கூட இருக்கும். அதனால் வாழ்க்கைக்கு தேவையான அநேக பொருள்கள்நகரத்திலிருந்து ரயில்வண்டி மூலமாக வரவேண்டும். அல்லது கிராமத்திற்கு கிராமம் சுற்றுப் பிரயாணஞ் செய்து வரும் 'ஸேல்ஸ்மேன்' கொண்டு வரும் பொருள்களைக்கொண்டு திருப்தியடைய வேண்டும். இந்த நிலைமையில் ஜனங்களை ஏமாற்றிப் பிழைப்பது எவ்வளவு எளிதான காரியமென்று நாம் யூகித்துக்கொள்ளலாம்.

இப்படி கிராமத்திற்கு கிராமம் அநேகவிதமான பொருள்களைக் கிராமவாசிகளுக்குக் கொடுத்து கிராமவாசிகளுக்குத் திருப்தியளிக்கும்'ஸேல்ஸ்மேன்' களைப்பற்றியும், கிராமவாசிகளை ஏமாற்றிய 'ஸேல்ஸ்மேன்' களைப் பற்றியும் வயது முதிர்ந்த ஆஸ்திரேலிய மக்களுக்கு ஞாபகமுண்டு.

சுற்றுப்பிரயாணஞ் செய்யும் 'ஸேல்ஸ்மேன்'களில் எப்போதுமே மருந்து வகைகளை விற்கும் 'ஸேல்ஸ்மேன்'தான் முதல் ஸ்தானம் வகிக்கின்றனர். ஏனென்றால் இந்தத் தொழில் தான் மிகச் சுலபமானது. ஏதாவது வேர்கள், இலைகள், கொடிகள், கிழங்குகள் முதலியவற்றை பொடி, பசை, மாத்திரை ரூபங்களில் தயாரித்து அவற்றிற்கெல்லாம் அசாதாரண சக்தியுண்டு என்று புளுகி பணம் சம்பாதிப்பதைவிட எளிதான தொழில் இவ்வுலகில் வேறென்ன இருக்கிறது?

ஜலதோஷம் முதல் க்ஷய ரோகம் வரையிலுள்ள நோய்களுக்கெல்லாம் தகுதியான

SANFORIZED — **PRESHRUNK**

COTTON - CLOTHING

INDUSTRIAL
UNIFORM &
CIVILIAN

FITTWEL

THE BRAND THAT CARRIES A REPUTATION
FOR SUPERB WORKMANSHIP.
GARMENTS FABRICATED
IN THE

SANFORIZED — **PRESHRUNK**

Products of the world famous

BUCKINGHAM & CARNATIC MILLS

of

MADRAS.

STYLES - DETAILS - AND FASHIONS
ADOPTED ACCORDING TO REQUIREMENTS

QUICK DELIVERIES ASSURED
Keen C I F Quotations against specific enquiries

FITTWEL

750, High Road

TRIPLICANE : : MADRAS - 5

மருந்துகளை ஒரு பெட்டியில் வைத்துக்கொண்டு வீடு வீடாகவும், கிராமம் கிராமமாகவும் சென்றால் வைத்திய வசதிகளொன்றுமில்லாதிருந்த அந்தக்காலத்தில் ஏன் ஏராளமாக விற்பனையாகாது?

ஒரு காலத்தில் இந்தத் தொழிலில்பிரபலம்பெற்றஸ்திரீ கூட ஆஸ்திரேலியாவில் இருந்தாளாம். இவள் மூலிகைகளை விற்பதோடு கை பார்த்துக் குறியும் கூறிக்கொண்டிருந்தாளாம். ஒவ்வொரு வீட்டிலும் ஸ்திரீகளின் கைகளைப் பார்த்து குறி சொல்லிவிட்டு அவரவர்கள் இறந்து போன பெரியோர்கள் அமர உலகிலிருந்து அனுப்பும் ஆசிகளையும் அளித்துவிடுவாள். அநேக ஆஸ்திரேலியர்களுக்கு அவர்கள் தயாரித்த மருந்துகளிலும் அமர உலகத்திலிருந்து கிடைக்கும் செய்திகளிலும் அபார நம்பிக்கையிருந்தது. ஒரு தினம் போலீஸ் அதிகாரி ஒருவர் இவள் விற்பனை செய்து கொண்டிருந்த மாத்திரையைச் சோதித்துப் பார்த்தார். வெளிப்புறத்திலிருந்த சர்க்கரைப் பூச்சை உடைத்தவுடன் உள்ளேயிருந்தது வெறும் ஆட்டுப் புழுக்கைதான்.

மற்றொருவர் மின்சார மாத்திரை, மின்சாரக் களிம்பு என்ற பெயரில் இரு மருந்துகளை விற்பனை செய்து கொண்டிருந்தாராம். இந்த 'ஸேல்ஸ்மேன்' கூறிக்கொண்டிருந்த பிரகாரம் இவ்விரண்டு மருந்துகளால் குணமாகாத நோய்களே கிடையாது என்பதுதான்.

ஒரு காலத்தில் ஒவ்வொரு கிராமத்திலும், ஒவ்வொரு வீட்டிலும் இந்த இரு மருந்துகளையும் வைத்துக் கொண்டிருப்பார்களாம். எந்த மருந்துக் கடையிலும் காலணாவிற்குக் கிடைக்கும் மருந்துகளைப் புட்டியிலடைத்து பத்து ரூபாய் விலைக்கு விற்கும் ஏமாற்றுத் தொழிலுக்கு இது ஒரு சிறந்த உதாரணமாகும்.

ஆஸ்திரேலியாவில் சுற்றுப் பிரயாணஞ் செய்து கொண்டிருந்த ஒரு 'ஸேல்ஸ்மேன்' 'ஆயுளை நீடிக்கும் அமிருதம்' என்ற பெயரில் ஒரு பொருளை விற்றுக் கொண்டிருந்தாராம். இந்த மருந்தை தினந்தோறும் அருந்துவோர்களுக்கு இறப்பே கிடையாதென்று இவர் பிரசாரஞ் செய்து கொண்டிருந்தார். அந்தக்காலத்தில் இந்தமருந்தை, ஒரு புட்டி ஒரு பவுன் விலைக்கு விற்றுக்கொண்டிருந்தாராம். இதற்குக் கட்டுக்கடங்காமல் கிராக்கியிருந்ததால் ஆள் ஒன்றுக்கு மூன்று புட்டிகளுக்கு மேல் கொடுக்க முடியாதென்று இதன் மதிப்பை உயர்த்துவதற்காகப் பிரசாரமுஞ் செய்து வந்தாராம்.

பின்னர் ஒருவர் இதைச் சோதனை செய்து பார்த்ததில் காடுகளில் மண்டிக் கிடக்கும்

ஒருவிதப் புல்லை நீரில் கரைத்துக் கொதிக்க வைத்து புட்டியிலடைத்ததே இந்த 'அமிருதம்' என்று தெரிய வந்தது.

காலில் வழக்கமாக பூட்ஸ் அணிபவர்களுக்கு கால் விரல்களில் ஆணிகள் தோன்றுவது சகஜம். இவை வளருவதால் பொறுக்க முடியாத வேதனை யுண்டாகிறது. இதைக் குணப்படுத்துவதற்கென்று பிரசாரஞ் செய்யும் ஒரு ஏமாற்று மருந்தையும் பழைய ஆஸ்திரேலியா 'ஸேல்ஸ்மென்' வைத்துக் கொண்டிருந்தார்கள். இந்த மருந்தை விற்று கிடைத்த விற்பனை மூலம் இரு 'ஸேல்ஸ்மென்' லக்ஷாதிபதியாயிருக்கிறார்களாம். இவர்கள் விற்ற மருந்து பளபளப்பான 'ஜிகினு'த்தாளில் அடக்கஞ்செய்யப்பட்ட துணி வெளுக்கும் சாதாரண ஒரு சோப்புத்துண்டு தான்.

ஒருநாள் முழுவதும் அவர்கள் ஊரிலுள்ள குப்பைக் கூளங்களில் தேடி ஜரிகைத் தாள்களைச் சேகரிப்பார்கள். பிறகு ஒருநாளோ, அரை நாளோ சோப்பைத் துண்டுகளாக வெட்டி 'ஜிகினு'த்தாளில் அடக்கஞ் செய்தால் 'கால் ஆணி மருந்து' தயாராகி விட்டது!

சனிக்கிழமை தோறும் மாலை வேளையில் தொழிலாளிகள் தங்கள் கூலியைப் பெற்றுக் கொண்டு வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்க வரும் சந்தையில் இந்த 'ஸேல்ஸ்மென்' பாமர மக்கள் ஏமாறும்படி பிரசாரஞ் செய்வார்கள். நூற்றுக்குத் தொண்ணூற்றென்பது பேரும் 'கால் ஆணி' மூலம் அவதிப்படுவோர்களாதலால் இந்த மருந்துக்கு ஏராளமான விற்பனை யிருந்தது.

சொக்காய்கள் மாட்டும் கம்பிகள் முதலிய சில்லறைக் கம்பி சாமான்களை விற்று ஒருவர் ஏராளமாகச் சம்பாதித்தாராம். நல்ல கம்பியில் தயார் செய்ததால், இவருக்கு ஒருவரையும் ஏமாற்ருமலே சம்பாதித்தாரென்ற புகழ் கிடைத்தது. பிறகு விசாரித்ததில் எவரெவருக்கு இந்தக் கம்பி சாமான்கள் விற்றுக்கொண்டிருந்தாரோ அவரவர்கள் வீடுகளிலிருந்த வேலிகளின் கம்பிகளையே திருடி சாமான்களைத் தயாரித்துக் கொண்டிருந்தாரென்று புலப்பட்டது. குதிரைகள் வால் ரோமத்தை வெட்டி 'பிரஷ்'கள் செய்து அந்தக் குதிரைகளின் சொந்தக்காரர்களுக்கே விற்றுக்கொண்டிருந்த 'ஸேல்ஸ் மேனும்' ஆஸ்திரேலியாவிலிருந்தாராம்.

பொதுமக்களை ஏமாற்றுவது, அவர்களுக்குப் பொருள்களை விற்பதனுல் மட்டுமல்ல. அவர்களை அதிகமாகப் புகழ்ந்தும் நாட்டிலுள்ள பணக்காரர்களுக்கும் பிரமுகர்களுக்கும் அவர்கள் சமமென்ற நினைப்பை வரச்செய்தும், அவர்களிடமிருந்து பணத்தைப் பிடுங்கலா

A. K. SHERIFF

5/7, KALMANDAPAM ROAD

Rayapuram, Madras-13.

MANUFACTURER OF

READY MADE DRESSES
FIRST - CLASS CLOTHES
MADE OF SUPERIOR B. & C.
MATERIALS

Prices Moderate

C. C. JACOB

Tailors, Dress Manufacturers & Contractors
(Specialists in B & C Quality Textile Dresses)

10, Thambu Chetty St, Madras - 1.

★

For Readymade garments fabricated out of India's best clothing materials
—B. & C. Mills cloths

Contact us for your requirements.

ஞர்கள். ஆஸ்திரேலியாவி லுள்ள வெள்ளையர்களெல்லாம் பெரும்பாலோர் இங்கிலாந்தி லிருந்து வந்தவர்களே. ஒருவர் இப்படி இங்கிலாந்திலிருந்து முதல் முதலாக வந்தவர்களின் வரலாறுகளைப் பற்றிப் புத்தகம் வெளியிடுவதாகக் கூறி அதற்கு சொற்பத் தொகையான பத்து அல்லது இருபது பவுன்களை அநேகரிடமிருந்து பெற்றுக் கொண்டிருந்தாராம். ஐந்தாறு வருஷங்களாக இந்த வேலையி லீடுபட்டு அநேக கிராமங்களுக் குச் சென்று சுமாராக வசதி யுள்ள அநேகரிடமிருந்து பணத் தைப் பறித்தால் ஏராளமான சம்பாத்தியமாகி விடுமல்லவா? புத்தகம் வரப்போகிறது; அதில் தங்களைப் பற்றிய தகவலைப் படிக்கலாமென்று எதிர்பார்த் துக் கொண்டிருந்தவர்கள் அவர்கள் ஆயுள் பூராவும் மனப்பால் குடித்துக்கொண்டு தானிருந்தார்களென்று கூற வும் வேண்டுமா?

புத்தகம் படிப்பதிலும் ஒரு சாதனை

நாம் தினந்தோறும் புத்தகப் படிப்பிற்காக கால் மணி நேரஞ் செலவிடுவதா அல்லது அரைமணி நேரஞ் செலவிடு வதா என்று தயங்கும் இக் காலத்தில் புத்தகப் படிப்புக் கலை நிபுணர்களைப் பற்றியுள்ள தகவல்களைத் தெரிந்துகொள்வது வியப்பாயிருக்கும்.

"அரேபியாவின் லாரன்ஸ்" என்ற புகழ்பெற்ற ஆங்கிலே யர் தினந்தோறும் இருபது நூல்கள் வரையிலும், இவர் கல் லூரியில் பயிற்சி பெற்றுக்கொண்டிருந்த காலத்தில் வாசித் துக் கொண்டிருந்தாராம். மிகச் சிறந்த எழுத்தாளர்களில் அநேகர் புத்தகங்களை விரைவில் படிப்பதில் நிபுணத்துவம் வாய்ந்தவர்கள். சுமார் நானூறு பக்கங்கள் கொண்ட ஒரு புத்தகத்தை ஒரு மணி நேரத்தில் படித்து முடிக்கச் சக்திவாய்ந் தவர்கள் எத்தனையோ பேர் இருந்திருக்கிறார்கள். இப்படி விரைவில் புத்தகம் படிப்பதென்றால் மேல்நோக்காக பக்கங் களை மட்டும் புரட்டிக்கொண்டு போவதென்று அர்த்தமல்ல. எழுதும் நடையிலிருந்து கருத்துக்களை முழுவதும் அறிந்து கொள்வதோடு முக்கியமான பாகங்களையும் அழகான வச னத் தொகுதிகளையும் மனப்பாடமாக ஒப்பிப்பார்கள்.

புத்தகங்களை வெகு விரைவில் படிப்பதுபோன்ற ஒரு அசாதாரண சக்தி தான் படித்தவற்றை ஞாபகம் வைத்துக் கொண்டிருப்பதும். மெக்காலே என்ற பிரபல ஆங்கில எழுத் தாளர் இளம் வயதிலேயே அநேக ஆங்கிலக் கவிதைகளை மனப்பாடமாக ஒப்பிப்பாராம். குழந்தைப் பருவத்தில் இம் மாதிரி ஞாபக சக்தி மிகவும் அசாதாரணம் தான்.

NANJUNDAN & CO.,

PROP. C. NANJUNDAN (BOOCHI)

256, RAJA STREET COIMBATORE

Post Box 189 Grams: "BOOCHI" Phone { Res: 603 / Office At 657

Agents For:

Complete Range of Textool Textile Spinning Machinery

Blow Room Machinery, Carding Engines, Speed Frames, Ring Spinning Frames, Reeling Machines & Bundling Presses.

Manufactured by

TEXTOOL COMPANY LIMITED

COIMBATORE.

FOR

Madras, Andhra, Mysore, Travancore and Cochin States

AND

SOLE DISTRIBUTORS

FOR

MESSRS SKINS & LEATHERS LTD.

Manufacturers of

Calf Skins for Roller Covering & Aprons for High Draft Spinning.

18752

Edited, printed and published by E. Balasubramaniam at the K. M. S. Press, 1-C 17, Dinroze Estate, Mount Road, Madras. Associate Editor :- N. S. Mani.

BINNY & Co (MADRAS) LTD.

THE BANGALORE WOOLLEN COTTON AND SILK MILLS COMPANY LIMITED

BANGALORE

REGISTERED No 84359

AGENTS SECRETARIES & TREASURERS

USE **BINNY'S COTSWOL**

For year - round comfort
Available in smart and attractive colours
An excellent material to keep you comfortable in any weather.

AVAILABLE WITH ALL GOOD CLOTH DEALERS.

Manufactured by :—

**The Bangalore Woollen Cotton & Silk Mills Co., Ltd.,
Bangalore City.**

Distributors :— **H. A. R. MOHAMED & SONS,**
6 - A, Godown Street, MADRAS-1.

WOMEN OF TASTE ALWAYS INSIST ON

BINNY'S

Pure Spun Silk & Georgette Sarees

In attractive GOLD BORDERS and shades

Manufactured by :

**The Bangalore Woollen Cotton and
Silk Mills Co., Ltd., Bangalore City.**

Distributors :

H. A. R. Mohamed & Sons

No. 6–A, GODOWN STREET,

Madras-1.

Colourful

BINNY'S FABRICS

The most suitable material for the tropics. These lovely colourful fabrics in beautiful designs such as seersucker, plain and printed Linen, Lustalin Shirtings, Hanava Suitings, etc., are available at our Show Rooms.

VENKATESH VASTRALAYA

Phone: 4688

Retail Show Room :
2, THAMBU CHETTY STREET, MADRAS-1.